விலை ரூபா 50 பக்கங்கள் 100

# உதயன்

சுடர் 31 கதிர் 050 வள்ளுவர் ஆண்டு 2047 தை 01, வெள்ளிக்கிழமை 15.01.2016

## வித்தியா வழக்கு மூன்று பேரடங்கிய நீதியரசர்கள் முன்

கொழும்பு, ஜன. 15
கூட்டு வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்ட புங்குடுதீவு மாணவி வித்தியாவின் வழக்கு விசாரணை மூவர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விரைவில் இடம்பெறும் என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.
அரச தகவல் திணைக்களத் பக். 23

முச்சந்தி முரளி



நல்ல முடிவாப் பாத்து சொல்லிப்போட்டுப் போங்கோ...

# வலி. வடக்கு விடுவிப்பின் இறுதி முடிவு இன்று

## ஜனாதிபதி மைத்திரி தலைமையில் பலாலியில் உயர்மட்டக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜனவரி 15
25 வருடங்களுக்கு மேலாகப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள வலி.வடக்கு மக்களின் காணிகள் விடுவிப்புத் தொடர்பில் பலாலியில் இன்று இடம்பெறும் ஜனாதிபதி மைத்திரிபால தலைமையிலான உயர்மட்டக் கலந்துரையாடலில் இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.
உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள எவ்வளவு காணிகளை விடுவிக்கக்கூடியதாக இருக்கும் என்பது தொடர்பிலான இறுதி முடிவு இன்று எடுக்கப்படவுள்ள பக். 24




## தேசியப் பொங்கல் விழா இன்று யாழ்ப்பாணத்தில்

### மைத்திரி, ரணில், சந்திரிகா பங்கேற்பர்

யாழ்ப்பாணம், ஜன. 15
ஐந்து வருடங்களின் பின்னர் தேசிய தைப்பொங்கல் விழா யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெறவுள்ளது.
ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க ஆகியோரின் பங் பக். 23

## சொந்த இடங்களில் பொங்கலை கொண்டாடும் நிலை வேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள்

கொழும்பு, ஜன. 15
சொந்த இடங்களிலும், தங்கள் உறவுகளுடனும் தைப்பொங்கலைக் கொண்டாட முடியாத நிலையிலுள்ள எமது மக்களின் நிலை வெகு விரைவில் மாறவேண்டும் என்று, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் விடுத்துள்ள தைப்பொங்கல் வாழ்த்துச் பக். 23

## மன்னார் ஆயர் பதவி துறப்பை ஏற்றுக்கொண்டார் பாப்பரசர்

### புதிய ஆயர் நியமிக்கப்படும் வரை பரிபாலகராக் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

மன்னார், ஜன 15
மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் பதவி துறப்பைப் பாப்பரசர் பிரான்சிஸ் ஏற்றுக்கொண்டுள்ளதையடுத்து, மன்னார் மறைமாவட்டத்தின் புதிய அப்போஸ் தலிக்க பக். 24

## உறுதியான முடிவை இன்று எமக்குத் தரவேண்டும் அரசு

### வலி. வடக்கு மக்கள் சார்பில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 15
இதுவரை காலமும் பட்ட துன்பங்கள் போதும். இனியாவது நிம்மதியாக இருக்க விடுங்கள். மக்களின் வாழிடங்களை முழுமையாகக் கையளிப்பதற்கான அறிவிப்பை, ஜனாதிபதியும் – பிரதமரும் இன்றைய தினம் வெளியிடவேண்டும்.
இவ்வாறு வலி.வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபால சிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி மைத்திரிபாலவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் வலி. பக். 24

## ஐ.நா. தீர்மானத்தை இலங்கை முழுமையாகச் செயற்படுத்தும்

### பிரிட்டன் நம்பிக்கை

கொழும்பு, ஜன. 15
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வுக்கு முன்பாக, கடந்த ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை முழுமையாக பக். 24

## 93 இந்திய மீனவர்களை விடுவிக்க அரசு பணிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 15
இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் இலங்கைச் சிறை பக். 24

## ஆயிரத்து 500 பொலிஸார் ஜனாதிபதிக்குப் பாதுகாப்பு



யாழ்ப்பாணம், ஜன. 15
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வருகைக்காக யாழ். குடாநாட்டில் ஆயிரத்து 500 பொலிஸார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயலத் பக். 24




noolaham.org | aavanaham.org



யாழ். குடாநாட்டில் தைப்பொங்கல் வியாபாரம் நேற்று களை கட்டிக் காணப்பட்டது. தைத்திருநாளைக் கொண்டாடும் முகமாக மக்கள் புதுப்பானை மற்றும் பொங்கல் பொருள்களை கொள்வனவு செய்வதில் முண்டியடித்து அதிக ஆர்வம் காட்டினர். இதன் காரணத்தால் குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மக்களின் நெரிசல் அதிகரித்துக் காணப்பட்டது. யாழ். நகர் மற்றும் திருநெல்வேலி, மருதனார்மடம், சுன்னாகம், சங்கானை, சாவகச்சேரி, கொடிகாமம் போன்ற சந்தைகளில் மக்கள் அதிகளவில் கூடினர். இஞ்சி, மஞ்சள், இனிப்பு வகைகள், அகப்பை, பானைகள் உட்பட மற்றும் பொங்கல் பொருள்களின் வியாபாரம் இப்பகுதிகளில் சூடு பிடித்துக் காணப்பட்டது. (ற-ஜ-17)

# வவுனியா செட்டிகுளத்தில் 75 ஏக்கரிலேயே விவசாயம்

## ஏனையவை காடுகளாகியுள்ளன என விவசாயிகள் சுட்டிக்காட்டு

வவுனியா,ஜன.15

ஆயிரத்து 500 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கையை மேற்கொண்ட வவுனியா செட்டிகுளப் பகுதி விவசாயிகள் தற்போது வெறும் 75 ஏக்கர் பயிர் செய்கையை மேற்கொள்கின்றனர். மிகுதி அனைத்தும் காடுகளாக்கப்பட்டுள்ளன- என்று அந்த விவசாயிகள் தெரிவித்தனர்.

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பிரதேச அடிப்படையிலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இதுகுறித்து அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது-

1965 ஆம் ஆண்டு படித்த வாலிபர் திட்டத்தில செட்டிகுளம் பகுதியில் ஆயிரத்து 500 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயிகள் தங்களுடைய நெற்பயிர்ச் செய்கையை மேற்கொண்டனர். அதன் பின்னர் கடந்த காலப் போரின் போது அது 600 ஏக்கராக மாற்றம் பெற் றது. போர் முடிவடைந்து தற் போது வெறும் 75 ஏக்கர் நிலப் பரப்பிலேயே நெற்பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

விவசாய நிலங்கள் அனைத்தும் காடுகளாக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதன் போது பதிலளித்த குறித்த திணைக்களத்தின் அதிகாரி, ஒதுக்கப்படும் நிதியானது வயல்களுக்கு நீர் பாய்சுவதற்கே போதுமானதாக இருக்கின்றது. இவ்வாறு குறித்த காடுகளை அகற்றி நிலங்களை பயிர்ச் செய்கைக்கு ஏற்ற வகையில் பண்படுத்துவதற்கு அதற்கான நிதி ஒதுக்கப்பட வேண்டும் - என்றார். (ற-ஜ-21)

# விதவைப் பெண்களைத் தாக்கியமை மனிதாபிமானம் அற்ற செயற்பாடு

## சாந்தி சிறீஸ்காந்தராசா எம்.பி. கண்டனம்

முல்லைத்தீவு, ஜன.15

விதவைப் பெண்கள் மீது நடத்தப்பட்ட மனிதாபிமானம் அற்ற தாக்குதல்களால் தனிநபர் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகியுள்ளாகியுள்ளது. தமிழ் மக்களின் பாதுகாப்பு பற்றியும் ஐயமெழுந்துள்ளது - இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்காந்தராசா தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மன்னகுளம் கிராமத்தில், விறகு வெட்டித் தமது வாழ்வாதாரத்தை நடத்தும் நான்கு பெண்கள் வனவள பாதுகாப்புத்திணைக்களத்தைச் சேர்ந்த ஆறு அதிகாரிகளால் தாக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்தச் சம்பவம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இந்தச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாகவும், இந்த விடயம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கவும், தாக்குதலை மேற்கொண்ட வனவள பாதுகாப்புப் பிரிவினர் நீதிமன்றத்தினூடாக விசாரிக்கப்பட்டு தண்டனை வழங்க வேண்டும் எனவும்,

கடந்த போரானது தமிழ் மக்கள் மத்தியில் 45 ஆயிரத்துக்கும் அதிகமான விதவைப் பெண்களை உருவாக்கியுள்ள நிலையில், அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டுத்திட்டங்களை ஏற்படுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-21,ரி7)

# மகளுடைய பட்டமளிப்பால் தந்தைக்கு கிடைத்தது பிணை

யாழ்ப்பாணம், ஜன.15

மகளின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக விளக்கமறியலில் இருந்த தந்தை ஒருவருக்கு யாழ்.மேல்நீதிமன்று நேற்றுப் பிணை வழங்கியுள்ளது.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த ஜூன் மாதம் சகோதரர்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடு முற்றியதால், அது கத்தியால் குத்திக் காயம் விளைவிக்கப்பட்டது. அதனால் ஒருவர் காயமடைந்தார்.

கத்தியால் குத்திய குற்றச்சாட்டில் சகோதரர் கைது செய்யப்பட்டார். அவர் மீது கொலை முயற்சிக் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டது. அதனால் அவர் ஐந்தரை மாதங்களாக விளக்கமறியலில் இருந்து வருகிறார்.

இந்த நிலையில், அடுத்த வாரம் யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது. விளக்கமறியலில் உள்ளவரின் மகளும் அதில் பட்டம் பெறுகிறார்.

அதனால் தந்தையாரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி யாழ்.மேல்நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதனைப் பரிசீலித்த நீதிவான் மா.இளஞ்செழியன், பட்டமளிப்பில் தந்தை கலந்து கொள்வதைக் கவனத்தில் கொண்டு அவரைப் பிணையில் விடுவிக்க அனுமதி வழங்கினார்.

அதன்படி அவர் 15 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தலா 2 ஆள்பிணைகளிலும் விடுவிக்க நீதிமன்று அனுமதி வழங்கியது. தவிர மாத இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என்றும் நீதிமன்று நிபந்தனை விதித்தது. (ற-ஜ-4)

# சாரதிகளுக்கு அபராதம்

சாவகச்சேரி,ஜன.15

பாரவூர்தியின் பின் கதவில் ஆள்களை ஏற்றிச் சென்ற சாரதிக்கும், சமிக்ஞை விளக்கு இல்லாத நிலையில் வாகனத்தைச் செலுத்திய சாரதிக்கும் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த நீதிவான், சாரதிகளை எச்சரிக்கை செய்து அபராதம் விதித்தார். இதே வேளை காப்புறுதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ற-ஜ-9)

# போதைப் பொருளுடன் கைதானவருக்கு மறியல்

யாழ்ப்பாணம்,ஜன.15

ஒரு கிலோ (மாவா) போதைப் பொருள் பைக்கற்றுடன் கைது செய்யப்பட்ட நபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிவான் சதீஸ்குமார் உத்தரவிட்டுள்ளார்.

யாழ். ஐந்து சந்திப்பகுதிக்கு அண்மித்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்.கொட்டடிப் பகுதியைச் சேர்ந்த ஓட்டோ சாரதியான இவர், ஐந்து சந்திப் பகுதியில் 1 கிலோ நிறையுடைய போதைப் பாக்கு பைக்கற்றுக்களை ஓட்டோவில் தன்வசம் வைத்திருந்த போது, இரவு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபரை நேற்று வியாழக்கிழமை யாழ். நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தியபோது, குறித்த நபரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ற-ஜ-106)

# நாளை தைப்பொங்கல் எங்களை விடுவியுங்கள்

## நீதிமன்றில் கண்ணீருடன் இந்திய மீனவர்கள் மன்றாட்டம்

யாழ்ப்பாணம், ஜன.15

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டுக்காக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் தம்மை தைப் பொங்கலுக்கு வீடு செல்ல அனுமதிக்க வேண்டும் என்று கண்ணீர் விட்டவாறு நீதிமன்றில் கோரிக்கை விடுத்தனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் 102 பேரும் தைப் பொங்கலுக்கு முன்னர் விடுவிக்கப்படுவார்கள் என்று கடற்றொழில், நீரியல் வளத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருந்தார். எனினும் குறித்த இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் தொடர்பான வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்போது பதில் நீதீவான், சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து மீனவர்களை விடுவிப்பதற்கான உத்தரவு கிடைக்காமையால் மீண்டும் மீனவர்கள் விளக்கமறியலில் வைக்கப்படுகின்றனர் என்று தெரிவித்தார்.

அதன்போது கண்ணீர் விட்டு அழுத மீனவர்கள், நாளை (இன்று) தைப்பொங்கல். எங்களை விடுங்கோ. நாங்கள் மனைவி, பிள்ளைகளுடன் பொங்கல் கொண்டாட வேண்டும் என்று மன்றாட்டமாகக் கோரினர். (ற-ஜ-107)

# பறவைகள் மூலமாக கொழும்புக்கு கடிதம்

கொழும்பு, ஜன.15

பண்டைய கடிதப் பரிமாற்றம் மற்றும் தொடர்பாடல் முறைமையின் ஊடாக அனுராதபுரத்திலிருந்து நேற்று இரண்டேகால் மணித்தியாலங்களில் கொழும்புக்குக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆரம்பகாலத்தில் கடிதப் பரிமாற்றத்துக்கு பறவைகளைப் பயன்படுத்தியமை தொடர்பிலான நிகழ்வொன்று நேற்று அனுராதபுரம் டி.எஸ். சேனாநாயக்க ஆரம்ப கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வானது பாடசாலை மாணவர்கள் பறவைகளைக் கொண்டு கடிதப் பரிமாற்றம் எவ்வாறு செய்வது என்பது தொடர்பில் தெளிவுபடுத்துவதாகவே அமைந்திருந்தது. இந்த நடவடிக்கைக்காக வத்தளைப் பிரதேசத்தைச் சேர்ந்த லெனரோஸ் என்பவரின் 12 பறவைகள் பயன்படுத்தப் பட்டிருந்தன.

பாடசாலை அதிபரும் மாணவர்களும், கடிதத்தில் இரகசியமான விடயமொன்றை எழுதிப் பறவைகளின் கால்களில் கட்டிப் பறக்க விட்டுள்ளனர். இந்தத் தகவல்களை பார்ப்பதற்காக அனுராதபுரத்தைச் சேர்ந்த ஒருவர் ஏற்கனவே கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார். இந்தநிலையில் நேற்று காலை 8.26 மணிக்கு புறப்பட்ட பறவைகள் முற்பகல் 10.45 அளவில் கொழும்பு வத்தளை-ஹெந்தலை சந்திப் பிரதேசத்தைச் சென்றடைந்துள்ளன.

பறவைகளின் நினைவாற்றலையும் பண்டையக் கடிதப் பரிமாற்று முறைகளை நினைவுபடுத்தவும் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்றும், எதிர்காலத்தில் நாட்டின் சமாதானத்தை வலியுறுத்தி வடக்கிலிருந்து புறா ஒன்றின் மூலம் தெற்குக்கு சமாதான செய்தி ஒன்றை அனுப்பி வைக்கத் திட்டமிட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணா குழுவினருடனான தொடர்பால் ரவிராஜ் கொலைத் தகவலை மறைத்தேன்

## *அரச தரப்புச் சாட்சியாக மாறியவர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜன. 15
கருணா குழுவினருடன் தொடர்புகளை வைத்திருந்ததாலேயே, நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கொலை தொடர்பான தகவல்களை மறைத்ததாக, அரச தரப்புச் சாட்சியாக மாறியுள்ள பிரித்திவிராஜ் தெரிவித்துள்ளார்.

ரவிராஜ் கொலை வழக்கு விசாரணைகள், கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ரவிராஜ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரான மன்னம்பேரி பிரித்திவிராஜ் அரசதரப்புச் சாட்சியாளராக மாறியுள்ளார். இவர் கடந்த காலத்தில் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றியவர். அவர், இந்தக் கொலைக்குக் கங்காராம வீதியில் உள்ள லோன்றிவத்த கடற்படைப் புலனாய்வு முகாமில்தான் திட்டமிடப்பட்டதாக ஏற்கனவே சாட்சியம் அளித்திருந்தார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் நடந்த விசாரணையில், அரசதரப்பு சாட்சியின் நம்பகத்தன்மை குறித்து எதிர்த்தரப்புச் சட்டவாளர் கேள்வி எழுப்பியதுடன், அவரைக் குறுக்கு விசாரணை செய்தார்.

இதன்போது எதிர்த்தரப்பு சட்டவாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த பிரித்திவிராஜ், அந்தக் காலகட்டத்தில் கருணா குழுவினருடன் தொடர்புகள் வைத்திருந்ததால் ரவிராஜ் கொலை தொடர்பான தகவல்களை மறைத்ததாகக் குறிப்பிட்டார்.

(த-5)

# மானிட அன்பு சகலரிடமும் பொங்கிப் பிரவாகிக்கட்டும்

## *ஜனாதிபதி பொங்கல் வாழ்த்து*

யாழ்ப்பாணம், ஜன. 15
பொங்கல் பானையில் பால் பொங்கிப் பிரவாகிப்பது போன்று, மற்றவர் மீதான மானிட அன்பு ஒவ்வொருவரிலிருந்தும் பொங்கிப் பிரவாகிக்கட்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இன்றைய தைப்பொங்கல் பண்டிகையையொட்டி அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

இயற்கைக்கும் மனிதருக்கும் இடையிலான வலிமையைக் குறிக்கும் ஒரு உயர்ந்தபண்டிகையே தைப்பொங்கல். மானிட பரிணாமக் காலம் தொடக்கம் விவசாய சமூகத்தினர் இத்தகைய பண்டிகை நிகழ்வுகளை ஐக்கியம் மற்றும் பரஸ்பர மதிப்புணர்வுடனும் பொதுச் சமூகப் பிரமாணங்களைப் பேணியும் கொண்டாடி வந்துள்ளனர். இயற்கையைப் புனிதமாக மதித்து சமூக நல்லிணக்கத்துக்கும் சமூக முன்னேற்றத்துக்கும் உதவும் பாரம்பரிய மரபுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது எம்மீதுள்ள பொறுப்பு.

தைப்பொங்கல் பண்டிகை ஆயிரம் வருடங்களுக்கும் மேலாக எத்தகைய மாற்றங்களும் திரிபுகளுமின்றி பழங்காலப் பண்பு கெடாமல் தொடருவது சிறப்பம்சமாகும்-என்றுள்ளது.

(த-4)

**வாடகைக்கு**
நல்லூர்ப்பகுதியில் அனெக்ஸ் (முற்றிலும் தனியானது) தனிஅறை, இணைந்த குளியலறை, சமையலறை
2 பெண்கள் வசிக்கலாம்.
தொடர்புக்கு: 071 4620 806

**விற்பனைக்கு**
02 மாதம் பாவித்த மொபைல் (Samsung Grand Prime 4G), Hp கலர் பிறிண்டர் விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு: 078 5210 573

## கோட்டை ரயில் நிலையத்திலும் இன்று பொங்கல்

யாழ்ப்பாணம், ஜன. 15
மூன்று தசாப்தங்களின் பின்னர், கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில், தைப் பொங்கல் விழா இடம்பெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு, ரயில் நிலைய அதிபர் சம்பிக்கேவின் வழிகாட்டலில் இந்தப் பொங் கல் விழா இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

போர் ஆரம்பமாவதற்கு முன்னர் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் பொங்கல் விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வந்தது. பின்னர் கடந்த மூன்று தசாப்தங்களாக நிறுத்தப்பட்டிருந்தது. இந்த ஆண்டு மீண்டும் பொங்கல் விழா கொண்டாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-5)

# திருட்டுக் குற்றச்சாட்டில் மூன்று மாணவர்கள் கைது

வடமராட்சி, ஜன.15
உடுப்பிட்டிப் பகுதியில் கைத்தொலைபேசிகள் விற்பனை செய்யும் கடையொன்றை உடைத்து இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் பாடசாலை மாணவர்கள் மூவர் நேற்று வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

உடுப்பிட்டி வன்னிச்சை அம்மன் கோயிலுக்கு அண்மையில் உள்ள கைத்தொலைபேசி மற்றும் இலத்திரனியல் பொருள்கள் விற்பனை செய்யும் கடையொன்று கடந்த வருடம் ஜூன் மாதம் உடைக்கப்பட்டு பொருள்கள் களவாடப்பட்டிருந்தன. இரவு நேரம் கடையை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த கைத்தொலைபேசிகள் உட்பட இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடியிருந்தனர். இது தொடர்பில் கடை உரிமையாளர் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்து, வல்வெட்டித்துறைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை நடத்தி வந்தனர். நீண்ட விசாரணையின் பின்னர் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மூன்று பாடசாலை மாணவர்கள் நேற்றைய தினம் வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் வல்வெட்டி பகுதியைச் சேர்ந்தவர் எனவும், ஒருவர் கம்பர்மலையைச் சேர்ந்தவர் என்றும் பிரபல பாடசாலையொன்றில் சாதாரண தரத்தில் கல்வி பயிலும் 16 வயதுடைய மாணவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து நேற்று மாலை அவர்களின் வீடுகளுக்குச் சென்ற பொலிஸார் அவரவர் வீட்டில் வைத்து மூவரையும் கைது செய்ததாகத் தெரிவித்தனர். இவர்களிடம் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டது.

(த-109)

முன்பள்ளி சிறார்களை
கிக்விசன் கமராவை பொருத்தி பாதுகாப்போம்...
முன்பள்ளிகளுக்கான விசேட விலைக்கழிவு!
உடன் நாடுங்கள் 0212217994
கிக்விசன்/HIKVISION
World No.1 CCTV Cameras
By asmag Germany/Frankfurt
உலகின் முதலதரப்படுத்தப்பட்ட சிசிரிவி கமராகள்
HIKVISION
50ற்கு மேற்பட்ட கமரா வகைகளுடன் உங்கள் கனவுகளை நனவாக்குகின்றோம்!
மீற்றருக்கு பேரம் பேசாதீர்கள்! கேளுங்கள் - பாவனையாளர்களே! பொருத்துங்கள் - ஆட்டோ ஓட்டுனர்களே!
லிங்/LINK ஆட்டோ மீற்றர்கள்
இலங்கையில் NO.1
*ஜனாதிபதி விருதுபெற்றது
*ISO சான்றிதழ் பெற்ற தொழிசாலையில் தயாரிக்கப்பட்டது
*TOS LANKA PVL விருது பெற்றது......
சன்சக்தி ரேடர்ஸ்
கிக்விசன் வடமாகண ஏக முகவர்
இல 651, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி 0212217994 கை.தொ. 0775930335
www.sunsakthy.com Email info@sunsakthy.com

# அலுமாரிகள் மட்டுமே சீல்

## *என்கிறார் இராணுவப் பேச்சாளர்*

கொழும்பு, ஜன.15
கிரித்தலே இராணுவ முகாமிலுள்ள புலனாய்வுப் பிரிவின் அலுவலகம் இராணுவத்தினால் சீல் வைக்கப்படவில்லை. அந்த அலுவலகத்திலுள்ள அலுமாரிகளுக்கே சீல் வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தெரிவித்துள்ளார் இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயனாத் ஜயவீர.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

காணாமற்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் சம்பந்தப்பட்ட சில ஆவணங்கள் கிரித்தலே முகாமில் இருந்தபடியால் அந்த முகாமின் புலனாய்வுப் பிரிவிற்கு சீல் வைக்கப்பட்டதாக வெளியான தகவல் குறித்து ஊடகவியலாளர்களால் இதன்போது கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த இராணுவ ஊடகப் பேச்சாளர், நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய கிரித்தலே இராணுவ முகாமிலுள்ள புலனாய்வுப் பிரிவு அலுவலகத்திற்கு இராணுவம் சென்றது.

குறித்த அலுவலகத்தில் ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் வழக்குடன் தொடர்புடைய சில ஆவணங்கள் உள்ளபடியால் அந்த அலுவலகத்திலுள்ள சில அலுமாரிகளுக்கே சீல் வைப்பதற்கு இராணுவம் நடவடிக்கை எடுத்தது.

குறித்த ஆவணங்களை விரைவில் நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான கடப்பாட்டையும், அவசரத்தையும் இராணுவம் கொண்டிருப்பதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எனவே இந்த நடவடிக்கையே சீல் வைக்கப்பட்டது என்று ஊடகங்களில் வெளியாகின. இது முற்றிலும் தவறான செய்தி - என்றார்.

(வ-5)

அனைவருக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
நிச்சயமாக தொழிலை இலக்காக கொண்ட பாடநெறி!
My Hope Group
ஒரு வருட தாதியர் பயிற்சி நெறி
தகைமை : க.பொ.த. சா.த 6 பாடங்கள் சித்தி
(இம்முறை O/L எழுதியவர்களும் விண்ணப்பிக்கலாம்)
ஆய்வுகூட உதவியாளர் பாடநெறி
தகைமை : க.பொ.த. உ.தரம் சித்தி
(6 மாத நிறுவனத்தின் பயிற்சிக்கு பின் வேலைக்கு சேர்த்துக்கொள்ளப்படுவீர்கள்)
மருந்தாளர் பாடநெறி
அரச வைத்திய வித்தியாலயத்தினால் நடத்தப்படும்.
வெளிவாரி மருந்தாளர் பரீட்சைக்கு வகுப்புக்கள் நடைபெறும்.
Hot line : 0710 770 770
யாழ்ப்பாணம்
இல 323, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.071-8722350, 0718-722 353
நடத்துவர் ( வைத்தியர் ராஜவேலாயுதம்
ஞாயிறு தினங்களில் காலை 9.00 முதல் 4.00வரை
Registered Education Institute in the republic of Sri Lanka
பிரதான காரியாலயம்
அய்வா
சர்வதேச தாதியர் பாடசாலை
இல:28 பார் வீதி, மட்டக்களப்பு
தொ.பே : 021 221 7411
NTS
P.V. 91973
வவுனியா
இல. 36/1, 88/1, 2ம், குறுக்கு வீதி, வவுனியா.
தொ.பே. 0718-722 351
0718-722 353
மட்டக்களப்பு
இல:28 பார் வீதி, மட்டக்களப்பு
தொ.பே.0718-722 352
0718-722 353
தொலைபேசி குறுந்தகவல் மூலம் விண்ணப்பத்தைப் பெறலாம். 071 077 0770
www.nursingiva.com
இல. P 07/0096

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலைவாய்ப்பு** 076 541 2260

இலங்கையில் அமைந்துள்ள நிறுவனங்களுக்குப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆண்/ பெண்கள் தேவை. வயது 18-55 சம்பளம் OTயுடன் 35,000/= சாப்பாடு இலவசம். தேவைப்படும் பிரதேசங்கள். மன்னார், வவுனியா, திருகோணமலை மற்றும் சகல பிரதேசங்களுக்கும் வருகை தரும் நாளில் சேர்க்கப்படுவீர்கள்.

*145/ 161 Peoples Park, Pittokodduwa.*

(சி/28385) (8,15,18)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

BAHIRA NO - 1 புறொயிலர் குஞ்சுகள் மிகக் குறைந்த விலையில் 16.01.2016 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

ராஜீவ் நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
தொடர்பு : 077 609 0926

# வங்கி முகாமையாளர் பொலிஸாரால் கைது

## நீதிமன்றப் பிடியாணைக்கு அமைய

யாழ்ப்பாணம், ஜன. 15

நீதிமன்ற அழைப்பை அசண்டையீனம் செய்துவந்த யாழ்.நகர வங்கி முகாமையாளருக்கு யாழ்.நீதிமன்று பிடியாணை பிறப்பித்துள்ளது. இதனால் அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

காசோலை மோசடி தொடர்பான வழக்கு ஒன்றின் விசாரணைக்காக யாழ்.நகரிலுள்ள தனியார் வங்கியின் முகாமையாளரை நீதிமன்றுக்கு வருமாறு நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.

குறித்த காசோலை மோசடி தொடர்பாக சாட்சிய மளிக்கவே அவர் அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் அவர் நீதிமன்றுக்குச் செல்லாது உதவி முகாமையாளரை நீதிமன்றுக்கு அனுப்பியுள்ளார். வழக்குத் தொடர்பான சரியான தகவல்களை அவரும் நீதிமன்றில் உரிய முறையில் முன்வைத்திருக்கவில்லை. இதனால் வழக்கு விசாரணையை இடைநிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனையடுத்து வங்கி முகாமையாளரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டிருந்தார்.

இதன்படி குறித்த முகாமையாளர் கைது செய்யப்பட்டு நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரைக் கடுமையாக எச்சரித்த நீதிமன்று ஆயிரம் ரூபா சொந்தப் பிணையில் செல்லப் பணித்தது.

(த-4-103)

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லக்கினத்தில் செவ்வாய் உள்ள 1979 இல் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு:
021 7210811, 071 7674 886

**பணியாள் தேவை** தொடர்பு: 077 1974875

தங்கி நின்று வேலை புரியக்கூடிய உதவியாளர் தேவை. ஆண்/ பெண்

**படி லொறி விற்பனைக்கு**

டோயோடா டவுன் ஏஸ், 8½ அடி எல்மினியம் புல்பொடி, 1996, GN XXXX, ஓட்டோகியர் 1,275,000/=

076 867 8609, 077 227 8609

**வேலைவாய்ப்பு**

மானிப்பாயில் அமைந்துள்ள சிறுவர் இல்லத்துக்கு

01. ஆண் பராமரிப்பாளர்
02. தாய் போல் ஆண் சிறுவர்களைப் பராமரிக்கக் கூடிய தாய் ஒருவர்.
03. கணினி தேர்ச்சி பெற்ற பெண் கணக்காளர்
04. சமையல் வேலை செய்யக்கூடிய ஆண் ஒருவரும் பெண் உதவியாளர் ஒருவரும் தேவை.

சுயவிபரக்கோவையுடன் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி
Chairman,
Elim Childrens & Voluntary Home
Memorial School Lane, Manipay.

குறிப்பு: நேரடியாகக் கையளிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஒட்டப்பட்டு பதிவுத் தபாலில் வரும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.) நிர்வாகம்.

**வீடு வளவு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அண்மையில் K.K.S வீதிக்கு மிகமிக அருகில் 4அறைகள், 2ஹோல், ஒரு குளியலறை, ஒரு சமையலறை, கராஜ், கிணற்றுடன்கூடிய நல்ல வீடு வளவு உடனடி விற்பனைக்குண்டு. வாங்கவிரும்புவோர் 077 905 0274 என்ற தொலைபேசி இலக்கத்துடன் காலை 6 மணிமுதல் காலை 9மணி வரை மட்டும் தொடர்பு கொள்ளவும்.

(c 28004) (14,15) (தரகர்கள் தேவையில்லை)



**கும்பாபிஷேக தின விழா**
**16.01.2016 சனிக்கிழமை**

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயிலின் கும்பாபிசேக தினமான 16.01.2016 சனிக்கிழமை மூலஸ்தான அம்பாளுக்கு 108 சங்காபிஷேகமும், எழுந்தருளி அம்பாளுக்கு ஸ்நபனாபிஷேகமும், பரிவார மூர்த்திகளுக்கு விசேட அபிசேகங்களும் நடைபெறும். உச்சிக்காலப் பூசையைத் தொடர்ந்து விசேட வசந்த மண்டபப் பூசை நடைபெற்று அம்பாள் உள்வீதி, வெளிவீதி வலம் வந்து நல்லருள் பாலிப்பார்.

இத்தினத்தில் வருகை தந்து அம்பாளின் பேரருளைப் பெற்றேகுமாறு அடியார்களை அன்போடு அழைக்கின்றோம்.

அறங்காவலர் சபையினர்
ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

(சி/28375)(11,15,18)

**புதிய நெல் பாக் விற்பனைக்கு**

எம்மிடம் புதிய நெல் பாக்குகள் (பைகள்) மற்றும் சாக்குகள், படங்குகள் மற்றும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

தொடர்பு: எஸ். மில்டன்
077 336 7534 ,
024 222 2049

**பெயர்மாற்றம்**

கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழையைச் சேர்ந்த **இந்திரானந்தம் கஜேந்திரன்** ஆகிய நான் எனது பெயரை **இந்திரானந்தம் கஜன்** என மாற்றம் செய்வதோடு இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்.

இ.கஜன்

**சேவை நலன் பாராட்டு**




**கதிரித்தம்பி கதிரேசபிள்ளை**
(உதவிக் கல்விப்பணிப்பாளர் (ஆங்கிலம்)
BA(English), English Trd. Dip in ELT, P.G.D.E. M.Ed
பிறந்த திகதி: 15.01.1956
அரச சேவை ஆரம்பம் நூலகர் (Librarian) - 29.04.1980 (நெல்லியடி பட்டின சபை)
ஆசிரியசேவை ஆங்கில உதவி ஆசிரியர் - 02.05.1983 -14.08.1989
(தி/ பேராறு வெள் முஸ்லிம் ம.வி. கந்தளாய்)
15.08.1989 -14.09.1989 - யா/ நயினாதீவு மகாவித்தியாலயம்
15.09.1989- 16.01.1990 - யா/ நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி வித்தி

17.01.1990-31.12.1991 நீர்/ போலவளான ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி.
01.01.1992 -17.05.1992 யா/ ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி
18.05.1992 -28.10.2004 யா/ வேலணை சைவப்பிரகாச வித்தி.

**சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்**
29.10.2004-14.09.2005 வலிகாமம் கல்வி வலயம்

**உதவிக்கல்விப் பணிப்பாளர்:**
15.09.2005- 14.01.2016 தீவகக்கல்வி வலயம்

பாராட்டி வாழ்த்துவோர்:
ஆங்கில ஆசிரியர்கள்
தீவக வலயம்.

**யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம் சம்பந்தப்பட்ட சகலருக்கும் அறிவித்தல்**

எமது ஸ்தாபனம் 1984 ஏப்பிரல் 09 ஆம் திகதி தீயினால் அழிக்கப்பட்டு மீண்டும் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மறுசீரமைக்கப்பட்டு தற்போது (20.12.2013) தொடக்கம் இல: 530 ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள எமது சொந்த வளாகத்தில் அமைந்துள்ள காகில்ஸ் சதுக்கம் முதலாம் மாடியில் இயங்குகிறது.

எம்முடன் தொடர்பு கொள்ளாத பங்குதாரர்கள், வைப்பிலிட்டோர் அனைவரையும் தகுந்த சான்றிதழ்கள், பற்றுச்சீட்டுக்கள் போன்ற ஆவணச்சான்றுகளை நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ 18 ஆம் திகதி ஏப்ரல் மாதம் 2016 ஆம் ஆண்டு திங்கட்கிழமை அல்லது அதற்கு முன்னதாக (03 மாத காலத்திற்குள்) மேற்குறிப்பிட்ட விலாசத்தில் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

கடந்த காலங்களில் பல தடவைகள் அறிவித்தல்கள் கொடுக்கப்பட்டதன் காரணமாக பலர் எம்முடன் தொடர்பு கொண்டனர்.

இதுவரை தொடர்பு கொள்ளாதவர்களுக்கு இறுதிச் சந்தர்ப்பம் இத்தால் வழங்கப்படுகிறது.

அலுவலக நேரம்: காலை 9 மணி முதல் 12.00 மணி வரை.

(திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை விடுமுறை தவிர்ந்த நாள்கள்)

தொலைபேசி: 021 222 9979
15.01.2016

செயலாளர்
யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட டெங்கு கட்டுப்பாட்டு செயற்பாடு சாவகச்சேரியில்

*2 ஆயிரத்து 529 இடங்கள் தரிசிப்பு*

சாவகச்சேரி, ஜன.15

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 3 தினங்களாக நடத்தப்பட்ட விசேட டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்பாட்டில் 2 ஆயிரத்து 529 இடங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்போது 178 பேருக்கு சிவப்பு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன. 14 பேருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன.

சுகாதாரத் திணைக்கள அலுவலர்கள், தொண்டர்கள், பொலிஸார், படையினர், கிராம டெங்கு கட்டுப்பாட்டுக் குழுவினர், பிரதேச செயலகப் பணியாளர்கள,; உள்ளூராட்சி சபைகளின் அலுவலர்கள் எனத் தினமும் 80க்கு மேற்பட்டோர் பரிசோதனைகளில் ஈடுபட்டனர்.

இதேவேளை கடந்த 12 ஆம் திகதி கொழும்பிலிருந்து வருகை தந்த பூச்சியியல் ஆய்வுப் பிரிவினர் மட்டுவில், சரசாலை ஆகிய பகுதிகளில் ஆய்வுகளை மேற்கொண்ட போது, பல வீடுகளின் சமையலறைகளுக்குள் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய ஏது நிலை காணப்பட்டதை கண்டுபிடித்துள்ளனர்.

சமையலறையில் வைக்கப்பட்டிருந்த தண்ணீர்க் குடங்கள் மற்றும் குளிரூட்டிகளின் பின்பகுதிகளில் பெருமளவு டெங்கு குடம்பிகள் காணப்பட்டதைக் அவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இதுவரை காலமும் குடிமனைக் காணிகளுக்குள் மட்டும் பரிசோதனைகள் செய்யப்பட்டது என்றும் வருங்காலங்களில் வீடுகளின் சமையலறை உட்பட அறைகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் என்றும் சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்

டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகமாகக் காணப்பட்டதாக இனங்காணப்பட்ட மந்துவில், மட்டுவில், சாவகச்சேரி நகரம் ஆகிய பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் கடந்த 11 ஆம் திகதி பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

(ற-ஜ-9)

# புனித யோசவ் வாஸ் முனீந்திரன் திருவிழா

கொழும்புத்துறை,ஜன.15

இலங்கையின் புனித யோசவ் வாஸ் முனீந்திரனின் திருவிழா கொழும்புத்துறை எழிலூர் வேளாங்கண்ணிமாதா ஆலயப் பகுதியில் அமைந்துள்ள யோசவ் வாஸ் சிற்றாலயத்தில் நடைபெறவுள்ளது. நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு திருவிழாத் திருப்பலியும், திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

யோசவ்வாஸ் அடிகளை பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் கடந்த வருடம் இலங்கைக்கு பயணம் செய்து புனிதராக பிரகடனப்படுத்தியிருந்தார்.

(ற-ஜ-135)

## பட்டிப் பொங்கல்

யாழ்ப்பாணம், ஜன.15

பசுக்கள் மாடுகளுக்கு அடைக்கலம் கொடுத்துவரும் மருதனார் மடத்திலுள்ள கோசலா பட்டியில் பட்டிப் பொங்கல் நாளை சனிக்கிழமை மருதனார்மடம் சங்கீத சபை அருகாமையிலுள்ள குறித்த இடத்தில் நாளை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

(ற-ஜ-4)

## பொங்கல் விழா

கொழும்புத்துறை, ஜன. 15

கொழும்புத்துறை சென்.றொசாறியன் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் தைப்பொங்கல் விழா இன்று காலை 8 மணிக்கு நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது.

(ற-ஜ-135)

✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦

யாழ். கொட்டடி சனசமூக நிலையமும் கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்தும் தைப்பொங்கல் விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது.

நா. தனேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் விருந்தினர்களாக கலாசார உத்தியோகத்தர் திருமதி ந. கலையமுதா, நிலைய போசகர் த.ஜெயபாலசிங்கம், கிராம அலுவலர் ஜே. சாலினி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றையதினம் அறநெறிப் பாடசாலையும் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

(ஜ-135)

✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦

தென்மராட்சி இலக்கிய அணியின் பொங்கல் விழா இன்று மாலை 5மணிக்கு சங்கத்தானை தமிழ் கோட்ட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிராம அலுவலர் க.வாமதேவன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் "பண்பாட்டுப் பொங்கல் "பற்றி உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரியர் தி.செல்வமனோகரன் எழிலுரை வழங்குவார்.

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பியை நடுவராகக் கொண்ட விவாத அரங்கும் இடம்பெறும்.

(ஜ-9)

✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் தைப்பொங்கல் விழாவும், திருப்பலியும் இன்று காலை 6.30 மணிக்கு அருட்தந்தை அலன் அடிகள் தலைமையில் நடைபெறும்.

(ற-ஜ-135)

## போலி நாணயத்தாள் வைத்திருந்தவருக்கு ரூ.5 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஜன.15

போலி நாணயத்தாளைக் கொடுத்து அச்சுவேலி நகரப் பகுதியில் பொருள் கொள்வனவு செய்ய முற்பட்டார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டிருந்த சந்தேக நபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த 2014 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அச்சுவேலி நகரப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் ஆயிரம் ரூபாபோலிநாணயத்தாளைக் கொடுத்து பொருள் கொள்வனவு செய்ய முற்பட்ட உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த நபரை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

சம்பவம் தொடர்பில் சீ.ஐ.டி. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. குற்றம் நிரூபிக்கப்பட்டதை அடுத்து நீதிவான் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

(ற-ஜ-107)

## கசிப்பு உற்பத்தி செய்தவருக்கு ரூ.75,000 அபராதம்

சாவகச்சேரி, ஜன. 15

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்தபோது பொலிஸாரிடம் அகப்பட்ட கொடிகாமம் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் 75 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த வாரம் பொலிஸார் கொடிகாமம் நாவலடிப் பகுதியில் நடாத்திய திடீர் பரிசோதனையின் போது, கசிப்பு உற்பத்தி செய்து கொண்டிருந்த நபரைக் கைது செய்ததுடன், அவரிடமிருந்து உற்பத்தி செய்யப்பட்ட கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடா மற்றும் உபகரணங்கள் போன்றவற்றையும் கைப்பற்றியிருந்தனர்.

இவருக்கெதிரான வழக்கு நேற்று முன்தினம் இடம்பெற்றபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அபராதம் விதிக்கப்பட்டது.

(ற-ஜ-9)

### பன்னிரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 11 . 12 . 1974

விண்ணில் 15 . 01 . 2004

**அமரர் பேரானந்தம் உமாசுதன்**

(போட்டோ சுதன்)

ஆண்டுகள் பன்னிரண்டு மறைந்தாலும்
ஆறவில்லை எங்கள் மனம்
நினைவுகளை மட்டும் நிறையவே தந்து
நிதர்சனமாய் சென்றுவிட்டாயே மகனே!
உலகம் உள்ளவரை நீங்காது உன் நினைவு
உம் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

உம் பிரிவால் துயருறும்...

சாராளர் வளவு,
அல்வாய் கிழக்கு, அல்வாய்

குடும்பத்தினர்.

(62241)(11.15.ல)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண்மகிழ 27.12.1958

விண்மகிழ 17.12.2015

**அமரர் ஆனந்தராணி அப்புத்துரை**

அன்புடனே பேசி அறிவியல் வழிகாட்டி
சமூக வளர்ச்சிக்காக ஒளிர்ந்த விளக்கு - நீ!
ஆண்டவன் அடியை நாடிச் சென்றாலும்
மக்களின் மனங்களில் என்றும் ஒளிர்வாய்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது குடும்ப ஒளி விளக்கு அணைந்த செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்து அஞ்சலி ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் ;

நாளை (16.01.2016)சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தம்பாலை, அச்சுவேலி.

குடும்பத்தினர்.

(கி/28665)(11.15.18)

### 11 ஆம் ஆண்டு நினைவும் 30 ஆவது பிறந்த தினமும்



**அமரர் ஜெயக்குமாரன் தனுசன்**

(கோண்டாவில் இராமகிருஷ்ணன் மகாவித்தியாலயம்- புத்தளம் இந்து மகாவித்தியாலயம் - பழைய மாணவன்)

ஆண்டுகள் பதினொன்றைக் கடந்தாலும்
உன் நினைவுகள்
எம் நெஞ்சை விட்டு விலகாது
கண்ணிமைப் பொழுதெல்லாம்
கண்ணெதிரே தோன்றியவனே!
கதிகலங்க வைத்துவிட
காலந்தான் எண்ணியதே!
நிலையில்லா இவ்வுலகில் எமக்கு நீ-
நிலையான பெரும் செல்வமடா...
தந்தையைப் பாராயோ பெற்ற அன்னையவள்
உதிரத்தின் துடிப்பினைப் பாராயோ-
உன் உடன் பிறப்புக்களின்
நிலையைத்தான் பாராயோ...
உன் அன்புக்கு எவையும் ஈடாகுமோ?

மலர்வு: 04.05.1986

பழனி ஆண்டவர் கோயிலடி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

நண்பர்கள்(கஜன்)
077 711 0427

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**நடராசா இரங்கநாதன்**

பிறப்பு 01.04.1951 — இறப்பு 15.01.2011

**திதி:தை மாத பூர்வபக்க ஏகாதசி**

குடும்ப குல விளக்காய் விளங்கிய
எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
ஆறாது உங்கள் பிரிவுத் துயர்
என்றென்றும் உங்கள் அன்பு
நினைவுகளுடன்
ஆத்மசாந்திக்காய் இறைவனைப்
பிரார்த்திக்கின்றேன்

**அன்பு மனைவி**
**இ.சாரதாதேவி**

**29/21, உடையார் ஒழுங்கை,**
**ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**கமலேஸ்வரி பத்மநாதன்**

என் ஆசை அம்மாவே இரண்டு
வருடம் என்ன எத்தனை வருடம்
சென்றாலும் உங்கள் நினைவை
மறக்க முடியாது அம்மா
கணவரையும் தவிக்க விட்டு
பிள்ளைகளையும் தவிக்க விட்டு
பேரப்பிள்ளைகளையும் மறந்து
எங்கு சென்று விட்டீர்கள் அம்மா
உங்கள் அன்பு முகத்தைக்
காணத் துடிக்கின்றோம்
அம்மா இனியும் ஒரு ஜென்மம்
இருந்தால் நீயே எங்களுக்கு
அம்மாவாக வரவேண்டும் என
இறைவனை வேண்டுகின்றோம்

மலர்வு 20.04.1964
உதிர்வு 05.02. 2014

**கணவர், மக்கள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

"கமலா அகம்"
8ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



M.ஜோன்மேரி
மலர்வு 03.09.1951 — உதிர்வு 15.01.2009



J.லூட்சுபாசினி
மலர்வு 14.12.1981 — உதிர்வு 22.10.2008



J.யூட்சுஜிவன்
மலர்வு 10.04.1991 — உதிர்வு 15.01.2009



J.யூட்சுபாசன்
மலர்வு 03.05.1996 — உதிர்வு 24.01.2009

ஏழாண்டுகள் ஆனதென்று எண்ணி எண்ணி நாம் அழ எங்கிருந்து பார்க்கின்றீர்
எமதருமை உறவுகளே குடும்பத்தின் வழிகாட்டியாய் ஏற்றமிகு தந்தையாய், கணவனாய்
சோதரராய் எமக்கிருந்தீர் அன்று வரை காலங்கள் பலகோடி கரைந்து தான் போனாலும்
கலையாத உங்கள் நினைவுகளை வாழ்வெல்லாம் நாம் சுமப்போம்.

கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

(54174)(45.73)

**குடும்பத்தினர்.**


## துமிந்தவுக்கு பிணை

கொழும்பு, ஜன 15
முறைகேடான முறையில் சொத்துக் குவிப்பு செய்தமை தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு எதிராக இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு தாக்கல் செய்திருந்த வழக்கிலிருந்து அவருக் குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி மற்றும் 2014ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதி வரையான காலப் பகுதிக்கான அசையும் மற்றும் அசையா சொத்துகள் தொடர்பான விவரங்களைச் சமர்ப்பிக்கவில்லையென துமிந்த சில்வா மீது குற்றஞ்சாட்டப்பட்டு இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு இவருக்கெதிராக மூன்று வழக்குகளை தாக்கல் செய்திருந்தது.

நேற்று முன் தினம் இந்த வழக்கு விசாரணை கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது பத்தாயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப்பிணைகள் அடிப்படையிலும் இவருக்குப் பிணை வழங்கப்பட்டது.

(த)


# 90ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் சிவகாமி(தமிழினி) ஜெயக்குமரன்**

அன்னார் சிவபதமடைந்து 90 ஆவது நாளாகிய இன்றும் அவரது நினைவுகளை மீட்டிப் பார்க்கின்றோம். என்றுமே அவர் எமது மனங்களை விட்டும், மக்கள் மனங்களைவிட்டும் நீங்கியதேயில்லை. ஆண்டவன் அடி சேர்ந்த தமிழினியுடன் வாழ்ந்த காலங்கள் பொற்காலங்கள். நினைவு வரும் போதெல்லாம் நிரப்பிவிட முடியாத இழப்பினை எண்ணி, உள்ளம் உருகி தீராத வேதனையடைகின்றோம். ஆண்டவன் அடியில் அன்னார் அமைதிபெற எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டுகின்றோம்.

பிள்ளையாய், நண்பியாய், நல்லாசிரியையாய், மந்திரியாய், தலைவியாய், சேவகியாய்,
தெய்வமாய் எல்லாமுமாய் ஆகிநின்றாய் நீயே!
நாட்டு மக்கள் நலம் பல பெற வந்துதித்தாய்!
உன்னலம் பாராது வாழ்வையே அர்ப்பணித்தாய்!
நாட்டுக்காக வாழ்ந்த பின்பு வீட்டுக்காய் வாழ
நீயும், நாமும் கொடுத்து வைக்கவில்லையே!

**அம்மா,**
**சகோதர சகோதரிகள்,**
**குடும்பத்தினர்.**

**143, சிவபுரம், பரந்தன்** (சி/28667)(11.15)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

திருமதி
**சிவபாக்கியம் செல்லத்துரை**

மலர்வு 12.10.1942 — உதிர்வு 25.01.2015



அகிலத்தின் ஆரம்பமே தாய்
ஆத்மாவின் துடிப்பே தாய்
இன்பத்தின் அத்திபாரம் தாய்
ஈகையின் சின்னமே தாய்
உறுதியின் உயிரே தாய்
ஊக்க மாத்திரையே தாய்
எளிமைக்கு உதாரணம் தாய்
ஏற்றம் தருபவள் தாய்
ஐயம் தீர்ப்பவள் தாய்
ஒழுக்கத்தின் உதாரணம் தாய்
ஓயாத அலையே தாய்
ஔடதம் வாழ்வில் தாய்
அஃகேனம் போன்றவள்
தாய் என்னும் **சிவபாக்கியம்**

**திதி வெண்பா**

சீரோங்கு இரண்டாயிரத்துப் பதினைந்து ஐய வருடம்
பேரோங்கு பூர்வபக்க ஷஷ்டி திதியதனில்
காரோங்கும் புகழ் பெருக்கும் மீசாலைப் பதிவாழ்
பேரோங்கு சிவபாக்கியம் பரமனடி சேர்ந்தனளே!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கணவர், பிள்ளைகள்,**
**குஞ்சரப்பேர்த்தியும்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்**

**சாவகச்சேரி, ஐயா கடையடி,**
**மீசாலை.**

(60700)(11.15.18)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வட்டிப் பணத்தில் பூசை செய்து ஆண்டவன் மீது பழி போடாதீர்

## மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.15

வட்டிப் பணத்தை ஆலயங்களுக்கு வழங்கிபூசைகள்செய்துஆண்டவன் மீதும், வட்டியின் பழி பாவங்களை சுமத்திவருகின்றனர் என்று, இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் பா.சிவதீபன் தெரிவித்துள்ளார்.

காரைநகர்ஈழத்துசிதம்பரத்தின்மாணிக்கவாசகர் சபையினால் நடத்தப்பட்ட விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

தற்போது நாட்டில் குறிப்பாக வடபகுதியில் அறா வட்டிக்குப் பணத்தை வழங்கும் நடவடிக்கைகள் தாராளமாக இடம்பெற்று வருகின்றன.

ஒருவர் வட்டிக்குப் பணம் பெறும் போது அதற்கு ஈடாக வீட்டை வட்டியை தருபவரின் பெயருக்கு எழுத வேண்டியிருக்கின்றது. ஒரு கோடி ரூபா பண்த்தை கொடுத்து விட்டு அதற்கு 60 லட்சம் ரூபாயை வட்டியாகப் பெறுகின்றனர். எந்த ஆபத்தும் இல்லாமல் இதனைச் செய்து கொண்டிருக்கின்றனர்.

> " சமய நிறுவனங்கள், வட்டிக்கு பணம் கொடுப்பது தவறானது என்பதையும், நாவலர் எவ்வாறு இதற்கு எதிராக விழிப்புணர்வு ஊட்டினாரோ அதனை தற்போது எமது ஆலயங்களும் செய்ய வேண்டும் "

இது தவறானது. அறா வட்டிக்கு இடம் பெறும் பணக் கொடுக்கல் வாங்கல்களைச் சட்டத்தின் ஊடாக நிறுத்த முடியாது. இருவருக்கு இடையில் இரகசியமாகவும் இடம்பெறக் கூடும். ஆனால் இந்த அறா வட்டி காரணமாக பாதிப்புக்கள் இடம்பெறுகின்றன.

நாவலரின் காலத்திலும் இந்த அறா வட்டி நடைமுறை இருந்தது. அதற்கு எதிராக நாவலர் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டார். பொதுமக்களை விழிப்புணர்வூட்டினார். ஆனால் இன்று வட்டிக்குப் பணத்தைக் கொடுத் தவர், அறா வட்டியை வருத்தி வாங்கி விட்டு அந்தப் பணத்தில் ஆலயத்தில் பூசை செய்து, ஆண்டவனையும் தனது பழியில் பங்குதாரர் ஆக்கு கின்றார்.

எனவே சமய நிறுவனங்கள், வட்டிக்கு பணம் கொடுப்பது தவறானது என்பதையும், நாவலர் எவ்வாறு இதற்கு எதிராக விழிப்புணர்வு ஊட்டினாரோ அதனை தற்போது எமது ஆலயங்களும் செய்ய வேண்டும் – என்றார்.

(ற–ஐ–5,ரி3)

## போக்குவரத்து விதிகளை மீறியோருக்கு அபராதம்

சாவகச்சேரி, ஜன.15

போக்குவரத்து விதிமுறைகளை மீறிய சாரதிகளுக்கும், டெங்கு கட்டுப்பாட்டு செயற்பாடுகளை மீறியவர்களுக்கும் சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த 12 ஆம் திகதி ஒரு லட்சத்து 67 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இந்தவழக்குகளை விசாரித்த நீதிவான் குறித்த அபராதத்தை விதித்தார்.

அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தில் மணல் ஏற்றி வந்த சாரதிக்கு 50 ஆயிரம் ரூபாவும், வழித்தட அனுமதிப் பத்திரமின்றி பயணிகளை ஏற்றி வந்த வாகனச்சாரதிக்கு 20 ஆயிரம் ரூபாவும், மதுபோதையில் வாகனம் செலுத்திய 5 சாரதிகளுக்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் 37 ஆயிரத்து 500 ரூபாவும், மதுபோதையில் பொலிஸாரால்நிறுத்துமாறு விடுத்த சமிக்ஞையை மீறிய இரு ஓட்டோ சாரதிகளுக்கு தலா 12 ஆயிரம் ரூபாவீதம்24ஆயிரம்ரூபாவும், சமிக்ஞை வெளிச்சமின்றி வாகனத்தைத் திருப்பிய சாரதிக்கும், ஆசனப் பட்டி அணியாத சாரதிக்கும், தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 6 ஆயிரம் ரூபாவும், டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நிலையில் குடியிருப்புகள் மற்றும் காணிகளை வைத்திருந்த மட்டுவில் நுணாவில் பகுதிகளைச் சேர்ந்த ஆறு பேருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 18 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் ஒரு லட்சத்து 67 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ற–ஐ–9)

## குடாநாட்டில் குவிந்த பொங்கல் பானைகள்

யாழ்ப்பாணம்.ஜன.15

தைப்பொங்கலை முன்னிட்டு யாழ்.குடாநாட்டுக்குப் பெரும் எண்ணிக்கையான பொங்கல் பானைகள் தென்னிலங்கை மற்றும் வன்னிப்பகுதிகளில் இருந்து எடுத்து வரப்பட்டன.

அதனைவிட பட்டாசுகள் மற்றும் வாண வேடிக்கைகளும், தென்பகுதியில் இருந்து பெருமளவில் வியாபாரிகளால் கொண்டு வரப்பட்டுள்ளன.

யாழ்.நகரிலும், நகரை அண்டிய புறநகர்ப் பகுதியிலும் இந்தப் பொங்கல் அலுமினிய பானைகளின் விற்பனை நேற்றுக் களைகட்டியது.

இந்த மண்பானைகள், திருநெல்வேலி மற்றும் யாழ். நகர்ப் பகுதியில் வைத்தும் விற்பனை செய்யப்பட்டன. (ற–ஐ–17)

## நிலத்தடி நீர் தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன.15

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் சுன்னாகம் கழிவு ஒயில் கலப்பால் பாதிப்படைந்த தண்ணீரைக் குடிக்கலாமா? குடிக்கக் கூடாதா? என்பது தொடர்பான கருத்தரங்கு எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முருகேசு பண்டிதர் வீதியில் அமைந்துள்ள, சுன்னாகம் தெற்கு சனசமூக நிலையத்தின் முத்தமிழ் மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமூக நீதிக்கான வெகுஜனஅமைப்பின்இணைச் செயலாளர் ச.தனுஜனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கின் பிரதான கருத்துரைகளை வைத்திய கலாநிதி முரளி வல்லிபுரநாதன், பொறியியலாளர் ம.சூரியசேகரம், சட்டத்தரணி சோ. தேவராஜா ஆகியோர் வழங்கவுள்ளனர்.

குறிப்புரைகளை இ. திருநாவுக்கரசு, திருமதி ச. சிவாஜினி, ப. சசிகுமார், சி.கா.செந்திவேல் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இந்தப் பகிரங்க கருத்தரங்கில் பாதிக்கப்பட்ட பொதுமக்களையும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

(ற–ஐ–ரி5)



சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் தரம் ஒன்றில் இணைந்துள்ள மாணவர்களை ஆரம்பப் பிரிவு வகுப்பு மாணவர்கள் வரவேற்கும் கால்கோள் விழா நேற்று நடைபெற்றது. கல்லூரி அதிபர் ந.ஜெயக்குமாரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்குச் செலான் வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். (ஐ–9)

## தேசிய தைப்பொங்கல் விழாவால் யாழில் பாதுகாப்பு ஏற்பாடு தீவிரம்

யாழ்ப்பாணம், ஜன.15

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் தேசியத் தைப்பொங்கல்விழாவில்கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம்வருவதைமுன்னிட்டு பாதுகாப்புகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பொங்கல் விழா வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுவதால், மண்டபத்துக்கான பாதுகாப்புகள் இராணுவத்தினரால் வழங்கப்பட்டுள்ளன. அதனைவிட மண்டபத்தின் வெளிப்புறங்களை சுற்றிலும் வெளிச்சம் கூடிய மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

அதனைவிட வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக முற்றவெளிப் பகுதியிலும் வெளிச்சம் கூடிய மின் விளக்குகள் பொருத்தப்பட்டு, இந்தப் பகுதியின் பாதுகாப்பும் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

(ற–ஐ–17)

## குருநகர் மீனவர்களால் வலைகளுக்குச் சேதம்

### நெடுந்தீவு மீனவர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன .15

நெடுந்தீவுக்கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த குருநகரைச் சேர்ந்த இழுவைப் படகுகளால் நெடுந்தீவு மீனவர்களின் வலைகளை அறுத்தெறிந்துள்ளனஎன்றுமீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நாற்பதுக்கும் அதிகமான குருநகரைச்சேர்ந்த இழுவைப்படகுகள் தீவின் கரையோரப்பகுதிகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்தன என்றும், அதனால் இங்குள்ள பத்துக்கும் அதிகமான மீன் பிடி வலைகள் சேதமாக்கப்பட்டுள்ளன என்றும் இவற்றின் பெறுமதி சுமார் 5 லட்சம் ரூபா என்றும் கூறப்பட்டது.

குருநகர் மீனவர்கள் இழுவைப்படகுகளைப் பயன்படுத்தி தொழில் செய்வதால் இந்தப்பகுதியிலும் மீன்கள் அருகிவிடும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ற–7)

## சாவகச்சேரி வைத்தியசாலையின் தொலைபேசிகள் இயங்கவில்லை

### நோயாளர்களும், பணியாளர்களும் சிரமம்

சாவகச்சேரி,ஜன.15

சாவகச்சேரி வைத்தியசாலையின் தொலைபேசிகள் இயங்காததால் அவசர தேவைக்கு அவற்றைப் பயன்படுத்த முடியவில்லை என்று நோயாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பெருமளவு கிராமங்களை உள்ளடக்கிய தென்மராட்சிப் பிரதேசத்தின் வைத்திய தேவைகளுக்கென செயற்படும் சாவகச்சேரி வைத்தியசாலையை, பிரதேசத்தின் அனைத்துக் கிராம மக்களுடன் ஏனைய பிரதேச மக்களும் தமது நோய்க்கான சிகிச்சைகளை பெற்று வருகின்றனர்.

[illegible] மற்றும் அவசர தேவை [illegible]பாகவும் கிளினிக்குகள் தொடர்பான விவரங்கள் அறியவும் வைத்தியசாலை அம்புலன்ஸ் உதவி பெறுவதற்கும் வைத்தியசாலை தொலைபேசி அழைப்பைப்பெறமுடியாதுள்ளதுவெனவும்தெரிவித்தனர்.

இது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்திடம் கேட்டபோது வைத்தியசாலையில் இயங்கும் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் காணப்படும் கருவிகள், நீண்ட காலமாக பழுது பார்க்கப்படாமல் உள்ளன என்று தெரிவித்தனர்.

இதனால் உள்ளக அழைப்புகள் உட்பட அனைத்து வெளிச் செல்லும் அழைப்புகளும் அவசரத்துக்குப் பெறமுடியாத நிலையில் காணப்படுகிறது.

இது தொடர்பாக பல தடவைகள் உரிய பகுதிகளுக்கு அறிவித்தும் இதுவரை திருத்தப்படவில்லை. இதனால் வைத்தியசாலை நிர்வாகமும் சிரமங்களை எதிர்நோக்குகின்றது என்றும் தெரிவித்தனர். (ற–ஐ–9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலசல கூடங்கள் அமைக்க மானிய அடிப்படையில் நிதி

## வடக்கு அமைச்சர் சத்தியலிங்கம் தகவல்

வவுனியா, ஜன.15

வட மாகணம் முழுவதும் மலசல கூடம் இல்லாத அனைவருக்கும் மானிய அடிப்படையில் மலசல கூடம் அமைப்பதற்கு நிதி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

அதற்கான விண்ணப்ப படிவத்தை ஒவ்வொரு கிராமத்துக்கும் பொறுப்பான பொது சுகாதார பரிசோதகரிடத்திலேபெற்றுகொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பிரதேச அடிப்படையிலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வடக்கு மாகாணத்தில் மலசல கூட வசதியற்றுள்ள அனைவருக்கும் இந்த நிதியை வழக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

2015ஆம் ஆண்டு 12 மில்லியன் ரூபா இதற்காக ஒதுக்கப்பட்டது. இது ஒரு சிறிய தொகை. மலசல கூடம் இல்லாத வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள கூடுதலாக சமுர்த்தியை பெற்று கொள்ளும் குடும்பங்கள் தான் இவற்றுக்கு உள்வாங்கப்படுவார்கள்.

இந்த மலசல கூடங்கள் தேவைப்படுபவர்கள், அவர்களுக்குரிய கிராமங்களுக்குபொறுப்பாகஉள்ள பொதுசுகாதார பரிசோதகரிடத்திலே அதற்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுகொண்டு அதைப் பூரணப்படுத்தியதன் பின்னர், குறித்த கிராம சேவையாளர் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

குறித்த 12 மில்லியன் ரூபாவையும், 35 ஆயிரம் ரூபாவாகப் பிரித்து மானிய அடிப்படையில் மலசல கூடங்கள் வழங்கப்பட உள்ளன. அவை உடனடியாக வழங்கப்படாது போனாலும், அடுத்த தவணைகளில் வழங்கப்படும்.- என்றார். (ற-ஜ-21)

# சிறுநீரக நோயை இனங்காண இரு பரிசோதனை நிலையங்கள்

## வவுனியாவில் அமைக்கப்படும் என வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

வவுனியா, ஜன.15

சிறுநீரகநோயை இனம்காண்பதற்கு வசதியாக செட்டிக்குளம், மாமடுவ வைத்தியசாலைகளில் 50 மில்லியன் ரூபா செலவில் பரிசோதனை நிலையங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பிரதேச அடிப்படையிலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வவுனியா மாவட்டத்தில் அதிகமான மக்கள் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், அதற்கு குடிதண்ணீர்ப் பிரச்சினையும் ஒரு காரணம் என்றும் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்துக்கு வந்த பொது மக்களால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

> “வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டமே சிறுநீரக நோயால் அதிகம் பாதிக்கப்பட்ட மக்களை கொண்ட மாவட்டமாக காணப்படுகின்றது. அடுத்ததாக முல்லைத்தீவு மாவட்டம் இனம் காணப்பட்டுள்ளது.”

வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டமே சிறுநீரக நோயால் அதிகம் பாதிக்கப்பட்ட மக்களைக் கொண்ட மாவட்டமாகக் காணப்படுகின்றது. அடுத்ததாக முல்லைத்தீவு மாவட்டம் இனம் காணப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலே அதிகமான மக்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு மாற்று நடவடிக்கையாக இந்த வருடம் 50 மில்லியன் ரூபா செலவில் செட்டிக்குளம், மாமடுவ வைத்தியசாலைகளில் சிறுநீரக நோய் தொடர்பான பரிசோதனை நிலையங்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம். இனி வரும் காலங்களில் குறித்த நோய்கான ஆரம்பப் பரிசோதனைகளை இங்கேயே மேற்கொள்ள முடியும்.- என்றார். (ற-ஜ-21)



# வீதியைத் திருத்துமாறு மக்கள் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை, ஜன.15

திருகோணமலை - முல்லைத்தீவு பிரதான வீதியை புனரமைத்துத் தருமாறு கோரி சிங்கபுர பகுதி மக்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

திருகோணமலை-முல்லைத்தீவு பிரதான வீதியின் நிர்மானப் பணிகள் கடந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலுடன் இடைநிறுத்தப்பட்ட நிலையில் நிர்மாணப்பணிகள் மேற்கொள்வதற்காக கொண்டு வரப்பட்ட உபகரணங்கள் அனைத்தும் மீள எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இந்த நிலையில் 11 கிலோ மீற்றர் வீதி இன்னும் திருத்தப்படாத நிலையில் குண்டும் குழியுமாக மிக மோசமான நிலையில் பழுதடைந்து காணப்படுகின்றது. அவ் வீதியின் ஊடாக போக்குவரத்துகளை மேற்கொள்வதில் மிகவும் சிரமங்களை எதிர்கொள்ள வேண் டியுள்ளது என்று அந்தப் பிரதேச மக்கள் தெரிவிக் கின்றனர்.

போக்குவரத்துக்கு உதவாத குறித்த வீதியில் நீர் தேங்கி இருப்பதால் அதில் விவசாயம் செய்யலாம் என தெரிவித்து வீதியின் நடுவில்வாழைமரங்களை நட்டு வைத்து அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். (ற)

# நண்டு வளர்ப்பு நிலையத்தை நேரில் பார்வையிட்ட அமரவீர

மன்னார்,ஜன.15



மன்னாருக்குச் சென்றிருந்த கடற்தொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர, மன் னார் சௌத்பார் பகுதியில் உள்ள தனியாருக்குச் சொந்தமான நண்டு வளர்ப்பு நிலையத்துக்குச் சென்று அங்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ள நண்டுகளை பார்வையிட்டார்.

மன்னார் மாவட்டத்தில் நண்டு வளர்ப்பை ஊக்கப்படுத்த உதவிகள் வழங்கப்படாதுள்ள நிலை யில் தனியார் ஒருவர் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் நண்டு வளர்ப்பில் ஈடுபட்டுவருகின்றார். குறித்த நண்டுகள் வளர்க்கப்பட்டு உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மன்னாருக்குச் சென்றிருந்த கடற்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர, குறித்த நண்டு வளர்ப்பு நிலையத்துக்குச் சென்று அங்கு வளர்க்கப்பட்டுள்ள நண்டுகளைப் பார்வையிட்டார்.

அத்தோடு குறித்த நண்டு வளர்ப்பு நிலையத்தை ஊக்கப்படுத்தும் வகையில் ஏனைய உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மன்னார் கடற்தொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் என்.மெராண்டா, வன்னி மாவட்ட நாடளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன், அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் மாவட்ட இணைப்புச் செயலாளர் என் எம்.முனவ்பர் உட்பட பலர் அங்கு சென்றிருந்தனர். (ற-ஜ-56)

# மன்னார் பிரதேச சபைக்கு புதிய செயலாளர் நியமனம்

மன்னார், ஜன.15

மன்னார் பிரதேச சபையின் புதிய செயலாளராக வரணி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசையா தயாபரன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவர் கடந்த திங்கட்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இவர் கடந்த 17 வருடங்கள் அரச சேவை அனுபவத்தை கொண்டிருப்பதுடன், பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகம், பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) அலுவலகம், வலயக்கல்வி அலுவலகம் என்பவற்றில் கடமையாற்றியுள்ளதுடன், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா என பல மாவட்டங்களிலும் கடமையாற்றியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதி சிறப்புத் தரத்துக்கு பதவி உயர்வு பெற்றதன் காரணமாக, வடமாகாண சபையால் மன்னார் பிரதேச சபையின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (ற-ஜ-56)

# திண்மக் கழிவு சேகரிப்பு நிலையத்தை உரிய முறையில் பராமரிக்க வேண்டும்

## ஒலுவில் அஷ்ரப் நகர் மக்கள் கோரிக்கை

அம்பாறை, ஜன.15

ஒலுவில் அஷ்ரப் நகர் பகுதியில் உள்ள திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்தை உரிய முறையில் பராமரித்து, யானைகளின் அட்டகாசத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் அதிகாரிகளை கோரியுள்ளனர்.

குறித்த பகுதியில் அமைந்துள்ள திண்மக் கழிவு சேகரிப்பு நிலையமானது கடந்த காலங்களில் நேர்த்தியாகப் பராமரிக்கப்பட்ட போதிலும் தற்போது அதற்கு பொறுப்பான அட்டாளைச்சேனை பிரதேச சபையினர் அசமந்தமாக செயற்படுகின்றனர் என்றும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

உரிய பராமரிப்பின்மையால் அந்தப் பகுதிகளில் அமைக்கப்பட்ட பாதுகாப்பு வேலிகளை உடைத்து அங்கு யானைகள் அட்டகாசம் செய்கின்றன. அது மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.



அதுமட்டுமின்றி, இந்த திண்மக்கழிவு சேகரிப்பு நிலையமானது பிரதான பாதையொன்றின் அருகே அமைந்துள்ளமையால் அவ்வழியாகச் செல்லும் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் திண்மக்கழிவுசேகரிப்புநிலையத்தை உரிய முறையில் பராமரிக்கவும், பாதுகாப்பு வேலிகளை அமைத்து யானைகளின் அச்சுறுத்தலின்றி மக்கள் நிம்மதியாக வாழவும் உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுபோதையில் இடையூறு: ஒரு வாரம் சமூகப்பணிக்கு உத்தரவு

சாவகச்சேரி,ஜன. 15
மதுபோதையில் பொது மக்களுக்கு இடையூறு விளைவித்த 12 பேரை ஒரு வாரத்துக்கு சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டுள்ளது.

மதுபோதையில் பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்டார்களென சாவகச்சேரி 'மற்றும் கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த நீதிவான், இவர்களை தலா 80 மணித்தியாலயங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்த, நீதிமன்ற சமுதாயம்சார் சீர்திருத்தப் பிரிவில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கடந்த வருடம் 84 பேரை சமூகப் பணியில் ஈடுபடுத்த நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டிருந்தது.
(ற-ஜ-9)

# உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்க ஏற்பாடு

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.15
1999 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான பதவி உயர்வு, படி நிலைகளை வழங்குவதற்கான சேவைப்பிரமாணத்தை வட மாகாண பொதுச்சேவை ஆணைக் குழு ஆராய்ந்து தயார் செய்து வருவதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார்.

இனிவரும் காலங்களில் இந்தப் பதவிக்கான உள்ளீர்ப்புக்கள் இடம்பெறமாட்டாது. ஏனெனில் அரசு கொள்கையளவில் இந்த சேவைப் பிரமாணத்தைநிறுத்திவைத்துள்ளது. இந்த நிலையிலே வடக்கிலே உள்வாங்கப்பட்ட மேற்படி உள்ளூராட்சி உத்வியாளர்கள் பாதிப்படையக் கூடாது என்ற அடிப்படையிலே அவர்களுக்கென புதிய சேவைப் பிரமாணக் குறிப்பைத் தயார் செய்யும் நடவடிக்கைகளை வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. அதனை மாகாண அமைச்சரவை அங்கிகரிக்க வேண்டும்.அதன் பின்னர் ஆளுநரின் அனுமதி கிடைக்க வேண்டும். இது தொடர்பில் சரியான அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

> கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றி வருவோர் தங்களின் முதல் நியமனத் திகதியில் இருந்து ஐந்து வருட காலப் பகுதியில் வகுப்பு மூன்றிலிருந்து, வகுப்பு இரண்டுக்கு உள்வாங்கப்பட்டதுடன் அடுத்த பத்தாண்டு கால சேவை நிறைவில் வகுப்பு இரண்டில் இருந்து வகுப்பு ஒன்றுக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர். வடக்கில் பணிக்கமர்த்தப்பட்ட உள்ளூராட்சி உதவியாளர்கள் இந்த சேவைப் பிரமாணத்தின் அடிப் படையில் பதவி உயர்வுகளை பெற்றுக் கொள்ளவில்லை. ஆரம்பத்திலே சேவைக்கு உள்வாங்கப்பட்ட வகுப்பு மூன்று சேவைத் தரத்திலேயே தற்போதும் உள்ளனர்.

இந்தப் புதிய வரைவால் அலுவலர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. அவர்கள் சேவையாற்றிய காலப் பகுதிக்கான அனைத்து அனுகூலங்களும் கிடைக்கப் பெறும்.

இந்தச் செயன்முறைகளின் செயல்வலு என்பது அங்கீகாரம் கிடைக்கப் பெற்றவுடன் நடைமுறைக்கு கொண்டுவரப்படும். மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குள் இது சாத்தியப்படும் என்றார்.

வடக்கு கிழக்கு மாகாண சபையில் நியமனக் காலப்பகுதியில் இருந்த சேவைப் பிரமாணத்தின் அடிப்படையில் உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட 58 உள்ளூராட்சி உதவியாளர்களில் கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றி வருவோர் தங்களின் முதல் நியமனத் திகதியில் இருந்து ஐந்து வருட காலப் பகுதியில் வகுப்பு மூன்றிலிருந்து. வகுப்பு இரண்டுக்கு உள் வாங்கப்பட்டதுடன் அடுத்த பத்தாண்டு கால சேவை நிறைவில் வகுப்பு இரண்டில் இருந்து வகுப்பு ஒன்றுக்கு உள் வாங்கப்பட்டுள்ளனர்.

இருந்தபோதும்வடக்கில்பணிக்கமர்த்தப்பட்ட உள்ளூராட்சி உதவியாளர்கள் இந்த சேவைப் பிரமாணத்தின் அடிப்படையில் பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொள்ளவில்லை. ஆரம்பத்திலே சேவைக்கு உள்வாங்கப்பட்ட வகுப்பு மூன்று சேவைத் தரத்திலேயே தற்போதும் இருந்து வருகின்றனர்.
(ற-ஜ-ரி2)

## திருப்பணி சபை தெரிவு

காரைநகர், ஜன.15
காரைநகர் மருதடி வீர கத்தி விநாயகர் ஆலயப் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள வசதியாக புதிய திருப்பணிச் சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்று ஆலயப் பொறுப்புரிமையாளர் சபைத் தலைவர் நா.பாலகிருஸ்னன் தெரிவித்துள்ளார்.

திருப்பணிச் சபையின் தலைவராகப் வர்த்தகர் ந.யோகநாதனும், செயலாளராக இராமநாதன் சிவசுப்பிரமணியமும், பொருளாளராக கலைமாடக்கோண் சண்முகம் சிவஞானமும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் வர்த்தகர் சு.தம்பிராசா, பொறியியலாளர் க.கருணாநிதி, தாதி உத்தியோகத்தர் க.பிரதீபன், கூட்டுறவுப் பரிசோதகர் சு.அகிலன் ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் இடம் பெற்ற பொதுக்கூட்டத்திலேயே மேற்படி சபை உருவாக்கப்பட்டுள்ளது என்றும் விரைவில் ஆலயப் புனரமைப்பு மற்றும் புதிய இராஜகோபுரம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட உள்ளது என்றும்பொறுப்புரிமையாளர் சபைத் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.
(ற-ஜ-250)

## தில்லையங்காடு விளைநிலத்துக்கு மின்சார வசதியை ஏற்படுத்தித் தருக

### விவசாயிகள் கோரிக்கை

சாவகச்சேரி, ஜன. 15
தென்மராட்சிப் பிரதேசத்தில் வரும் முழுவதும் விவசாயம் மேற்கொள்ளும் மந்துவில் மேற்கு, தில்லையங்காடு விளை நிலத்தில் தொடர்ச்சியாக பயிர் செய்வதற்கு மின்சார வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்றும், விவசாய வீதியைப் புனரமைத்து வழங்க வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வேம்பிராய் சந்தியிலிருந்து, வரணி செல்லும் வீதியில் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் ஆரம்பமா கும் தில்லையங்காடு வீதி, சரசாலை வடக்கு வரையும் விவசாய நிலங்கள் ஊடாகச் செல்கின்றது. இந்தவீதிக்குஇடைப்பட்ட பகுதியில் கும்பளாவளைப் பிள்ளையார் கோயில், மந்துவில் மேற்கு வயல் வெளி போன்ற இடங்களுக்குச் செல்லும் இணை வீதிகளைக் கொண்டவையாக உள்ளன.

இந்த வீதியில் சுமார் 500 மீற்றர் தூரம் வரை குடியிருப்புகள் உள்ளன. தினமும் பெருமளவு மாணவர்களும், அரசபணியாளர்களும், விவசாயிகளும் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த வீதி கடந்த 50 வருடங்களுக்கு மேல் புனரமைக்கப்படாதுள்ளது. மழை காலங்களில் வீதியை மறைத்து வெள்ளம் தேங்கி நிற்பதால் அனைவரும் வேறு பாதைகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

தில்லையங்காடு விளைநிலம், செம்பாடு மணல் பூமியாக காணப்படுவதால் வருடம் முழுவதும் வாழை, திராட்சை,கரட் பீற்றூட்,கோவா, பப்பாசி போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன.

அத்துடன் அங்குள்ள வயல்களில் காலபோக நெற்செய்கை அறுவடை முடிந்த பின்னர் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் நூற்றுக் கணக்கான விவசாயிகள் தமது வாகனங்களை இந்த வீதியில் பயன்படுத்துகின்றனர்.

இந்த வீதியில் குடியிருப்புகள் உள்ள பகுதிகளுக்கு மட்டும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள போதிலும், விவசாயநிலங்களின் தேவைக்கென மின் விநியோகம் செய்யப்படவில்லை.

கல்வயல் கிராம்புவில், சாவகச்சேரி, மந்துவில், மீசாலை வடக்கு போன்ற இடங்களைச் சேர்ந்த விவசாயிகள் இந்த விளைநிலத்தில் பயிர்ச் செய்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இங்குள்ள விளைநிலங்களில் பயிரிடப்படும் பயிர்களுக்கு நீர் பாய்ச்ச மின்சார வசதி செய்து தருமாறு உரிய அதிகாரிகளுக்கு கமக்கார அமைப்பால் விண்ணப்பித்தும், இதுவரை கிடைக்கவில்லை என்று அந்தப் பகுதிக் கமக்கார அமைப்பின் செயலாளர் தெரிவித்தார்.

இந்தப் பகுதிக்கான மின் விநியோகம் வீதி புனரமைப்பு ஆகியவற்றை மேற்கொள்ளுமாறு விவசாய அபிவிருத்தித்திணைக்களம் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை, இலங்கை மின்சார சபைஎன்பவற்றிடம்விவசாயிகள் கோரியுள்ளனர்.
(ற-ஜ-9)



திருவாசக அமுதம் எனும் பக்தி இசையரங்கு கடந்த செவ்வாய்க்கிழமை நீர்வேலி பொன் செல்வமகால் மண்டபத்தில் நீர்வை தியாக. மயூரகிரிக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் அகில இலங்கை இந்து மாமன்றத்தால் வெளியிடப்பட்ட "இந்து மக்களுக்கு ஒரு கையேடு" என்ற நூல் மீள்பதிப்புச் செய்து வெளியிடப்பட்டது. இந்த நூலின் முதன்மைப் பிரதிகளை கு. தியாகராஜக் குருக்கள், சா. சோமதேவக் குருக்கள், அருட்பணி செ.அன்புராசா ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.
(ற-ஜ-86)

## பொங்கல் விழா

யாழ்ப்பாணம்,ஜன.15
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் தைப்பொங்கல் விழா நாளைசனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். சங்கத்தலைவர் மு.ஜெ.சுஜிந்திரன் தலைமையில் நடைபெறும் விழாவில் பொங்கல்வழிபாடு, சிறப்புச்சொற்பொழிவு என்பன இடம் பெறும்.
(ற-ஜ-17)

## பட்டிப் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 15
யாழ் வின் நிறுவனம் கொக்குவில் கிருஷ்ணா அறநெறிப்பாடசாலை நடத்தும் பட்டிப் பொங்கல் விழா நாளை சனிக்கிழமைமாலை3மணிக்கு பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வரவேற்புரையைதிருமதிகெங்கா ஜெகதீஸ்வரனும், ஆசியுரையை சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்களும், வாழ்த்துரையை இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மாணிக்கராஜா அனந்தலட்சுமியும் நன்றியுரையைசெல்வி ஜசிந்தா கணேசலிங்கமும் வழங்கவுள்ளனர்.

அத்துடன்வ.நவநீதனின் சொற்பொழிவும், இந்த நிகழ்வுக்கு ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்அனைவரையும்கலந்து கொள்ளுமாறு பாடசாலை சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.
(ற-ஜ)

## காரைநகர்- ஊர்காவற்றுறை இடையே புதிய மேம்பாலம்

### பூர்வாங்க ஏற்பாடுகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.15
காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையில் மேம்பாலம் ஒன்றை அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுமார் 450 மீற்றர் நீளம் கொண்டதாக இந்தப் பாலத்தை அமைப்பதற்கு இந்த ஆண்டின் அபிவிருத்தித் திட்டத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கேரதீவு, சங்குப்பிட்டி மேம்பாலம் போன்றே இந்தப் பாலமும் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையில் கடற்பாதை ஊடாகவே மக்கள் போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றனர். இந்தக் கடற்பாதை ஊடாக மக்கள் சிரமப்பட்டே தமது போக்குவரத்தை மேற்கொள்கின்றனர்.


இந்தக் கடற்பாதையை விரைவில் திருத்தியமைக்கவும் வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

அதேசமயம் பாதையை இயக்குவதற்கான புதிய மோட்டர்களும் தருவிக்கப்படவுள்ளன.
(ற-ஜ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலுக்குத் தைரியம் இருந்தால் தேர்தலுக்குத் திகதி குறியுங்கள்

## கூட்டு எதிரணிப் பக்கமே மகிந்த; தினேஷ் எம்.பி. அரசுக்குச் சவால்



கொழும்பு, ஜன. 15
அரசுக்கு பாரிய சவாலாக கூட்டு எதிரணி செயற்படுவதனால் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி பயப்படுவதாகவும், முடியுமானால் தேர்தலுக்கான திகதியைக் குறிப்பிடுமாறும் கூட்டு எதிரணித் தலைவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமானதினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

தேர்தல் அறிவிக்கப்பட்டதும் மகிந்த ராஜபக்ச தனது தீர்மானத்தை அறிவிப்பார். அவர் கூட்டு எதிரணி நாடாளுமன்ற ஆசனத்திலேயே இன்னமும் அமர்ந்துள்ளார். ஐ.தே.கவுக்கு எதிரான நிலைப்பாட்டிலேயே அவர் தொடர்ந்தும் உள்ளார். ஆகவே, தேர்தலின்போது ஐ.தே. கவுக்கு எதிரான கூட்டணியில் நாங்கள் அனைவரும் இருப்போம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பொரளையில் அமைந்துள்ள என்.எம்.பெரேரா நிலையத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

105 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டு ஐ.தே.கவால் அரசு ஒன்றை அமைக்க முடியுமானால், தற்போது அரசில் உள்ள சிலர் எம்முடன் வந்து இணைந்தால், மகிந்த ராஜபக்ச தலைமையில் அரசு ஒன்றை அமைப்போம். கூட்டு எதிரணி தொடர்ந்தும் ஐ.தே. கவுக்கு எதிரான கொள்கையைக் கொண்டுள்ளது. மகிந்த ராஜபக்ச கூட ஒருங்கிணைந்த எதிரணியின் பக்கமே உள்ளார்.

ஆட்சியிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரே சவால் எமது கூட்டு எதிரணி மட்டுமே. அதனாலேயே ஐ.தே.க. தேர்தலை காலந்தாழ்த்திக் கொண்டு செல்கிறது. அமைச்சரவை அறிவிப்பில் அரசு உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் தினத்தை தெரிவிக்க முடியுமா என நாம் சவால் விடுக்கின்றோம்.

சபாநாயகர் கருஜயசூரிய ஒப்புதல் வழங்கிய எல்லை நிர்ணயத்தில் தற்போது பிரச்சினைகள் உள்ளதாக குறிப்பிட்டு காலந் தாழ்த்தி வருகின்றனர் என்றார். (த-சி)

## கிழக்கு மாகாண சபை அமர்வில் பிள்ளையான் பங்கேற்க அனுமதி

மட்டக்களப்பு, ஜன. 15
தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தற்போது மாகாண சபை உறுப்பினருமான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் சிறைச்சாலைப் பாதுகாப்புடன் சென்று எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ள கிழக்கு மாகாணசபை அமர்வில் பங்குபற்றுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் எம்.கணேசராசா முன்னிலையில் நேற்றுமுன்திணம் காலை முன்னிலைப் படுத்தப்பட்டபோது மாகாண சபை உறுப்பினரின் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (த-சி)

# மயில் மாளிகையில் தங்க நகை, பணம்?

## விசாரணை நடத்தக் கோருகிறார் அதன் உரிமையாளர் லியனகே

கொழும்பு, ஜன. 15
பீகொக் மாளிகையின் (மயில் மாளிகை) நீச்சல் தடாகத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தங்கம், பணம் ஆகியன மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்று தகவல் கசிந்துள்ளது.

இந்நிலையில், இதுபற்றி உடனடியாக விசாரணை நடத்துமாறு பீகொக் மாளிகையின் உரிமையாளரான ஏ.எஸ்.பி.லியனகே பொலிஸ் தலைமையகத்தில் எழுத்துமூல முறைப்பாட்டைக் கையளித்தார்.

இராஜகிரியவில்தான் பீகொக் மாளிகை அமைந்துள்ளது. மாளிகை வளாகத்தில் முன்னர் மயில்கள் நடமாடித் திரிந்தமையாலேயே இதற்கு மயில் மாளிகை (பீகொக் மாளிகை) எனப் பெயர் சூட்டப் பட்டது.

ஏ.எஸ்.பி.லியனகே என்ற கோடீஸ்வரரே அதன் உரிமையாளராக இருக்கிறார். இலங்கை தொழில் கட்சியின் தலைவராகவும் அவர் செயற்படுகிறார்.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் மகிந்த ராஜபக்ச அலரி மாளிகையிலிருந்து வெளியேறினார்.

இதையடுத்து மகிந்தவுக்கு மிகவும் நெருக்கமானவர் எனக் கருதப்படும் லியனகே, தனது மாளிகையை மகிந்தவுக்கு வாடகைக்கு வழங்குவதற்கு இணக்கம் வெளியிட்டார். மகிந்தவும் இதற்கு பச்சைக்கொடி காட்டினார்.

அதன்பின்னர் மாளிகையில் அதிரடி மாற்றங்கள் இடம் பெற்றன. நுழைவாயில் மாற்றப்பட்டதுடன், நீச்சல் தடாகம் மணலால் மூடிமறைக்கப்பட்டது.

இவை அனைத்தும் மகிந்தவின் ஜோதிடர்களின் ஆலோசனையின் பிரகாரமே இடம் பெறுகின்றன என்று அப்போது கூறப்பட்டது. இறுதியில் லியனகேக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டதால் அவர் மாளிகையை மகிந்தவுக்கு வழங்கவில்லை.

இந்நிலையிலேயே எட்டு மாதங்களுக்குப் பிறகு மாளிகை தொடர்பிலும் மணலால் நிரப்பப்பட்ட நீச்சல் தடாகம் குறித்தும் மர்மத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நீச்சல் தடாகத்தில் மணல் நிரப்பக் காரணம், மகிந்தவின் தங்கத்தை மறைத்து வைப்பதற்காகவேயாகும் எனச் சந்தேகிக்கப்படுவதாக ஊடகங்களும் செய்திகளை வெளியிட்டுள்ளன. இதன் பின் புலத்திலேயே விசாரணை நடத்துமாறு பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார் லியனகே.

பொலிஸ் தலைமையத்துக்கு வந்து முறைப்பாட்டைப் பதிவு செய்த பின்னர், ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர் கூறியவை வருமாறு:-

பீகொக் மாளிகை தொடர்பில் சர்ச்சை எழுப்பட்டுள்ளது. மணலால் மூடப்பட்டுள்ள நீச்சல் தடாகத்தில் மகிந்தவின் தங்கமும், பணமும் பொலித்தீன் பையில் பொதியிடப்பட்டு மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்று கதை பரப்பப்படுகிறது. இதுபற்றி ஊடகங்களிலும் செய்தி வெளியாகியுள்ளது.

மகிந்த ஜோதிடத்தை நம்புபவர். அதற்கமையத்தான் இவ்வாறு செய்யச் சொன்னார். எட்டு மாதங்களாகியும் நீச்சல் தடாகம் ஏன் தோண்டப்படவில்லை என்ற வினா எழலாம்.

மகிந்தவின் சோதிடத்தை நானும் நம்புகிறேன். நீச்சல் தடாகம் மூடப் பட்ட பின்னர் எனது வணிகம் இலாபத்தை நோக்கிச் செல்கிறது. நைஜீரியாவில் நான் தூதுவராக இருந்ததை விட இப்போது செல்வம் அதிகரித்துள்ளது. அதனால் தான் அப்படியே வைத்துள்ளேன்.

அங்கு ஒன்றும் மறைத்து வைக்கப் படவில்லை என்றே நான் நம்புகிறேன். மாளிகையில் நான் இல்லாத சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. அப்போது ஏதாவது நடந்ததா என்று எனக்குத் தெரியாது.

எனவே, இது பற்றி விசாரணை நடத்தி நீதியைப் பெற்றுத் தருமாறு பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்தேன்- என்றார். (த-சி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொரு மாணவருக்கும் குறைந்தது ஒரு விளையாட்டாவது அவசியமானது

## விளையாட்டு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு. ஜன. 15
பாடசாலைகளில் கல்வி பயிலும் ஒவ்வொரு பிள்ளையும் குறைந்தது ஒரு விளையாட்டு நிகழ்ச்சியிலாவது பங்கு பற்ற வேண்டும்என விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது: -

விளையாட்டு மற்றும் உடல் நல அபிவிருத்தி செயற்பாடுகள் அனைத்துப் பாடசாலைகளிலும் கட்டாய பாடமாக உள்ளடக்கப்படுவதோடு ஒவ்வொரு பிள்ளையும் குறைந்தது ஒரு விளையாட்டிலேனும் பங்குபற்றி தமது எதிர்காலத்தினையும் நாட்டின் எதிர்காலத்தினையும் முன்னோக்கி கொண்டு செல்லவேண்டும்.

இதற்கமையவே நிகழ்ச்சித் திட்டமொன்றும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அனை வரும் விளையாட்டு செயற்பாடு களில் ஈடுபடுவதுடன் தமது உடல் நல அபிவிருத்தி குறித்தும் கவனமும் செலுத்த முடியும்.

விளையாட்டுக்களில் ஈடுபடும் மாணவர்களுக்கு அவர்களது செயற்பாடுகள் தொடர்பில் தவணைப் பரீட்சைகளில் அதிக புள்ளிகளை வழங்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

விளையாட்டுக்களில் ஈடுபடும் மாணவர்களுக்கு தவணைப் பரீட்சை, ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை, ஜீ.சீ.ஈ. உயர்தர பரீட்சைகளில் மேலதிக புள்ளிகளை இணைத்து வழங்குவது தொடர்பில் கல்வியமைச்சுடன் இணைந்து புதிய செயற்திட்டமொன்றை உருவாக்க எதிர்பார்த்துள்ளோம் -என்றார். (த-4)

# பிள்ளையானின் மறியல் நீடிப்பு

மட்டக்களப்பு, ஜன. 15
தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தற்போது கிழக்கு மாகாண சபையின் உறுப்பினருமான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட மூவரின் விளக்க மறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை மட்டக் களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் சந்திரகாந்தன் உட்பட மூவரும் முன்னிலைப்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.கணேசராசா உத்தரவிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் 2005ஆம் ஆண்டு மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்திற்குள் வைத்து நத்தார் நள்ளிரவு ஆராதனையின்போது சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தப் படுகொலை தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் குறித்த சந்தேகநபர்களான எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா (பிரதீப் மாஸ்டர்) மற்றும் ரெங்கசாமி கனகநாயகம் (கஜன் மாமா) ஆகியோர் கடந்த ஒக்டோபர் மாதம் 8ஆம் திகதி கைது செய்யப்பட்னர்.

குறித்த இருவரும் கைதாகி மூன்றாம் நாளான ஒக்டோபர் 11ஆம் திகதி சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) கைது செய்யப்பட்டார்

மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் மூவரும் நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (தி)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பொங்கல் பிறந்தாலும் கண்ணீரில் வாடும் நிலையா ஈழத் தமிழருக்கு...?

இன்று தமிழர் திருநாள். தைப்பொங்கல் பெருநாள். பிரதான தொழிலான விவசாயம், அதன் கூறுகளில் ஒன்றான நெற்செய்கை சிறப்புடன் பொலிந்து விளையக் காலாக இருந்த சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் நன்னாள். காலாதி காலமாகத் தமிழர்தம் சிறப்புப் பெருநாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இன்றைய முக்கியத்துவம்அறிந்த, ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கும் கொழும்பு அரசு, பொங்கல் விழாவை, வடக்கில் கொண்டாடு வதற்குத் தடல்புடலான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

அந்த விழாவின் பிரதம விருந்தினர்களாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொள்கின்றனர்.

இப்போதைய புதிய ஆட்சியாளர், தாம் தமிழ் மக்களின் பக்கம் சாய்ந்து நிற்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துவதற்கான, வெள்ளை அடித்துக் காட்டும் ஒரு விழா எனக்கொள்ளலாம். அது தப்பன்று.

இதேவேளை-தைப்பொங்கல் நாளுக்கு முன்னதாக, தமது விடுதலைக்கு உதவுமாறு தமிழ் அரசியல் கைதிகள், கோரிக்கை விடுத்தமைக்கு, இந்தப் பத்தி எழுதப்படும் வரை, ஆக்கபூர்வமான அறிவிப்பு எதுவும் அரச தரப்பிடம் இருந்து வெளிப்படுத்தப்படவில்லை!

எங்கள் உறவுகள் சிறைகளில் வாடும் நிலையில், நாங்கள் பொங்கல் விழாவைக் கொண்டாடுவது இல்லை. இந்த வருடத்தில் பொங்கல் விழாவுக்கு முன்னர்,--

ஜனாதிபதியும், பிரதமரும் எமது பிரதேசத்துக்கு வந்து பொங்கல் விழாவைக் கொண்டாடுவதானால்--

அதற்கு முன்னதாக பல்லாண்டு காலமாக சிறைகளில் கிடந்து வாடும் எமது உறவுகளை உடன் விடுவியுங்கள்.--

தமிழ் மக்களுக்குரிய தைப்பொங்கல் திருநாளை கொண்டாட சிறைக் கைதிகளின் விடுதலைக்கு வகை செய்ய வேண்டும் என்று கண்ணீரால் கடிதம் எழுதிக் கேட்டிருந்தனர். அதற்கான ஏற்பாடு எதுவும் குறித்து இப்பத்தி எழுதப்படும் வரை தகவல் எட்டவில்லை.

உள்ளூர உயர்ந்து நோக்கினால், வடக்கில் அரசின் இன்றைய பொங்கல் விழா ஏற்பாடு, வெளி உலகுக்கு, தமிழ் மக்கள்--கொழும்பு அரசோடு ஒட்டி உறவாடுகிறார்கள் என்ற பிம்பத்தை வெளிப்படுத்தும், ஏய்க்காட்டும் தந்திரமே!

இதேவேளை, அத்துமீறி இலங்கைக் கடல் எல்லையை மீறித் தொழில் ஈடுபட்டிருந்த தமிழக மீனவர்களை, பொங்கல் தினத்துக்கு முன்னர் விடுவிக்கப்போவதாக, இலங்கை அரசின் சார்பாக, எமது நாட்டின் மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த சமரவீர இம்மாத முற்பகுதியில் தெரிவித்திருந்தார்.

அந்த அறிவிப்பு இந்தியாவைக் குளிர்விக்கும் ஓர் அரசியல் காய் என்று கொள்ளத்தக்கது. அதேபோல் தமிழ் மக்களை பெரிய அளவில் ஏமாற்றும், ஏய்க்காட்டும் போக்குமே அன்றி வேறில்லை!

இந்த நாட்டின்--தென்னிலங்கையின்--அரசியல் தலைவர்களின் போக்கு ஒருபோதும் மாறாது என்பதற்கான மற்றொரு கறுப்புச் சைகையே இது எனக்கொள்ள வேண்டும்.

பொங்கல் பிறந்தாலும், தீபம் எரிந்தாலும் ஏழைகள் வாழ்வது கண்ணீரிலே--என்ற கவிஞர் கண்ணதாசனின் பாடலின் நிலைதானா?

புதிய நல்லாட்சியின் போக்கு இவ்வாறுதான் அமையுமா? அரசுதான் பதில் சொல்ல வேண்டும்!

# மைத்திரியை வீழ்த்துவாரா மகிந்த?

எம்.ஐ.முபாறக்

இந்த நாடு இன்று ஒரு வகையான நிம்மதிக்காற்றைச் சுவாசித்துக் கொண்டு இருக்கின்றது. தமக்கு எதிராக எந்தவோர் அநீதி இழைக்கப் பட்டாலும் அதற்கு நீதி கிடைக்கும் நிலை தென்படுகிறது. எந்தவொரு பிரச்சினைக்கும் உடனுக்குடன் தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

கடந்த காலங்களில் காணப்பட்ட பல தரப்பட்ட சூழ்நிலைகளை விட இப்போதைய சூழ்நிலை மிகவும் வித்தியாசமானதாக இருக்கின்றது. அதற்குக் காரணம் ஆட்சி மாற்றம்.

### மகிந்தவை வீழ்த்துவதற்கு மக்களின் தியாகங்கள்

மகிந்தவின் சர்வாதிகார ஆட்சியை வீழ்த்தி இந்தப் புதிய அரசை உருவாக்குவதற்கு இந்த நாட்டு மக்கள் அதிக தியாகங்களைச் செய்தனர். சிறுபான்மை இன மக்கள் அந்த மாற்றத்துக்காக பலதுன்பங்களை அனுபவித்தனர். இறுதியில் அந்தத் துன்பங்களுக்கு – தியாகங்களுக்கு வெகுமதியாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

இந்தஆட்சியை இல்லாதொழிக்க இந்த நாட்டு மக்கள் யாரும் தயாரில்லை. இந்த ஆட்சியின் போக்கைப் பார்க்கும் மக்கள் இந்த ஆட்சி நீடிக்கவேண்டும் என்றே விரும்புகின்றனர். ஆனால், மகிந்தவோ எப்படியாவது இந்த ஆட்சியைக் கவிழ்த்து மீண்டும் அவரது சர்வாதிகார ஆட்சியை நிறுவிவிட வேண்டும் என்று துடியாய்த் துடிக்கின்றார்.

### புதிய ஆட்சியை அமைக்கும் முயற்சியில் மகிந்த

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் புதிய கட்சி ஒன்றின் ஊடாக வெற்றியைச் சுவைப்பதற்கு மகிந்த தரப்பு முயற்சிகள் எடுப்பதாக செய்திகள் வெளியாகி உள்ளன. அதுவும் மீண்டும் பஸில் ராஜபக்சவைப் பிரதானப் படுத்தி – அவரின் வியூகத்தின் அடிப்படையில் வெற்றியைப் பெற நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிகின்றது. இப்போதைக்கு இந்த நகர்வு சாத்தியப்படுமா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது.

2005 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த வெற்றி பெற்றதும் நாட்டின் நிர்வாகம் அவரது கைக்குச் சென்றது. ஆனால், அவரது ஆட்சி அப்போது ஸ்திரமானதாக இருக்கவில்லை. எதிர்க் கட்சிகள் சற்றுப் பலமானதாக இருந்தன. மறுபுறம், புலிகளின் தலையிடி. இவற்றையெல்லாம் சமாளிப்பதற்காக - ஆட்சியை ஸ்திரப்படுத்துவதற்காக மகிந்த எல்லோர் கால்களிலும் வீழ்ந்து ஆதரவைப் பெறும் நிலைக்குத் தள்ளப் பட்டார். அதிர்ஷ்டம் அவருக்கு யுத்த வெற்றி வடிவில் வந்தது. புலிகளுடன் போர் புரிய வேண்டிய கட்டாயத்துக்குள் அவர் தள்ளப்பட்டார். ஆனால், அந்தக் கட்டாயம் அவருக்கு அதிர்ஷ்டத்தைக் கொடுத்துவிட்டது. எதிர்க் கட்சிகளில் இருந்து பலர் அவர் பக்கம் பாய எதிர்க் கட்சிகள் பலமிழந்து மகிந்த பலமடையத் தொடங்கினார். இந்தப் பலம் அவரை ஒரு சர்வாதிகாரி என்ற நிலைக்கு இட்டுச் சென்றதோடு அவரது சகோதரர்கள் – பிள்ளைகள் தலை, கால் புரியாமல் ஆடுவதற்கும் வழி ஏற்படுத்திக் கொடுத்தது.

> **மகிந்தவின் ஆட்சி பலமாக இருப்பதற்கு அவரது இரு சகோதரர்களே காரணம் என மஹிந்த நினைத்துக் கொண்டார். யுத்த வெற்றி என்ற அந்தப் பெரும் ஆயுதத்தை வைத்து எவர் வேண்டுமானாலும் ஆட்சி செய்யலாம் என்ற உண்மையை அவர் மறந்து செயற்பட்டார்.**

மகிந்த ஜனாதிபதி என்ற பதவியை வைத்துக்கொண்டு அவர் பாட்டில் இருக்க அவரது சகோதரர்களான பஸில் ராஜபக்சவும் கோத்தபாய ராஜபக்சவுமே நாட்டை நிர்வகிக்கத் தொடங்கினர்.

### மகிந்தவின் குடும்ப ஆட்சி

கோத்தபாய பாதுகாப்பு விவகாரங்களைக் கையில் எடுத்தார். பஸில்அரசியல்விவகாரங்களைக் கையில் எடுத்தார். மகிந் தவின் பிள்ளைகள் எடுக்கக் கூடாதவற்றையெல்லாம் கைக ளில் எடுத்தனர். அவர்களின் குடும்ப ஆட்சி நாட்டை ஆக்கிர மிக்க குறிப்பிட்ட காலம் வரை அவர்களது ஆட்டம் தொடர்ந்தது.

மகிந்தவின் ஆட்சி பலமாக இருப்பதற்கு அவரது இரு சகோதரர்களே காரணம் என மஹிந்த நினைத்துக் கொண்டார். யுத்த வெற்றி என்ற அந்தப் பெரும் ஆயுதத்தை வைத்து எவர் வேண்டுமானாலும் ஆட்சி செய்யலாம் என்ற உண்மையை அவர் மறந்து செயற்பட்டார்.

இந்த நிலையில், பஸில் கிட்டத்தட்ட இந்த நாட்டின் ஜனாதிபதி போன்ற ஒரு நிலையை அடைந்தார். எல்லாவற்றையும் அவரே கவனிக்கத் தொடங்கினார்.

இவ்வாறு ஆட்சி சென்று கொண்டிருந்த நிலையில், தனக்குப் பின் அடுத்த ஜனாதிபதியாக தனது மகன் நாமலை ஆக்குவதற்கு மகிந்த திட்டம் தீட்டினார். அதற்கான பக்குவ வயதை – அரசியல் பக்குவத்தை நாமல் அடையும் வரை இந்த நாட்டின் ஜனாதியாகத் தானே இருப்பேன் என்று அவர் முடிவெடுத்தார். அதற்கு ஏற்ப அவர் அரசியல் அமைப்பில் மாற்றத்தையும் ஏற்படுத்தினார். அரசமைப்பின் 18ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்து ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் ஜானதிபதியாக இருக்கும் தடையை நீக்கினார். அதன் மூலம் மூன்றாவது தடவையாகவும் தானே ஜானதிபதியாக இருப்பது. அதன் பின் தன் மகனை ஜனாதிபதியாக்குவது என்று மகிந்த திட்டம் தீட்டினார்.

### ஒத்துப்போகாத பஸில்

ஆனால், நடைமுறையில் ஒரு ஜனாதிபதி போல் செயற்பட்ட பஸில், மகிந்தவின் இந்தத் திட்டத்துடன் ஒத்துப் போகவில்ல. அடுத்த ஜனாதிபதியாகத் தானே வர வேண்டும் என்று அவர் கனவு கண்டார். அதற்கு ஏற்ப காய்நகர்த்தவும் செய்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பஸிலுடனும் கனிஷ்ட உறுப்பினர்கள்

வாசகர் திருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> மஹிந்தவின் சகோதரர்களினதும் அவரது பிள்ளைகளினதும் போக்கே என்ற உண்மையை விமல் வீரவன்ச போன்றவர்கள் மகிந்தவிடம் எடுத்துக் கூறினர். ஆனால், மகிந்த இவற்றையெல்லாம் கவனத்தில் எடுக்கவில்லை.

நாமலுடனும் என சு.க. திரை மறைவில் இரண்டாகப் பிரிந்து செயற்பட்டது. பல தடவைகள் நாமல், பஸிலை விமர்சிக்கவும் செய்தார்.

இவ்வாறு இருவருக்கும் இடையில் பனிப்போர் இடம்பெறத் தொடங்கியது. இருவரும் ஜனாதிபதிப் பதவியைக் குறிவைத்துக் காய்நகர்த்தினர். பஸில் அபிவிருத்தியில் கவனம் செலுத்தித் தன்னைப் பிரபலப்படுத்திக் கொண்டார்.

மறுபுறம், நாமல் நீலப் படையணி மற்றும் இளைஞர்களுக்கான நாளை போன்ற அமைப்புகளை உருவாக்கி அவற்றின் ஊடாக நாட்டின் இளைஞர்களின் செல்வாக்கைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டார்.

இதற்கிடையில் மகிந்தவின் ஆட்சி ஆட்டம் காணத் தொடங்கியது. இதற்குக் காரணம் மஹிந்தவின் சகோதரர்களினதும் அவரது பிள்ளைகளினதும் போக்கே என்ற உண்மையை விமல் வீரவன்ச போன்றவர்கள் மகிந்தவிடம் எடுத்துக் கூறினர். ஆனால், மகிந்த இவற்றையெல்லாம் கவனத்தில் எடுக்கவில்லை. இறுதியில் ஆட்சி கவிழ்ந்தது.

இந்தக் கவிழ்ப்புக்குக் காரணம் மகிந்தவின் இரு சகோதரர்கள்தான் என விமல் வீரவன்ச தொடர்ச்சியாகக் கூறி வந்தார். இப்படியான ஒரு நிலையில், மீண்டும் பஸிலைப் பிரதானப்படுத்தி - அவரின் வியூகத்தின் மூலம் ஆட்சியைக் கைப்பற்ற நினைப்பது மகிந்தவுக்கு நிச்சயம் வெற்றியைக் கொடுக்காது.

ஜனாதிபதித் தேர்தலில் தோற்றுப் போய் வீட்டில் இருந்த மகிந்தவை மீண்டும் அரசியலுக்கு இழுத்து வந்தவர் விமல் வீரவன்ச. அந்த விமல், பஸிலின் அரசியல் செயற்பாட்டைக் கடுமையாக விமர்சிப்பதால் - பஸிலே மகிந்தவின் தோல்விக்குக் காரணம் என்ற நிலைப்பாட்டில் இருப்பதால் அவர் ஒருபோதும் பஸிலைப் பிரதானப்படுத்தும் மஹிந்தவின் திட்டத்துக்கு உடன்படமாட்டார். இது மகிந்த அணியைப் பிளவுபடுத்தும் என்றே தெரிகின்றது.

அதுபோக, மைத்திரி - ரணில் அரசின் செயற்பாடுகள் திருப்திகரமாக இருப்பதால் இப்போது இந்த அரசைக் கவிழ்ப்பதோ ஏனைய தேர்தல்களில் இந்த அரசைத் தோல்வியடையச் செய்வதோ சாத்தியப்படாது.

மேலும், மஹிந்த புதிய கட்சி ஒன்றின் மூலம் தனது செயற்பாடுகளை முன்னெடுப்பாராக இருந்தால் அது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பலவீனப்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத்திவிடும். ஆகவே, மகிந்தவின் நகர்வு ரணிலுக்குத்தான் வெற்றியாக அமையும்.

## நீதி தழைத்தோங்குக

அண்மையில் உயர் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் அவர்கள் விடுத்த செய்தி என் போன்றவர் களுக்கு பால் வார்த்தது போல் இருந்தது. இவ்வருடம் வ்ழக்குகள் யாவும் துரிதப்படுத்தப்படும் என் பதே அந்தச் செய்தியாகும். உண்மையிலேயே அவரை ஓர் அவதார புருஷர் என்று சொன்னால் கூட மிகையாகாது. அந்தளவுக்கு நாட் டின் மீதும், நாட்டின் இறைமை மீதும் பற்றுக் கொண்டவர். குற்றச் செயல்களை இல்லாதொழித்து சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டு வதில் அவருக்கு இருக்கும் அக் கறை பாராட்டத்தக்கது. இன்று நாட்டில் பல்கிப் பெருகியுள்ள கொலை, கொள்ளை, பலாத்காரம், மோசடி, ஏமாற்றுப் பேர்வழிகளின் அட்டகாசம் போன்றவற்றுக்கு இவர் சிம்ம சொப்பனமாக விளங் குவார் என்பதில் ஐயமில்லை. அத் துடன் கடந்த 9ஆம் திகதி உதயன் பத்திரிகையில் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேக ரனும் வழக்குகளின் தாமதத்தைத் தவிர்க்க சட்டத்தரணிகள் முற்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கை யையும் முன் வைத்துள்ளார். ஆகவே உயர் நீதிமன்ற நீதிபதியின் கருத்துக்கு இவரின் அறிக்கை கட்டியம் கூறுவது போல் இருக்கின்றது. எனவே எல்லாம் நல்லாட்சியில் நல்லபடியாக நடக்கட்டுமே.

மேலும் கடந்த 9ஆம் திகதி அன்று சி.ஜெயகணேசன் ஆசிரியர் அவர் கள் ஓர் அருமையான வரலாற்று விடயத்தை முன்வைத்து வாசகர்க ளாகிய எமக்கு ஓர் இன்ப அதிர்ச் சியை ஏற்படுத்தினார். வானில் தோன்றிய அரிய காட்சி எனும் தலைப்பிட்டு இதை வாசகர்களுக்கு அறியத்தந்துள்ளார். உண்மையிலேயே இவரின் முன்மாதிரியை வாசகர்கள் சார்பாக நானும் பாராட் டுவதுடன், இதை அவர் கூறியது போல முன் கூட்டியே சோதிடர்களோ, விஞ்ஞானிகளோ அறியத்தராமை மிகுந்த மன வருத்தம் அளிக்கின் றது. இந்த அரிய காட்சியின்போது கிழக்கு வானில் சுக்கிரனும், சந்திரனும் ஒரே பாகையில் தோன்றியதாக அவர் கூறியுள்ளார். மக்கள் இதைப் பார்த்திருந்தால் சில தோசங்கள் நீங்கி அவர்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு பேருதவியாகவும் இருந்து இருக்கலாம் அல்லவா? ஆகவே சம்பந்தப்பட்ட வர் கள் இனிமேலாவது இது போன்ற தவறுகளைச் செய்யாது முன் கூட் டியே தமது கடமைகளைச் செய்யக்கடவர் என்று கூறி ஆசிரியர் அவர்கட்கு எனது தனிப்பட்ட நன்றி கலந்த பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சிவஸ்ரீ இராம .ஸ்ரீதரக்
குரு[illegible]
விநா[illegible]
பிரதமகுரு, கொடிகாமம்.

## வீட்டுக்கு வராதீர்!

கூட்டமைப்புக்குள் குத்துவெட்டுக்கள் குளறுபடிகள் இருந்தாலும் கூட்டமைப்பே தமிழர், தமிழரே கூட்டமைப்பு என்பது எழுதப்படாத விதி. எத்தனை பேரவைகள் இடையியே தோன்றினாலும் தமிழ் மக்களின் மனதைச் சற்றும் அசைக்க முடியாது. தனிமைப்பட்டவர், தடுமாறி விழுந்தவர் அரசியல் அநாதைகள் யாரையும் பேரவையில் சேர்த்துக் கொள்ளுங்கள். ஆனால் காட்டிக் கொடுத்து புலிகளை அழித்த கருணாகரர்கள்; மகிந்த ராணுவத் துடன் சேர்ந்து மக்களை கடத் திக் கொலை செய்து, மகிந்த மறுபடி வந்தால் காலடியில் விழும் தேவானந்தாக்கள்; அரசியல் கதிரைக்காக எந்த அடாவடியும் செய்யும் சாக்கடைகள் ஆகியோரை உதறித் தள்ளிவிடுங்கள்.

ஐயா முதலமைச்சரே! உயர் நீதி மன்ற நீதியரசரே! தாழ்மையான வேண்டுகோள். காட்டிக்கொடுத்த காக்கை வன்னியர்கள், கொலைகாரர்களை தமிழர் பேரவையில் சேர்த்தால் தமிழர் என்ற பதத்துக்கே இழுக்கு. நாம் தமிழர் என்று ஒற்றுமையாகக் குரல் கொடுங்கள். மக்கள் நிலையை உணருங்கள். கலங்கிய குட்டையில் மீன் பிடிக்காதீர்கள். குளத்தைக் கலக்கி பேரினவாதப் பருந்துகளுக்கு இரையாக்காதீர்கள். தன்மானக் குத்து [illegible] கொண்டலைந்து [illegible] வீட்டுக்கு வராதீர்!"

கந்த பேரின்பம், தமிழன்.

## இது அதிகாரிகளின் கவனத்துக்கு

மனதை ஆத்திரமுறவைக்கும் ஒரு சம்பவம் தென் மராட்சிப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் நடந் தேறியுள்ளது. ஓர் இளம் சங்கீத ஆசிரியை ஆண்டு - 06 இல் கற்கும் இரண்டு மாணவிகளை சங்கீதம் படிப்பித்த முதல் நாளே வகுப்பிலிருந்து வெளி யேற் றியதோடு இப் பாடசாலைக்கு வரவேண்டாம், வேறு பாடசாலையைப் பார்த்துக்கொள்ளுங்கள் எனக்கூறி அனுப்பியுள்ளார். இத்தனைக்கும் அப்பிள்ளைகள் செய்த தவறு என்ன? அந்தப் பாடசாலை கடந்த 4ஆம் திகதி ஆரம்பமாகியது.

இரண்டு நாள்களின் பின்னர் இடமாற்றம் பெற்று வந்த அந்தச் சங்கீத ஆசிரியை முதன் முதலாக சங்கீதம் கற்பிக்க ஆண்டு 06 வகுப்பு அறைக்குள் நுழைந்து சங்கீ தத்தை பற் றிய வினாவை மாண விகளிடம் கேட்டுள் ளார். அந்த இரு மாணவிகளும் பதில் அளிக்க தவறியதால் ஆத் திரமடைந்த இளம் ஆசிரியை இரு மாண விகளையும் அடித்து வகுப்புக்கு வெளியே அனுப் பியதோடு மட்டுமல்லாது இனிமேல் இப்பாடசாலைக்கு நான் இருக்கும் வரை வரப் படாது, வேறு பாடசாலை யைப் பார்த்துக் கொள் ளுங்கள் என்று விரட்டியுள்ளார். செய்வதறியாத இருமாணவிகளும் அழுதபடி வீடுவந்து சேர்ந் துள்ளனர். பாடசாலைக்குப் போக முடியாது தவிக்கின்றனர். இந்தப் பிள்ளைகளை இப்படியா தண்டிப்பது? இந்த ஆசிரியைக்குப் பொறுமையாகக் கற்பிக்க முடியாதா? உரிய அதிகாரிகளின் கவனத்துக்கு இது சமர்ப் பணம்.

பாதிக்கப்பட்டமாணவிகள் சார்பாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் தலைமையகம் மீது துருக்கியில் குண்டுத் தாக்குதல்

## 5பேர் சாவு; 36 பேர் வரை காயம்

அங்காரா, ஜன.15

துருக்கியில் தென் கிழக்குப் பொலிஸ் தலைமையகம் கார் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது. இந்தத் தாக்குதலில் 5 பேர் கொல்லப்பட்டதுடன், 36 பேர் காயமடைந்தனர்.

சினார் மாவட்டத்தில் டியர்பாகிர் மாகாணத்தில் தாக்குதல் இடம்பெற்றது.

கட்டட இடிபாடுகளில் யாராவது சிக்கி இருக்கக்கூடும் என அஞ்சுவதால் மீட்புப் பணியாளர்கள் தொடர்ந்து தேடுதல் நடத்தி வருகின்றனர்.

குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி போராளிகள் இந்தத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். இதுவரை எந்தப் போராட்ட அமைப்பும் பொறுப்பு கூறவில்லை. குர்திஸ் மாகாணத்தில் முன்னணியாகசெயற்பட்டு வருபவர்கள் குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியினராவர். சமீபகாலமாக குறித்த போராளிக்குழுவினருக்கும், துருக்கி இராணுவப் படையினருக்கும் இடையில் போராட்டங்களும் வன்முறைச் சம்பவங்களும் நிகழ்ந்த வண்ணம் உள்ளன.

பொலிஸ்காரியாலய வாசலில் குண்டு வெடிப்பு இடம் பெற்றாலும், அருகில் வசிக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் வீடுகளையும் அது தாக்கியது. இதன் பின்பு ரொக்கட்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர் என ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

ஐ.எஸ் அமைப்பினருக்கு எதிரான போரில் அமெரிக்கப் படையினருடன் துருக்கி இணைந்து போரிட்டு வருகிறது. எதுவாயினும் குர்திஸ்தான் போராளிகள் தலைநகர் அங்காராவை குறிவைத்து தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (த-ரி4)





# ஐந்து ஆசிய நாடுகள் கடல் மாசுறக் காரண

*பெருங்கடல் பாதுகாப்பு அமைப்பு தெரிவிப்பு*

பாங்கொக், ஜன.15

சமுத்திரங்களினுள் குப்பையை வீசுதல் அதிகரித்து வருகிறது. அமெரிக்காவின் பெருங்கடல் பாதுகாப்பு அமைப்பினரின் அறிக்கையில், கொட்டப்படும் கழிவுகளில் 95 சதவீதம் நிலத்தை சென்று அடைகின்றன என குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் நீர்நிலைகள் மாசடைவதுடன், உயிரின அழிவும் ஏற்படும். இதில் அதிக பங்கு வகிப்பது ஆசிய நாடுகள் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உலகின் 5 நாடுகள் ஏனைய அனைத்து நாடுகளின் ஒட்டுமொத்தக் கழிவுகளை விட அதிகமான கழிவுகளை வெளியேற்றுவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சீனா, இந்தோனேசியா, பிலிபைன்ஸ், தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகள் சமுத்திரங்களில்

> இந்த நிலை மோசமா
> சூழல், பொருளாதார வி
> தோற்று விக்கும் என
> பாதுகாப்பு திட்ட இயக்குநர் நிக்
> மலோஸ் தெரிவித்தார். இவ்
> தொடர்ச்சியான செயற்பாடுகள
> நிலை நெருக்கடிகளுக்கும்,
> களுக்கும் தொடர்ந்து முகம்
> கொடுக்க வேண்டி இருக்கும்.

வீசப்படும் கழிவுகளில் 60 சதவீத
றன.


இந்த நிலையில் இருந்தால், 2025 அ

# ஜகார்த்தாவில் நேற்று தொடர் குண்டுத் தாக்குதல்

*சிவிலியன்கள் 6 பேர் சாவு*

ஜகார்த்தா, ஜன.15

இந்தோனேசியத் தலைநகர் ஜகாத்தாவில் பெரும் குண்டுவெடிப்புகள் இடம் பெற்றன. இதனைத் தொடர்ந்துதுப்பாக்கிப்பிரயோகமும் இடம்பெற்றது. நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவத்தில் குறைந்தது 6 பேர் கொல்லப்பட்டனர்.



விற்பனை மையம், ஜனாதிபதி இல்லத்துக்கு அருகிலும், ஐ.நா அலுவலகத்திலும் குண்டு வெடிப்புகள் இடம் பெற்றன. ஆனால் இந்தத்தாக்குதலை நடத்து வது யார், எதற்காக என்பது இதுவரை தெரியவில்லை எனப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

ஐ.எஸ். அமைப்பினரால் நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பின்னர் இடம்பெற்றுள்ள பெரிய தாக்குதல் இதுவென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குண்டுவெடிப்புகள் நிகழலாம் என்ற அச்சம் நிலவுவதால் மக்களை வீடுகளில் அல்லது பாதுகாப்பான இடங்களில் இருக்கும் படி பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவுறுத்தியுள்ளார்.

ஐ.நா. அலுவலகர் ஜெரமி டக்ளஸ் கூறுகையில், 150 மீற்றர் தொலைவில் முதல் குண்டுவெடிப்பு சத்தம் கேட்டது. உடனே நாம் அனைவரும் அலுவலகக் கட்டடத்துக்குள் தஞ்சம் புகுந்தோம். மீண்டும் மூன்றாவது குண்டுவெடிப்புச் சத்தம் கேட்டது. தொடர்ச்சியாக நான்காவது, ஐந்தாவது, ஆறாவது வெடிப்புச் சத்தங்கள் கேட்டன. தற்போது தெருவில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்கின்றன என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று
# புதை படிமா

லண்டன், ஜன.15

வரலாற்றுக்கு முந்தைய ஒட்ட
பிடிக்கப்பட்டது. 10 ஆயிரம் ஆண்
கருதப்படும் இந்த விலங்கு அ
தில் பெரியது ஆகும்.

இந்த ஒட்டகச் சிவிங்கிக்கு தும்பி
டிஜிற்றல் தொழில்நுட்பத்தினா
செய்ததில் அது பிரமாண்டமான
தது தெரிய வந்துள்ளது. முத
1830 ஆம் ஆண்டு கண்டெடு
வெளியிடப்பட்ட தகவல் குறிப்பி
யைக் கொண்ட பிரமாண்டமான
தற்போதைய ஆராய்ச்சிகளின்
தெரிய வந்துள்ளது.





க்களே
ணம்

சமான சுற் றுச்
தார விளைவை
என பெருங்கடல்
ர் நிக்கோலஸ்
இவ்வாறான
டுகளால் பருவ
கும், மாற்றங்
முகம்
கும். ”
தவீதத்தை வீசுகின்
2025 ஆம் ஆண்டு

1 தொன் பிளாஸ்ரிக்குக்கு 3 தொன் மீன்கள் என்ற எண்ணிக்கையில் இருக்கும். இந்த நிலை மோசமான சுற்றுச்சூழல், பொருளாதார விளைவை தோற்றுவிக்கும் என பெருங்கடல் பாதுகாப்பு திட்ட இயக்குனர் நிக்கோலஸ் மலோஸ் தெரிவித்தார். ஒவ்வொரு வருடமும் 1 மெற்றிக் தொன் கழிவுகள் கடலில் கொட்டப்படுகின்றன. இந்த நிலை தொடருமாக இருந்தால் இன்னும் 10 வருடங்களில் சமுத்திரங்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாக இருக்கும் என பெருங்கடல் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்தது. இவ்வாறான தொடர்ச்சியான செயற்பாடுகளால் பருவ நிலை நெருக்கடிகளுக்கும், மாற்றங்களுக்கும் தொடர்ந்து முகம் கொடுக்க வேண்டி இருக்கும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-ரி4)

# ஐக்கிய இராச்சியத்தில் கடும் பனிப் பொழிவு

## இயல்பு வாழ்க்கை பாதிப்பு

லண்டன், ஜன.15

ஐக்கிய இராச்சியத்தில் கடும் பனிப் பொழிவு இடம் பெற்று வருகின்றது. இதனால் சூழல் வெப்பநிலை மறை 15 பாகை செல்சியஸ்சை எட்டியுள்ளது.

பல அங்குலங்கள் உயரத்திற்குப் பனி படர்ந்திருப்பதால் மக்களின் இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது. சாலைகள், ரயில் தண்டவாளங்கள் என்பன பனியால் மூடப்பட்டுள்ளன. வட இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, ஷாட்லாந்து ஆகிய பிரதேசங்களில் பனிப் பொழிவுக்கான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. போக்கு வரத்துகளை மேற்கொள்வதற்கும், மின்சாரம் வழங்குவ ஐக்கிய இராச்சியத்தின் பலபகுதிகள் மறை 15 பாகை செல்சியஸை அடைந்துள்ளது என வானியல் நிபுணர் எமா ஷெர்ப்லெஸ் தெரிவித்தார். பல இடங்களில் இரவு வேளைகள் உறை நிலையில் காணப்படுகின்றன. இங்கிலாந்து, வேல்ஸ் பிரதேசங்களில் மழை வீழ்ச்சி காணப்படும். மேலும் 10 சென்ரிமீற்றர் உயரமான பனிப்பொழிவு இடம்பெறலாம் என அறிவுறுத்தப்பட்டது.

மக்கள் வீடுகளில் முடங்கியுள்ளனர். வீட்டின் உள் வெப்பநிலையை குறைந்தது 18 பாகை செல்சியஸ் வெப்பத்தை பேணவேண்டிய கட்டாயமுள்ளது. நோய்த் தொற்றுகளில் இருந்து




தற்கும் அதிகாரிகள் பெரும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர். தம்மை பாதுகாக்க மக்கள் திண்டாடி வருகின்றனர். (த-ரி4)

# தனது சகோதரர்களை தீ விபத்திலிருந்து காப்பாற்றினார் ஒன்பது வயதுச் சிறுமி

வொஷிங்டன், ஜன.15

ஜோர்ஜியாவில் 9 வயதுச் சிறுமி தன்னையும் தனது 2 உடன்பிறந்தவர்களையும் தீ விபத்தில் இருந்து பாதுகாத்துள்ளார். தாயாரும், இவரது நண்பரும் வீட்டில் இல்லாத சந்தர்ப்பத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டினுள் தீ விபத்து ஏற்பட்டுள்ளதை அவதானித்த சிறுமி, சகோதரங்களின் அறைக்குச் சென்று உறங்கிக் கொண்டிருந்த ஒரு வயது தம்பியையும், 3 வயது தங்கையையும் அயலவரிடம் தூக்கிச் சென்று பாதுகாத்துள்ளார். இதன் பின்னர் தீயைப் பார்த்த அயல இந்த துணிகரச் செயலுக்காக அந்நாட்டு ஊடகங்கள் சிறுமியைப் பாராட்டியுள்ளன. சிறுவர்களின் தாயை வேலையில் இருந்து கூட்டிவருவதற்காக அவரின் ஆண் நண்பன் வெளியில் சென்றவேளை இந்த விபத்து இடம்பெற்றது. குழந்தைகளை தனியே விட்டுச் சென்றமைக்காகவும், கொடுமைப்படுத்தியதற்காகவும் தாயின் நண்பர் சிறையில் அடைக்கப்பட்டதுடன் 9 ஆயிரத்து 600 டொலர் குற்றப்பணம் அறவிடப்பட்டது. சிறுவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆனால் இந்த விபத்துக்



வர் அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்தார். உடனேயே சம்பவ இடத்திற்கு வந்த அதிகாரிகள் தீயை அணைத்தனர். குறித்த காரணம் இன்னும் அறியப்படவில்லை. விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. (த-ரி4)

# றுக்கு முந்தைய ஒட்டகச் சிவிங்கியின் மங்கள் நவீன கருவிகளால் ஆராய்வு

ய ஒட்டகச்சிவிங்கியின் படிமம் கண்டு
ம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்ததாகக்
ங்கு அசைபோடும் வர்க்கத்தில் உருவத்

தும்பிக்கை இருந்ததாக நம்பப்படுகிறது.
த்தினூடு எலும்புகளைப் பரிசோதனை
டமான உருவமைப்பைக் கொண்டிருந்
. முதல்முறையாக இதன் படிமங்கள்
னடுக்கப்பட்டன. 1836 ஆம் ஆண்டு
குறிப்பில் யானை போன்ற, தும்பிக்கை
டமான விலங்கு குறிப்பிடப்பட்டிருந்தது.
களின் படி அந்தத் தகவல் தவறு எனத்

தற்போதைய ஒட்டகச்சிவிங்கிக்கு தொடர்புள்ள இந்த இனம் ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்துள்ளது எனப் பேராசிரியர் கிறிஸ்ரோபர் பாசு தெரிவித்தார். ஆபிரிக்கா, ஆசியக் கண்டங்களில் வாழ்ந்த இவை, தற்கால ஒட்டகச்சிவிங்கி போன்று அல்லாமல் குட்டையான கழுத்துடன், பருத்த கால்களைக் கொண்டது ஆகும். 1800 களில் இந்த இனத்தின் எலும்புகள் கண்டுபிடிக்கப்படுகையில் ஒட்டகச் சிவிங்கிக்கும், யானைக்கும் தொடர்பு இருக்கலாம் என கருதினர். ஆனால் இந்த விலங்கு அவ்வாறில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக ஆமலும் தெரிவித்தார்.

உடற் கூற்றுப் பரிசோதனையில் இருந்து ஆயிரத்து 246 கிலோ எடையுள்ளது என அறிய... இருந்து இது அரிதான விலங்கு என அவர் குறிப்பிட்டார்.
(த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலையூர்
செல்வி மிஷாந்தி செல்வராஜா

# வாழக் கற்றுக்கொள்

மனிதா, வாழக்கற்றுக்கொள். இன்றைய காலகட்டத்தில் எமது குடாநாட்டில் அதிகளவான தற்கொலைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கான காரணம்தான் என்ன? என்று நோக்குமிடத்து தாம் வாழும் வாழ்க்கை மீது நம்பிக்கையின்மை, பிரச்சினைகளைச் சந்திக்கத் துணிவின்மை போன்ற எதிர்மறையான காரணிகளே காரணமாகின்றன. இத்தகையான, எதிர்மறையான காரணிகளை உள ரீதியாக அகற்றுவதற்கு முதலில் மனிதர்களான நாம் அனைவரும் மனித வாழ்க்கையின் மகத்துவம் பற்றி அறிந்து கொள்ளவும் புரிந்து கொள்ளவும் வேண்டும்.

எமது மூதாதையான புலவர் ஔவைப் பாட்டி அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என மனிதப் பிறவியின் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறுகின்றார். இந்த அரிதான மானிடப் பிறவியை பெற்ற நாம் அனைவரும் வாழ்வதற்கு வாழ்வாங்கு வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். எமது ஆரோக்கியம் என்பது வெறுமனே உடல் ரீதியான போசாக்கான உணவுகளை உட்கொண்டு உடலை வளர்த்துக் கொள்வது மட்டுமல்ல. உள ரீதியான ஆரோக்கியமான நேரான சிந்தனைகளை வளர்த்துக்கொள்ளுதல் ஆகும். எமது மனதை எவ்வளவுக்குப் பலப்படுத்திக் கொள்கின்றோமே அதுவே எமது தற்துணிவு, தன்னம்பிக்கைக்கு காரணிகளாக அமைகின்றன. இதனால்தான் துணிவே துணை என்று கூறப்படுகின்றது. தன்னம்பிக்கைதான் ஒவ்வொரு மனிதர்களையும் பிரச்சினைகளில் இருந்து வாழ வழி சமைக்கின்றது. பிரச்சினைகளைச் சந்திக்காமல் வாழும் வாழ்க்கையால் எந்தவித அனுபவமும் ஏற்படுவதில்லை. வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு பிரச்சினைகளும் எமக்குப் புதிய புதிய அனுபவ அறிவைத் தருகின்றன. புதிய அனுபவங்களில் இருந்து தான் எம்மை நாம் வளர்த்துக் கொள்ள முடியும். ஆனால் நாம் பிரச்சினைகளை எதிர்கொள்ளத் தெரியாமல், முடியாமல் எதிர்மறையாகச் சிந்தித்து, எதிர்மறையான பிறழ்வு நடத்தைகளில் ஈடுபட்டு தற்கொலை செய்யும் அளவுக்கு எம்மை நாம் உட்படுத்துகின்றோம். இதனால் ஏற்படும் விளைவுதான் என்ன? சிந்தித்துப் பாருங்கள். தற்கொலை செய்து உயிரை விடும் அளவுக்கு துணியும் நாங்கள் ஏன் பிரச்சினைகளை எதிர்கொண்டு வாழ்க்கையை வாழ வேண்டும் என்று நேரான முடிவு எடுப்பதில்லை?



மனம் தான் மார்க்கம் என்பார்கள். மனம் போன போக்கில் எல்லா முடிவுகளையும் எடுக்கக்கூடாது. நிதானமாகச் சிந்தித்து அவசரப்படாமல் நல்லது எது? கெட்டது எது? என இனம் கண்டு எமது மனதுக்குத் தேவையான உள நிவாரணிகளை வழங்கி வாழ்க்கையை மகிழ்ச்சியாக வாழ வேண்டும்.

எமக்கென்ற இலட்சியக் கனவுடன் வாழ்க்கையை வாழுதல் வேண்டும். ஒவ்வொரு நிமிடங்களையும் சொர்க்கமாக மாற்றும் தன்மை எம்மிடமே உண்டு. பிறரை நம்பி வாழும் வாழ்க்கையால் தான் நாம் பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடுகிறது. உதாரணமாக தெருவில் நாம் ஓர் இடத்தை நோக்கிச் செல்லும்போது, வழி யில் பல மேடு பள்ளங்களையும் தாண்டி யும்; பல வாகன நெரிசல்களைத் தாண்டி யும் தான் நாம் செல்ல வேண்டிய இடத் துக்குச் செல்கின்றோம். அதேபோலத்தான் எமது வாழ்க்கைப் பயணத்திலும் பல பிரச்சினைகளைத் தாண்டித்தான் எமது இலக்கை அடையவேண்டியுள்ளது. அத்தகையவாழ்க்கை தான் மிகவும் இனிப்பானதாக இருக்கும்.

அதாவது கடல்மேல் முத்து மிதந்தால் முத்துக்குப் பெறுமதி இருக்காது. அது தினமும் சுலபமாகப் பெற்றுவிடலாம் என்ற எண்ணத்தில் முயற்சி செய்யாமல் சோம்பேறித்தனமாக இருந்து விடுவோம். கடலுக்கடியில் முத்து இருப்பதால் தான் கடலில் மூழ்கி முயற்சி என்னும் பயிற்சியால் பெற்றிருக்கொள்கின்றோம். அவ்வாறு கஷ்டப்பட்டு பெற்ற பொருளை இலகுவில் தொலைக்கவும் மாட்டோம். எளிதில் பிறருக்குத் தூக்கிக் கொடுத்திடவும் மாட்டோம். வாழ்க்கையும் அவ்வாறே. வெறும் உடல் ரீதியான உணர்வுகளுக்கு கட்டுப்பட்டு முடி வெடுத்து செயற்பட்டு அழுது புலம்புவதைவிட, அறிவுபூர்வமாக சிந்தித்து எமது வாழ்க்கையை செம்மையாக வாழ வழிகளைத் தேடிக்கண்டு பிடித்து, நல்ல நல்ல நூல்களை வாசித்தும், இறை வழிபாட்டில் ஈடுபட்டும் வாழ்க்கையை வாழக்கற்றுக் கொள்வோமாக.

> **"எமது மூதாதையான புலவர் ஔவைப்பாட்டி அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என மனிதப் பிறவியின் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறுகின்றார். இந்த அரிதான மானிடப் பிறவியை பெற்ற நாம் அனைவரும் வாழ்வதற்கு வாழ்வாங்கு வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்."**




## கடகம்

விடாமுயற்சியுடன் செயல்படும் திறனும் உயர்ந்த இலட்சியங்களும் கொண்ட கடக ராசி நேயர்களே! இந்த 2016-ஆம் ஆண்டின் தொடக்கமானது உங்களுக்கு அற்புதமான பலன்களை உண்டாக்கும். உங்கள் ஜென்ம ராசிக்கு பஞ்சம ஸ்தானமான 5ஆம் வீட்டில் சனி பகவான் சஞ்சாரம் செய்வது சாதகமான அமைப்பாகும். ராசியாதிபதி சந்திரனுக்கு நட்புக் கிரகமான குரு பகவானும் 02-08-2016 வரை தனஸ்தானமான 2-ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்வதால் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். திருமணம் போன்ற சுபகாரியங்கள் கைகூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தொழில், வியாபாரரீதியாகவும் உயர்வுகளும் மேன்மைகளும் உண்டாகும். சிலருக்கு அசையா சொத்துகளால் அனுகூலம், வண்டி வாகனச் சேர்க்கை போன்ற யாவும் அமையும். 02-08-2016 முதல் குரு பகவான் முயற்சி ஸ்தானமான 3-ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்யவிருப்பதால் பணவிடயத்தில் சற்று கவனமாக இருப்பது, பெரிய முதலீடுகளை செய்து தொடங்கநினைக்கும் காரியங்களைத் தள்ளிவைப்பது நல்லது. எதிர்பாராத வீண் விரயங்களையும் எதிர்கொள்ள நேரிடும். சர்ப்பக் கிரகங்களான ராகு 2-லும், கேது 8லும் 08-01-2016 முதல் சஞ்சாரம் செய்யவிருப்பது சாதகமான அமைப்பு என்று கூறமுடியாது. குடும்பத்தில் தேவையற்ற வாக்குவாதங்கள், கணவன்- மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும். உடல்நிலை பாதிப்புகளால் மருத்துவச் செலவுகளை எதிர்கொள்ள வேண்டிவரும். நெருங்கியவர்களை அனுசரித்து நடப்பது, பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது, முன்கோபத்தை குறைத்துக்கொள்வது உத்தமம். ஆரோக்கியத்தில் கவனம் எடுத்துக்கொள்வதும் நல்லது.

**உடல் ஆரோக்கியம்**
உடல் ஆரோக்கியத்தில் அடிக்கடி பாதிப்புகள் ஏற்பட்டாலும் சிறிய மருத்துவச் செலவுகளுக்குப்பின் குணமடையும். அன்றாடப் பணிகளில் சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். குடும்பத்திலுள்ளவர்கள் ஓரளவுக்கு சுமாராக இருப்பார்கள். ஓகஸ்ட் மாதம் முதல் சில எதிர்பாராத பயணங்களால் அலைச்சல் ஏற்படும்.

**குடும்பம், பொருளாதார நிலை**
குடும்பத்தில் கணவன்- மனைவி விட்டுக்கொடுத்து நடந்துகொண்டால் ஒற்றுமை சிறப்பாக இருக்கும். பணவரவுகள் ஆண்டின் முற்பாதியில் அற்புதமாக அமையும். ஓகஸ்ட் மாதம் முதல் எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும் என்பதால் முடிந்த வரையில் ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பது, பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது.

**உத்தியோகம்**
ஆண்டின் முற்பாதியில் எதிர்பார்க்கும் உயர்வுகள் கிடைக்கப்பெறும். வேலைப் பளு சற்று அதிகரித்தாலும் உடனிருப் பவர்கள் சாதகமாக இருப்பதால் எதையும் சமாளித்து ஏற்றம்பெறுவீர்கள். ஓகஸ்ட் மாதம் முதல் எதிர்பாராத இடமாற்றங்களால் சிலருக்கு அலைச்சல்கள் அதிகரிப்பதால் நேரத்துக்கு உண்ணமுடியாத சூழ்நிலைகள் ஏற்படும்.

**தொழில், வியாபாரம்**
தொழில், வியாபாரத்தில் ஆண்டின் முற்பாதியில் லாபமும் முன்னேற்றமும் பெருகும். பெரிய அளவில் புதிய வாய்ப்புகள் கிடைக்கப் பெற்று அபிவிருத்தி உயர்வடையும் என்றாலும், ஓகஸ்ட் மாதம் முதல் பெரிய முதலீட்டில் செய்ய நினைக்கும் காரியங்களில் சிந்தித்துச் செயல்படுவது நன்மை தரும். வேலையாள்களிடமும், கூட்டாளிகளிடமும் விட்டுக்கொடுத்து நடப்பது மூலம் வீண் விரயங்கள் குறையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொடுக்கல்- வாங்கல்**
கொமிஷன், ஏஜென்ஸி போன்றவற்றில் ஆண்டின் முற்பாதியில் லாபமும் அனுகூலமும் உண்டாகும். கொடுக்கல்- வாங்கல்களில் நல்ல லாபம் கிட்டும். ஓகஸ்ட் மாதம் முதல் எதிலும் சற்று சிந்தித்துச் செயல்பட்டால் மட்டுமே பயனடைய முடியும். கொடுத்த கடன்களை வசூலிப்பதில் சிக்கல்கள் ஏற்படுமென்பதால் பெரிய தொகைகளை முதலீடு செய்வதைத் தவிர்க்கவும்.

**அரசியல்**
எடுக்கும் காரியங்களை சிறப்பாக செய்துமுடித்து ஏற்றம் பெறமுடியும். மக்களின் ஆதரவு சிறப்பாக இருப்பதால் எதையும் சாதிக்க முடியுமென்றாலும், கட்சிக்காக செய்யும் செலவுகளில் சற்று நிதானத்தைக் கடைப்பிடித்தல் நன்று. ஓகஸ்ட் மாதம்முதல் உடனிருப்பவர்களின் முகஸ்துதிகளுக்கு மயங்காமல் சிந்தித்துச் செயல்பட்டால் பதவிகளை சிறந்த முறையில் காப்பாற்றிக்கொள்ள முடியும்.

**கலைஞர்கள்**
பணவரவுகள் திருப்தியளிப்பதாக அமையும். வாய்ப்புகள் தேடிவரும். பயணங்களால் மகிழ்ச்சியும் சாதக பலனும் உண்டாகும். ஓகஸ்ட் மாதம் முதல் முடிந்த வரை தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்த்து உடனிருப்பவர்களை அனுசரித்து நடந்து கொண்டால் நற்பயன்கள் அமையும். பத்திரிகைகளில் வரும் தேவையற்ற கிசுகிசுக்களால் மனச் சஞ்சலங்கள் ஏற்படும்.

(தொடரும்)



# முல்லைத்தீவு மாவட்டத்தில்

# காலூன்ற முயற்சிக்கும் பெரும்பான்மையினர்

தனம்

**மா**வீரன் பண்டார வன்னியன் பரம்பரையினரும் அவர்களின் வழிவழி வந்தவர்களும்வாழ்ந்த இடத்தையும் பண்டாரவன்னியன் 1803 ஆம் ஆண்டு வரை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த கற்சிலைமடு கிராமத்தையும் அங்குள்ள ஆலயங்களையும் அநுராதபுரத்தின் ஒரு பகுதி எனவும் 1300 ஆண்டுகளுக்கு முன் புத்த கோயில்கள் இருந்ததாகவும் விளம்பரப்படுத்துவது வேடிக்கையாக இருக்கிறது என அக்கால முதியோர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

**ஆக்கிரமிக்கப்பட்ட ஆலயம்**

கற்சிலைமடுவில் உள்ள தான்தோன்றீஸ்வரர் ஆலய வரலாறு வெளியானதையடுத்து இந்த ஆலயத்தை ஆக்கிரமிப்பு செய்தது மட்டுமல்லாது, இந்த இடம் அநுராதபுரத்தின் ஒரு பகுதியெனவும் 1300 ஆண்டுகளுக்கு முன் பெரும்பான்மையினர் இங்கு வசித்ததுடன் புத்த கோயில்களும் இருந்ததாகக் குறிப்பிட்டு விளம்பரப்பலகை போடப்பட்டதைக் கண்டித்து மேற்கண்டவாறு அவர்கள் தெரிவித்தனர். அந்தக் காலத்து பரம்பரையில் உள்ள சிலர் தற்போது 6ஆவது, 7ஆவது பரம்பரையாக இருந்து வருகின்றனர். அவர்கள் கூற்றின்படி எமது வன்னி மண் எவருக்கும் அடிபணியாது மண்டியிடாது திறை செலுத்தாது தன்மானம் மிக்க தமிழ் மக்கள் வாழ்ந்த இடமாக இருந்ததுடன் சிங்கள இனத்தவர் வாழ்ந்ததாகக் கூறும் எந்த ஒரு தடயமும் இல்லைஎனவும் அவர்கள் தெரிவித்தனர். கற்சிலைமடுவிலே தற்போதும் வசித்து வரும் அரியகுட்டி நாகமணி, ஆ.குமாரசுவாமி, ஆ.சேனாதிராசா போன்றோர் அக்காலத்தில் வசித்தவர்களின் வழிவழி வந்த 6ஆவது, 7ஆவது சந்ததியினர் ஆவார். அந்தக் காலத்தில் கோழிக்கு ஒரு குளமும் உண்டு என்பதற்கமைய ஏராளமான குளங்கள் உண்டு. முத்து ஐயன்கட்டு குளத்துக்கு மேலாக ஐயன் பெருமாள் என்ற ஆலயமும் அதனை அண்டிய ஆனைவிழுந்தான் கற்குளம் போன்றபகுதிகளில் எமது பரம்பரையினர் வாழ்ந்த தடயங்களும் உண்டு. அந்தக் காலத்தில் குளக்கோட்டன் என்னும் அரசன் பூதங்களைப் பயன்படுத்தி குளங்களைக் கட்டுவித்ததாகவும் பூதங்களைத் துரத்துவதற்கு ஏதுவாக முதிரை மரங்களைத் தறித்து சிறு குற்றிகளாக்கி பட்டையை நீக்கிவிட்டு குளங்களிலே போட்டு விட்டு அவைகளை எடுத்துக் கரைசேர்க்கும்படி பூதங்களுக்கு கட்டளையிட்டதாகவும் அந்தப் பூதங்களுக்கு கைவிரல்கள் இல்லாமையால் அவைகளை எடுப்பதற்கு முயற்சி செய்யும் போது மரங்கள் வழுக்கி வீழ்ந்தால் கரை சேர்க்க முடியாத பூதங்கள் எவருக்கும் தெரியாது போய்விட்டதாகவும் வரலாறுகள் தெரிவிக்கின்றன. இதனை எமது மூதாதையர்கள் கூறவும் கேட்டிருக்கிறோம். இவை மட்டுமல்ல ஒரு சில வருடங்களுக்கு முன் இறந்தவர்களான செல்லன், செல்லர் அப்பா, நமசிவாயம், சங்கரப்பிள்ளை, வல்லிபுரம் ஐயம் பெருமான், சின்னர் என அழைக்கப்படும் ஆறுமுகம் அருளப்பா எனக் கூறப்படும் சுப்பிரமணியம் இளையகுட்டி செல்லக்குட்டி என அழைக்கப்படும் பரமநாதர் வேலாயுதம், மூத்தவி சங்கரி என பலர் அந்தக் காலத்தில் வாழ்ந்தவர்களின் பரம்பரையினர். இவர்கள் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் அருகிலே வாழ்ந்தவர்கள்.

**2000 வருடங்களுக்கும் மேலாக வாழ்ந்தவர்கள்**

இந்த இடத்திலே உள்ள பாடசாலையிலே கல்வி கற்றவர்கள் இவர்களின் பரம்பரையினர். சுமார் 2000 வருடங்களுக்கு மேல் வாழ்ந்து வந்தவர்கள் என்பது தெரிகின்றது. நாகமணி என்பவர் இப்போதும் இருக்கிறார். இவரது பரம்பரையினர் பண்டாரவன்னியன் காலத்தில் வாழ்ந்த அரசர் குடும்பங்களுக்கு மட்டுமல்லாது மக்களுக்கும் வைத்திய சேவையை வழங்கியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். வடக்குப் பக்கமாக மன்னாகண்டலிலே தமிழ் மன்னர்கள் வாழ்ந்த இடத்துக்குச் சான்றாக கன்னியர்கேணி என்ற இடம் இப்போது குளமாக உள்ளது. கிழக்குப் பகுதியிலே அம்மக்கள் பிதிர்க்கடன்கள் நிறைவேற்றும் கெருடமடுக்கேணி உள்ளது. தெற்குப்பக்கமாக பண்டாரவன்னியனின் காதலியை நினைவுபடுத்தும் குருவிச்சை ஆறு, மேற்கே வன்னி விளாங்குளம் போன்ற சான்றுள் வரலாறுகள் படைத்த இடங்கள் உண்டு. இந்தப் பகுதியில் சிங்களவர் வாழ்ந்ததாகக் கூறப்படும் எந்த ஒரு தடயமோ அல்லது சான்றுகளோ கிடையாது. இவைகள் இவ்வாறு இருக்க 1300 ஆண்டுகளுக்கு முன் சிங்களவர் வாழ்ந்ததாகவும் புத்தகோயில்கள் இருந்ததா என்பது மிகவும் வேதனை அளிக்கிறது எனப் பலர் தெரிவித்தனர்.

> இராணுவத்தினர் மன்னா கண்டலில் உள்ள விவசாயிகளின் கூட் டுறவுச் சங்கத்தையும் வளாகத்தையும் கைப்பற்றியது மட்டுமல்லாது மாபெரும் புத்தர் சிலையையும் வைத்துள்ளார்கள். இதனால் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு சங்க நடவடிக்கைகளில் இடையூறுகள் ஏற்படுகின்றன.

தற்போது இராணுவத்தினர் மன்னா கண்டலில் உள்ள விவசாயிகளின் கூட்டுறவுச் சங்கத்தையும் வளாகத்தையும் கைப்பற்றியது மட்டுமல்லாது மாபெரும் புத்தர் சிலையையும் வைத்துள்ளார்கள். இதனால் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு சங்க நடவடிக்கைகளில் இடையூறுகள் ஏற்படுகின்றன. அது மட்டுமல்ல, முத்து ஐயன்கட்டிலே மக்களின் காணியை அபகரித்து மாபெரும் இராணுவ முகாம் ஒட்டுசுட்டான் நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் ஒட்டுசுட்டான் மக்களுக்கு இருந்த ஒரே ஒரு மயானம் என்பவற்றை ஆக்கிரமித்து புத்த கோயில்கள் கட்டப்பட்டு மாபெரும் முகாம். இவை மட்டுமல்ல 14ஆம் கட்டை வாவெட்டி மலையை அண்டிய பகுதிகளில் பெரும்பான்மையினர் மலைகள் உடைத்து கல் அகழ்ந்து பெரிய குழிகளை ஏற்படுத்தி வருவதால் வெடி அதிர்வால் நீர் நிலைகள் வற்றி இல்லாது போதல், வீடுகள் வெடிப்பு ஏற்படல் போன்ற இடர்களை மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர். இப்படியாக இராணுவ ஆக்கிரமிப்புக்கள் தொடரும் இந்த வேளை இப்பகுதி பெரும்பான்மை இனத்தவர்களுக்கு சொந்தமானது என்பது எவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை என்பது புலனாகிறது. எமது வன்னி மண்ணில் ஆக்கிரமித்ததுடன் மட்டுமல்லாது புத்த கோயில்கள் அமைத்து புத்த மதத்தை பரப்புவதே பெரும்பான்மை இனத்தவரின் நோக்கமாகும். இதனால் தான் இன்னொரு அங்கமாக முல்லைத் தீவில் 1981 காலப்பகுதியில் பெரும் பான்மையினர் வசித்து வந்ததாகவும் அவர்களுக்கான காணிகள் இருப்பதாக வும் தம்மையும் மீள்குடியேற்ற அனு மதிக்குமாறு முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். இதன்படி கொக்கிளாய் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் 1981 காலப் பகுதிகளில் 271 குடும்பங்கள் வசித்து வந்த தாகக் கூறுகின்றனர்.


**காணிகள் அபகரிப்பு?**

அப்படியெனில் இவர்களது காணிகள் எங்கே? காலத்துக்கு காலம் கரைவலை மீன் பிடிப்பதற்கு முகாமிட்டு கரைவலை சீசன் முடிந்ததும் சென்று விடுகிறார்கள். ஆனால் அவர்கள் இந்தப் பகுதிகளில் மக்களின் காணிகளை அபகரித்து வந்தேறுகுடிகளாகவே இருந்தனர் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. இதற்கடுத்ததாகத் கொக்கிளாயை அடுத்தடுத்த கிராமங்களிலே தமிழ் மக்களுக்கு சொந்தமான வயல் நிலங்களை கைப்பற்றி விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். ஏனைய காணிகளில் சிறு சிறு குடிசைகள் அமைத்து தங்களது காணி கள் என அடையாளப்படுத்தியிருப்பதைக் காண முடிகின்றது. ஆமையன்குளத்தின் கீழ் உள்ள காணிகள் அனைத்தும் தமிழ் மக்களுக்கு சொந்தமானது. ஆனால் பெரும்பான்மையினர் அபகரித்து மூன்று போகங்களையும் செய்து வருகின்றனர்.

இப்படியான நிலம் மற்றும் ஆலயங்கள் என்பனவற்றை ஆக்கிரமித்துக் கொண்டு வரலாற்று ரீதியாக சிங்களவர் இந்த நாட்டின் மக்கள் என ஞானசார தேரர் கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாது. இன்று புனரமைப்பு வேலைகளுக்கு என முல்லை மாவட்டத்துக்கு வந்தவர்களும் இராணுவத்தினரில் சிலரும் காணிகளை விலையாக பெறமுயற்சிக்கின்றனர். என்ன விலை கொடுத்தாலும் அவர்கள் வாங்குவதற்குத் தயாராக உள்ளனர். அது மட்டுமல்ல தமிழ் மக்களின் குடும்பங்களில் திருமணம் செய்யக்கூட முற்படுகின்றனர். எது எவ்வாறிருப்பினும் தமிழ் மக்கள் தமது உரிமைகளையும் தமது மண்ணையும் விட்டுக் கொடுக்காது பாதுகாக்க வேண்டியது மிகப் பெரிய பொறுப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டலாம் வாங்க!



## வரலாற்றில் இன்றைய தினம்

1559 - எலிசபெத் I இங்கிலாந்து அரசியாக முடி சூடினார்.
1759 - பிரித்தானிய நூதனசாலை திறந்து வைக்கப்பட்டது.
1822 - கிரேக்க சுதந்திரப் போர் டெமற்றியஸ் சிலன்ரிஸ் சட்டசபை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
1892 - கூடைப் பந்தாட்ட விதிகள் ஜேம்ஸ் நைஸ் ஸிமித்தால் பிரசுரிக்கப்பட்டது.
1910 - அமெரிக்காவில் அப்போது உலகிலேயே பெரியதான பவ்லோபில் அணைக்கட்டு (325 அடி) கட்டி முடிக்கப்பட்டது.
1943 - உலகிலேயே பெரிய காரியாலயக் கட்டடம் பென்ரகன் ஆர்லிங்ரொன் வெர்ஜீனியாவில் பூர்த்தி.
1962 - கிறிஸ்துக்கு முன் 340 ஆண்டுகள் காலப்பகுதிக்குரிய ஐரோப்பாவின் மிகப் பழமையான சுவடி வடகிறீஸில் கண்டெடுக்கப்பட்டது.
1970 - லிபியாவின் பிரதமராக முகம்மர் கடாபி அறிவிக்கப்பட்டார்.
1973 - சமாதானப் பேச்சுவாத்தையின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி றிச்சார்ட் நிக்சன் வியட்நாம் போரைச் கைவிடுவதாக அறிவிப்பு.
1975 - போர்த்துக்கல்லிருந்து அங்கோலா விடுதலை பெறும் அல்வோர் ஒப்பந்தம் கைச்சாத்து.
1994 - அரசமைப்புக் குழுவுக்கு யோசனை சமர்ப்பிக்க பிரதமர் ரணில் புலிகளுக்கு அழைப்பு.
1994 - படையினர் ஏவிய 3 ஷெல்கள் யாழ்.போதனா வைத்தியசாலை பாதுகாப்பு வலயத்துள் அதிகாலை வீழ்ந்து வெடித்தது. 4 பேர் காயம்.
2004 - சிங்கள மக்களின் சமாதான ஆணையைப்பெறும் அதிகாரமிக்க அரசு வரும் வரை புலிகள் காத்திருப்பதற்கு தயார் என அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு.
2004 - கிட்டுவின் 11 ஆவது நினைவு தினம்.
2004 - இந்தியா– பாக் இடையே மீண்டும் ரயில் போக்குவரத்து ஆரம்பம்.
2009 - தருமபுரம் பகுதியும் படையினர் வசம்.
2009 - மகிந்த ஜனநாயக மீறல் தொடர்பாக ஹிலாரியிடம் நேரில் முறையிடுவாராம் மங்கள சமரவீர.
2009 - வன்னியில் முழு மக்களும் மோதல் நடைபெறும் பகுதிக்குள் சிக்குண்டு கஷ்டப்படுகின்றனர் என மனித உரிமைக் காப்பகம் சுட்டிக்காட்டு.

## பழமொழி

1. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
2. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை
3. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்
4. வேண்டாப் பொண்டாட்டி கை பட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம்
5. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
6. அழுத பிள்ளை தான் பால் குடிக்கும்
7. அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
8. அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவ மாட்டார்கள்
9. அடியாத மாடு படியாது
10. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை
11. தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை
12. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை
13. எரியும் கொள்ளிகளில் எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி?
14. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு
15. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
16. கிட்டாதாயின் வெட்டென மற
17. ஆறிலும் சாவு நூறிலும் சாவு
18. சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரமும் முழங்கால் மட்டு
19. இக்கரைக்கு அக்கரை பச்சை
20. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

## மாதா



அன்பை அம்மா பொழிவாள்
ஆசை முத்தம் தருவாள்
பண்பை ஊட்டி வளர்ப்பாள்
பாசம் காட்டி மகிழ்வாள்!

பிள்ளை துன்பம் கொண்டால்
அன்னை துடித்துப் போவாள்
பிள்ளை நோய்வாய்ப்பட்டால்
அன்னை மருந்து உண்பாள்!

தாயை நாமும் போற்றிடுவோம்
கண்ணைப் போலக் காத்திடுவோம்
நலமாய் வாழச் செய்திடுவோம்.
வளமே அவள்தான் நம்பிடுவோம்

## மூளை மட்டும் இருந்தால் போதுமா?



வயதான ஒரு தந்தை. அவருக்கு இரண்டு மகன்கள். இருவரும் திறமைசாலிகளாக இருந்தார்கள். இதில் முழுக்கெட்டிக்காரன் யார், அரை குறைக் கெட்டிக்காரன் யார் என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும் என ஆசைப்பட்ட தந்தை ஒரு முடிவுக்கு வந்தார். இருவரையும் அழைத்து ஆளுக்கு ஐந்து ரூபாய் கொடுத்தார். இந்த ஐந்து ரூபாவில் ஒரு பொருளை வாங்கி ஓர் அறை முழுக்க நிரப்ப வேண்டும். மீதிப் பணமும் இருக்க வேண்டும். இதில் வெற்றி பெற்றவனுக்கு என் சொத்தில் மூன்றில் இரண்டு பங்கு; தோல்வியுற்றவனுக்கு மூன்றில் ஒரு பங்கு என நிபந்தனையும் விடுத்தார்.

இரு மகன்களும் பணத்தைப் பெற்றுக் கொண்டு வெளியேறினார்கள். தந்தை தனித்தனியே காட்டிய அறையை சுத்தம் செய்தார்கள். பணத்தை எடுத்துக் கொண்டு பொருள் வாங்க புறப்பட்டுப் போனார்கள்.

தந்தை தனக்குத் தெரிந்த இரண்டொரு நண்பரை அழைத்து தனது திட்டத்தைக் கூறினார். மேலும் எனது இரண்டு மகன்களிலும் யார் கெட்டிக்காரன் யார் முட்டாள் என்பது இன்று மாலை தெரிந்து விடும். கெட்டிக்காரனிடம் சொத்தை ஒப்படைத்து விட்டு முட்டாளை அவனிடம் வேலைக்காரனாக்கி விட வேண்டும் என்று சென்னார். நண்பர்களும் அதை ஒப்புக் கொண்டனர்.

மாலை வரும்வரை தனது மகன்களைத் தந்தை தேடவே இல்லை; மாலை நேரம் வந்தது. நண்பர்களையும் அழைத்துக்கொண்டு முதல் மகனுக்குத் தந்த அறையைப் பார்க்கச் சென்றனர்.

முதல் மகன் அறையைப்பூட்டி விட்டு வெளியே உட்கார்ந்திருந்தான். தந்தையையும், தந்தையின் நண்பர்களையும் பார்த்து எழுந்தான்; கதவைத் திறந்தான். அறை முழுவதும் வைக்கோல் நிரப்பப்பட்டிருந்தது. தந்தையிடம் நீங்கள் கொடுத்த ஐந்து ரூபாவில் நான்கு ரூபா வைக்கோல், மீதம் ஒரு ரூபாய் என்று கொடுத்தான்.

உங்கள் நிபந்தனைப்படி நீங்கள் கொடுத்த பணத்தில் அறை முழுவதும் பொருள் நிரப்பப்பட்டு விட்டது மீதிப்பணமும் உங்கள் கையில் கொடுத்து விட்டேன் என்றான்.

பிறகு இளைய மகன் இருக்கும் அறையை நோக்கி நண்பர்களுடன் சென்றார் தந்தை.

இளைய மகனின் அறையில் வெளிச்சம் வந்தது. கதவு சாத்தியிருந்தது. கதவைத் திறந்தார் தந்தை. அறை நடுவே ஒரு மெழுகுவர்த்தி எரிந்து கொண்டிருந்தது. அறை முழுதும் வெளிச்சம் பரவியிருந்தது.

ஓர் ஓரமாக நின்று கொண்டிருந்த இளையவன், தந்தையையும் தந்தையின் நண்பர்களையும் கண்டதும், மரியாதை செலுத்திவிட்டு தந்தையின் கையில் நான்கு ரூபா எண்பது காசைக் கொடுத்தான். அறை முழுவதும் நிரம்பியிருக்க வேண்டும் காசும் மீதி இருக்க வேண்டும், என்பது உங்கள் நிபந்தனை. இதோ வெளிச்சம் அறை முழுவதும் நிரம்பியிருக்கிறது. மெழுகுவர்த்தி இருபது காசுக்கு வாங்கியது போக மீதிக்காசும் இருக்கிறது என்றான்.

மகனை அணைத்துக்கொண்ட தந்தை, நீதான் என் சொத்தை பாதுகாக்கத் தகுந்தவன். உன் அண்ணனுக்கு மூளை மட்டும் இருக்கிறதே தவிர, அதை முறையாகப் பயன்படுத்தத் தெரியவில்லை. அவன் அறிவு வளர்ச்சி பெறும் வரை அவன் சொத்தையும் நீயே நிர்வாகம் செய்து வருவதுடன், அது வரை அவனுக்கு ஊதியமாக ஒரு தொகையும் கொடுத்து வர வேண்டும் என்றார். மூத்தவனும் வெட்கத்துடன் ஒப்புக் கொண்டு தம்பியைப் பாராட்டினான். தந்தையின் நண்பர்களும் இளையவனைப் பாராட்டினார்கள்.

வயது குறைந்தவனானாலும் அறிவக்கும் திறமைக்கும் மதிப்பளிக்க வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைத்து மக்களும் சிறப்புடன் வாழட்டும்



இன்று தைப்பொங்கல் திருநாள். இது தமிழர்களின் பெருநாள். எல்லா நலன்களையும் தருகின்ற தை மகளை, 'வருக! வருக!!' என்று வரவேற்று மகிழ்ந்திடும் பொன்னான நன்னாள் இன்றாகும்.புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்திருக்கும் ஒவ் வொருவரும் நன்றியுடன் இருக்க வேண்டும்.

வயலில் நெல் விளைய உதவி செய்த சூரியனுக்கு நன்றி செலுத்தும் முகமாகவும், தை மகளை வரவேற்றும், இனிப்பான பொங்கல் பொங்கிப் படைத்து வழிபாடியற்றும் இந்தத் தைப்பொங்கல் ஒரு சிறந்த பண்டிகையாகும்.


இந்த மிகச் சிறந்த நன்னாளில் ஈழநாட்டிலே வாழ்கின்ற அனைத்து மக்களும், சீரோடும் சிறப்போடும் வாழ அருளாசிகளை நல்கி, இறையருளைப் பிரார்த்தித்து நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து வாழ்த்துகின் றோம்.

முற்றத்திலே கோலம் போட்டு, புதுப்பானையிலே புத்தரிசிப் பொங்கலிட்டு சுற்றம் சூழ மகிழ்ந்திருந்து, உற்றார், உறவினர்கள், நண்பர்களுடன் கூடியிருந்து பொங்கலை உட்கொண்டு மனம் மகிழ்ந்திருக்க மனமார வாழ்த்தி வணங்கி அகமிக மகிழ்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பாரமாச்சாரிய சுவாமிகள்,
நல்லை ஆதீன குருமுதல்வர்.

## தமிழர் பண்பாட்டுத் திருநாள்



'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்று ஆண்டு தோறும் தமிழ் மக்கள் எதிர்காலத்தில் நம்பிக்கை கொண்டு தைத்திங்களில் இதயம் பொங்கத் தைப்பொங்கல் பொங்கி மகிழும் தமிழர் பண்பாட்டுத் திருநாள் இன்று கொண்டாடப்படுகின்றமை உவகை தருகிறது.

தைப்பொங்கல் முதல் நாள் வேளாண் மக்கள், உழவர் திருநாளாகவும், பகலவனுக்கு நன்றி தெரிவிக்கும் நாளாகவும் கொண்டாடி வருகின்றனர். இரண்டாம் நாள் தமிழர் செல்வம் தரும் 'மாட்டுப் பொங்கல்' என்று கொண்டாடுவர். மூன்றாம் நாள் தமிழர் வாழ்வில் அன்பும் பண்பும் இதயத்தில் பொங்கி வயலோரங்களில், ஆற்றோரங்களில், கடலோரங்களில் ஒருவரையொருவர் கண்டு நெஞ்சார வாழ்த்தி மகிழும் நாளாகக் கொண்டாடுகின்றனர். இவையெல்லாம் 5 ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் என்ன துன்பமிருந்தாலும் இதயம் பொங்கித் தைத் திருநாளில் தைப்பொங் கல் விழா எடுத்துக் கொண்டாடும் பாரம்பரியம்மிக்கதமிழர் திருநாள் பண்டாகும்.

வேளாண்மை விளைந்து செல்வம் குவிந்து மாரி முடிந்து இருள் நீங்கிப் புத்தொளி பரவிடும் காலம் தைத்திங் களில் வருவது தம் நம்பிக்கைகள் நிறை வேறும் என மகிழ்ச்சியுடன் வருங் காலத்தை நம்பிக்கையுடன் எதிர் கொள்ளும் திருநாள் தைப்பொங்கலாகும்.

இலங்கையில் அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் தமிழ் மக்களின் இறைமையும், ஆட்சியுரிமையும், மனித உரிமைகளும் அடக்கி ஒடுக்கப்பட்டு இனம் அழிந்து விடும் எனும் நிலையில் போராட்டம் போராக மாறியது. இராணுவ ஒடுக்குமுறையினால் தமிழர் வாழ்வில் பேரழிவு நிறைந்தது. அதற்கும் அடிபணிந்து போகாமல் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட மக்கள் இதயத்தில் ஒளிக்கீறு போல் 2015 தைத்திங்களில் ஓர் ஆட்சி உரு வாகியிருக்கிறது.

முழுமையான நம்பிக்கை இன்னும் ஏற்படாது விட்டாலும் 'தை பிறந்தால் வழி பிறக்கும்' எனும் நம்பிக்கையில் தமிழ் மக்கள் இவ்வாண்டிலாவது எங்கள் தமிழ் நிலம் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபடும்;;;;, சிறையில் வாடும் இளைஞர் விடுதலை பெறுவர்;, பெண்கள் அவலங்களும், கண்ணீரும் நீங்கி விடிவு கிட்டும்; என்ற நம்பிக்கை ஏற்படுகின்றது.

அத்தோடு மக்களின் கண்ணீரினாலும், தியாகத்தினாலும் ஏற்பட்டிருக்கின்ற 'சர்வதேச சந்தர்ப்பம்' அதனால் தமிழர் இனப் பிரச்சனைக்குத் தீர்வும் தமிழ் பேசும் மக்களுக்கு விடுதலையும் விடிவும் கிட்டும் எனும் நம்பிக்கையை இதயத்தில் தாங்கி இத் 'தைப் பொங்கல்' திருநாளை அமைதியுடன் கொண்டாடுவோம்.

கிருத்துவ ஆண்டில் புத்தாண்டு பிறந்த கொண்டாட்டங்கள், தொடர்ந்து தைப்பொங்கல், சித்திரைப் புத்தாண்டு தமிழ் மக்களுக்கு புத்தொளியையும் புது நம்பிக்கையையும் தரும் என நம்பிப் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாவை.சோ.சேனாதிராசா, தலைவர்
இலங்கைத் தமிழரசுக் கட்சி.

## தமிழர்களின் பண்பாட்டு விழா தைப்பொங்கல்



தமிழ் உலகு உற்சாகமாகக் கொண்டாடும் ஓர் பண்பாட்டு விழா தைப்பொங்கல் விழாவாகும். இதனை மகர சங்கிராந்தி என்றும் அழைப்பார்கள். இற்றைக்கு ஈராயிரம் வருடங்களுக்கு முற்பட்ட விழாவாக இது அமைந்துள்ளது. நன்றி பாராட்டுதல் என்னும் நற்பண்புடன் கூடிய திருநாளாக தைப்பொங்கல் கொண்டாடப்படுகின்றது. எனவே இன்றய நன்நாளிலே எமக்கு உதவும் உழவரை நன்றியுடன் பாராட்டுவோம். அவர்களுடன் சேர்ந்து எமது வாழ்வின் உயர்விற்கு உதவிய ஆசிரியர்களை, பெற்றோர்களை குருமார்களை முதியோர்களை பெருமையுடன் போற்றுவோம். வாழ்வின் ஒவ்வொரு தருணத்திலும் எமக்கு உதவிய ஒவ்வொரு மனிதர்களையும் நினைத்து அன்புடன் நன்றி பாராட்டுவோம். ஒருவருக்கொருவர் நன்றி பாராட்டும் பண்பியல்பு எம்மை நல்ல மனிதனாக்குவதுடன் சமூகத்தில் முரண்பாடற்ற கருத்தொருமித்த நல்லதொரு சமூகத்தையும் உருவாக்கும். அதனால் சந்தோசமும் மகிழ்வும் உயர்வும் வாழ்வில் சித்திக்கும். தைப்பொங்கல் பொங்குதல் படைத்தல், முதலான பல சமய சடங்குகளை உள்ளடக்கி பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படுவதாகும். அச்சமயச் சடங்குகளும் மனிதனை நல்வழிப்படுத்துவதாகவே அமைந்துள்ளன. அத்துடன் பெற்றோரிடம் ஆசி வேண்டுதல், உறவினருக்கு உணவுபரிமாறிக் கொள்ளல், விருந்தினரை வரவேற்றல் முதலான தமிழரது நல்ல பண்பாட்டு அம்சங்களும் பொதிந்ததாக தைப்பொங்கல் காணப்படுகின்றது. எனவே தைப்பொங்கல் ஒரு சமய விழாவாகவும் தமிழர்களது பண்பாட்டுவிழாவாகவும் காணப்படுகின்றது. தைப்பொங்கல் அனைவருக்கும் மகிழ்வையும் சந்தோசத்தையும் தருவதாக அமைய வாழ்த்தி நிறைவுசெய்கின்றேன்.

சந்நிதாச்சாரியர்
சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்
அமைப்பாளர்
வீணாகானகுருபீடம்

## புதிய சிந்தனைகளோடு புதிய வழியில் பயணிப்போம்



இயற்கைத் தெய்வமாகிய பகலோனுக்கு நன்றி செலுத்தும் நன்நாள் தைப்பொங்கல். பாடுபட்டு உழைத்துப் பலரும் பயன்பெற வாழும் உழவர் திருநாள் தைப்பொங்கல். உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரதும் அன்பின் வலிமையைப் பெருக்கும் நன்நாள் தைப்பொங்கல். இந்தத் திருநாள் குறித்து அனைவருக்கும் எனது தைப் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்பர்களே தைத்திருநாளில் அதிகாலையிலேயே எழுந்து அனைவரும் வழிபாடு செய்யுங்கள். உண்பதற்கு உணவும், உடுப்பதற்கு ஆடையும், உறங்குவதற்கு வீடும் தந்த இறைவனுக்கு இந்த நாளில் மனநிறைவோடு நன்றிகூறி வணங்குங்கள். விடிவு தரும் கதிரவன் எமது கண்கண்ட தெய்வமாகத் தினமும் காட்சியளிக்கிறான்.

இருள் அகற்றும் இனிய தெய்வத்துக்கு நாம் என்ன கைம்மாறு செய்வோம். நன்றியின் அடையாளமாகப் பொங்கிப் படைத்துப் புனிதமாய் நடப்போம். கடவுள் தந்த வசிப்பிடத்தை கருத்திற் கொண்டு நன்றி சொல்வோம்.

இருப்பிடம் இல்லாமல் எத்தனை பேர் உலகில் அலைந்து கொண்டு இருக் கிறார்கள். நாம் வாழும் வீடுகளின் அருமை பெருமைகளை உணர்வோம். வீடுகளை புனிதப்படுத்திக் கோலமிட்டு விளக்கேற்றி வாழ்த்துவோம். பிறரின் நல்வாழ்வுக்காகவும் வாழ்த்துவோம். கவலைகளோடு வாழும் மக்கள் துயர்போக வேண்டும் என்று பிரார்த்திப்போம்.

"குடும்பம் ஒரு கோயில்" குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் தாய்மனையில் ஒன்றுகூடிப் பெற்றோரின் ஆசியைப் பெறுவோம். எமது மண்ணில் அனைவரும் நிம்மதியாக நிலையான சுதந்திரத்தோடு வாழ இறை வனை மன்றாடுவோம்.

கருத்து மோதல்
களை வளர்ப்பதைத் தவிர்த்து ஒன்றுபட்டு
உழைப்போம். ஆடம்பர செலவுகளைக் குறைத்து ஆதரவற்றோர்களுக்கு உதவுவோம். நாங்களும் ஓய்வின்றி உழைத்துப் பிறரும் உழைத்து வாழ்வதற்கு வழி செய்வோம்.

குறைகள் கூறுவதைத் தவிர்த்து ஒவ்வொருவரிடமும் உள்ள நற்பண்புகள் குறித்து வாழ்த்துவோம். தைத்திருநாள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டும் நன்னாள். இந்த நன்னாளில் அனைவரும் புதிய சிந்தனைகளோடு புதிய வழியில் பயணம் செய்வோமாக.

ஆறு.திருமுருகன்
தலைவர்.
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.



## மகிழ்ச்சியான நல்வாழ்வைப் பெறுவோம்

தொண்டமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய பரிபாலன சபை சார்பாக அனைவருக்கும் தைப்பொங்கல் வாழ்த்துக்கள். ஜனனமாகும் தை மாதம் சித்தாமிர்தமும், உத்தரட்டாதி நட்சத்திரத்திலும் எம்பெருமான் சந்நிதி முருகப்பெருமானுக்குரிய சஷ்டி விரத நாளிலும், பிறப்பதன் மூலம் எம்பெருமான் முருகன் அடியார்கள் சிறப்பான தொழில் முன்னேற்றத்தையும், மகிழ்ச்சியான நல்வாழ்வையும் பெற்று வாழ்வோம்.எமது தமிழ் மக்களுக்குரிய அரசியல் உரிமைகளும், ஜனநாயக உரிமைகளும் சமமாகப் பெற்று அனைத்து இனமக்களும் சம உரிமையோடு வாழும் சிறப்பான ஜனநாயக நாடாக எமது நாடு மிளிர வாழ்த்துகின்றோம்.

பரிபாலன சபையினர் சார்பில்
சி.செல்வலிங்கம்.

## தை பிறந்தால் வழி பிறக்கட்டும்!

இன்றைய தினம் தமிழர்களின் வாழ்வின் பொன்னாள். 'நல்லாட்சியின் நாடு போற்றும் தைப்பொங்கலிது. களனி உழுத உழவன், கதிர் எடுத்து அறுவடை செய்த செந் நெல்லை அரிசியாக்கி, முற்றத்தில் பொங்கலிட்டு சூரியனுக்குப் படைத்து, இறைவணக்கம் செலுத்தி உறவினர்கள், நண்பர்களுடன் குடும்ப சகிதமாக உண்டு மகிழும் இனிய சர்க்கரைத் தமிழ்த் தைப் பொங்கலிது.

தமிழினம் சம உரிமைகளும் பெற்று தனித்துவமாக வாழ இந்தத் தைப்பொங்கல் திருநாளில் எல்லாம் வல்ல வல்லிபுர மாயவன் அருள் புரியப் பிராத்தித்து நல்லாசிகளையும் நல் வாழ்த்துக்களையும் அக மகிழ்வுடன் கூறிக்கொள்கிறேன்.

பிரம்மஸ்ரீ சுதர்சனக்குரு, பிரதமகுரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதானம் தொடர்ந்தும் நிலைபெறச் பிரார்த்திப்போம்

உழவர் திருநாளாம் தைப்பொங்கல் நன்னாள் தமிழ் மக்களால் கொண்டாடப்படும் பெருநாளாகும். சூரிய பகவானுக்கு தமிழ் மக்களால் பொங்கலிட்டு வழிபாடாற்றி நன்றிக் கடனைச் செலுத்தும் விழாவாகவும் பொங்கல் திருநாள் அமைகின்றது. மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வாக்குக்கு இணங்க நாம் பெரியோர்களை மதித்துப் போற்றி எமது அஞ்ஞானமாகிய இருள் நீங்கப்பெற்று மெய்ஞானமாகிய இறையின்பத்தின் மூலம் கிடைத்தற்கரிய பேறுகள் பெற்று வாழ்வோமாக.
பொங்கல் தினம் மறுநாள் கோமாதாவாகிய பசுக்களுக்கான பட்டிப்பொங்கல் நடைபெறுகிறது. கோமாதாவாகிய பசுக்களை நாம் போற்ற வேண்டும். பசுவின் தலை முதல் பாதம் வரை ஒவ்வொரு தெய்வங்கள் இருக்கின்றன என்பதை ஆகம நூல்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.
பசுவிலிருந்து பெறப்படும் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்பவற்றுக்கு முறையே பூசைகள் நடைபெற்ற பின்பு உடம்பைச் சுத்தப்படுத்துவதற்காக பஞ்சகௌவியமாக அருந்துகின்றோம். கோவாசம் கோதரிசனம் எனப்படும் நிகழ்வு ஆலயங்களில் இல்லங்களில் முதன்மை பெறுகின்றது. எனவே கோமாதா எங்கள் குலமாதாவையும் போற்றி, பொங்கல் பொங்கி இல்லம் நிரம்பும் மங்கல நன்னாளில் சாந்தி சமாதானம் தரிசனம் தொடர்ந்தும் நிலைபெற இறைவனைப் பிரார்த்தித்து அனைத்து மக்களுக்கும் நல் ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

பா.மனோகரக்குருக்கள், தலைவர்
சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்

## புதிய பொங்கல் புதுமையாய் பொங்கட்டும்



தமிழர் தமது வாழ்வியலின் முதல் ஆரம்பமாக அமைவது இந்த தைத்திருநாள். எமது பாரம்பரியங்களும் நம்பிக்கைகளும் வரலாற்றின் வழி வந்த உணர்வுகளும் இந்தத் திருநாளின் நம்பிக்கையில்தான் பிறக்கின்றது. இந்த நம்பிக்கைகளில் மேல் நாம் கொண்ட பற்றுறுதிகள் வெற்றி தந்து நன்றி செலுத்தும் ஒரு புனிதநாளாக இந்த நாள் அமைந்து விடுகின்றது.
இன்று பொங்கிப் பரவும் இந்தப் புதுப் பெங்கல் போல் எங்கள் வேண்டுகைகளும் என்றோ ஒரு நாள் வெற்றி பெற்று கல்லறைகளுக்குள் கனவுகளைச் சுமந்து, காவியம் ஆகிவிட எங்கள் மறவர்களின் இலட்சியங்களும் வெல்லும் என்ற உறுதியன நம்பிக்கைகளோடு, பொங்கல் பானையில் புது அரிசியை நாம் ஒவ்வொருவரும் மானம்மிக்க தமிழர்களாக இட்டிட வேண்டும்.
இவ்வாறே நாளும் பொழுதும் விடியலைத் தரும் சூரியனுக்கு நன்றி செலுத்துதல் போலும் நாற்திசைகளிலும் நாம் தமிழர் என்ற இலட்சிய வெறி பிறந்திட புதிய பாதை வகுத்த நாயகர்களின் கனவு மெய்பட்டிட, எமது மத்தியில் உள்ள குரோதங்களுக்கு அப்பால் கயவர்களால் கறுவறுக்கப்பட்டு உருச்சிதைக்கப்பட்ட எங்கள் நிலங்களில் இனிவருங்காலங்கள் களனி பல விளைந்து சிறந்திடவும், சிறைகளின் இரும்புச் சுவர்களுக்கிடையே விடுதலையின் விடிவுக்காய் உழைத்தவர்கள் வெளிப்பட்டிடவும், உறவுகளுக்காய் செங்குருதியை செந்நீராய் சிந்தி ஏங்கிடும் உள்ளங்களுக்கு நாமும் உறவுகளாய் இணைந்து உறுதி வழங்கிடவும் ஒற்றுமையின் பால் உயர்ந்தவர்கள் தரணியில் தமிழர்கள் என்ற வரலாற்றினை உறுதியாக்க எடுப்போம் சபதம் இத் தைத்திருநாளில்.

திருமதி நாகரஞ்சினி ஐங்கரன்,
முன்னாள் தவிசாளர்,
வலி. மேற்கு பிரதேச சபை.

## சகலருக்கும் வழி பிறக்கட்டும்

பஞ்ச பூதங்களால் சிருஷ்டிக்கப்பட்ட இந்தப் பிரபஞ்சத்தில் மானிடராகப் பிறந்த நாம் உயிரின் மகத்துவத்தை இறைவன் எமக்கு இயற்கை வளங்கள் மூலம் உயிர்வாழ வழி சமைத்தார்.
உழவர் என்கின்ற விவசாயிகள் மூலம் அதனை நாம் விளைநிலங்கள் மூலம் விதைகள் பயிர்கள் வளர்க்க, ஏர் பூட்டி உழுதுண்டு பண்படுத்திப் பசளையிட்டுப் பயிராக்கி அறுவடை செய்து, இனிய நன்நாளில் தைமாதப் பிறப்பு சூரிய பகவான் மகர ராசிக்குள் வருகின்ற இன்றைய நாளில் அவருக்கு நிவேதனம் செய்து இறைவழிபாடாற்றுகின்றோம்.
எமது கஷ்டங்கள், துன்பங்கள், நோய்ப் பிணிகள் நீங்கி, நல்ல ஆரோக்கியமாக எல்லோரும் சுபீட்சமாக உற்றார், உறவினர், சுற்றத்தார், நண்பர்களுடன் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்க அனைவரும் அமுது உண்டு வாழ இறைவன் வழிகாட்ட வேண்டும் எனப் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

பிரம்மஸ்ரீ யோ.சுபாஸ்கரக் குருக்கள்
அத்தியடிப் பிள்ளையார் கோயில்.

## தமிழ் மக்களுக்கு விடிவைத் தரட்டும்

உலகில் உள்ள அனைத்துத் தமிழ் மக்களும் இன்று தைப்பொங்கல் திருநாளைக் கொண்டாடுகின்றார்கள்.
தமிழர் திருநாள் எனப்படும் தைப்பொங்கல் நாளில் அதனைக் கொண்டாடுபவர்கள் பாரம்பரியமாகத் தங்கள் விவசாய அறுவடைக்காக இயற்கைக்கு நன்றி கூறும் நாளாகும். இந்தத் திருநாளானது வீடு, குடும்பம் மற்றும் விவசாயத்தோடு சம்பந்தப்பட்ட விசேடமான வழிபாட்டுடன் கூடிய திருவிழாவாகும்.
இலங்கை மற்றும் உலகெங்குமுள்ள தமிழர்க்கு இந்தப் பொங்கல் திருநாளானது மகிழ்ச்சிகரமாக, நன்றி செலுத்துகின்ற மற்றும் மீளமைப்புக்கான மக்கள் திருநாளாக அமையட்டும். இலங்கை மக்களது வாழ்க்கையை முன்னேற்றிச் செல்லும் இந்தத் தருணத்தில் தமிழ் மக்களையும், ஏனைய சமூகத்தவர்களையும், ஒற்றுமைக்காகவும் எதிர்கால இலங்கையின் சமாதானத்துக்காகவும் அழைக்கின்றேன்.
இந்து விவகாரங்களுக்கான அமைச்சர் என்ற வகையில் இந்தத் தைப்பொங்கல் விழாவைக் கொண்டாடும் அனைவருக்கும் எனது இனிய வாழ்த்துக்கள்.
"தை பிறந்தால் வழி பிறக்கும்"

டி.எம்.சுவாமிநாதன்
அமைச்சர்
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம்
மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு.



## ஒற்றுமையே பலமென நல்வாழ்வை வாழ்வோம்

இன்று தைத்திருநாள். இது தமிழர் கொண்டாடி மகிழும் தைப்பொங்கல் நன்னாள். "பொங்கலோ பொங்கல் இனிப்பான பொங்கல்" என்று அனைத்து மக்களுமே ஒன்றிணைந்து வாழ்த்தியருளும் பொன்னான நன்னாள் இன்றாகும். தைப்பொங்கல் ஒரு சிறந்த நல்ல பண்டிகையாகும். எமது நாட்டிலே இந்த இனிய தைப்பொங்கல் திருநாள் முதல் அனைத்து மக்களுமே ஆனந்தமாக வாழவேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.
புதுப்பானையிலே இனிப்பான நல்ல பொங்கல் பொங்கி சூரிய பகவானுக்குப் படைத்து நன்றி செலுத்துகின்ற சிறந்த நன்னாள் இதுவாகும். இந்த நல்ல நாளிலே எல்லோரும் ஒருமித்த மனத்தவராய், "ஒற்றுமையே பலம்" என்ற நல்வாக்குப்படி மங்கலகரமான நல்வாழ்க்கை வாழ இறையருள் கிட்டவேண்டுமென்று ஆசிகள் நல்கி மனமார வாழ்த்துகின்றோம். இனிப்பான பொங்கலைப் போன்று மானிட நல் வாழ்க்கையும் நலமேயிருக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

கலாபூஷணம்
இராசையா ஸ்ரீதரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழன்டா.....



போட்டியில் ஜப்பான் காரனும், தமிழனும் கலந்து கொண்டார்கள்....!!!!!!!!!!! ஒரு லீற்றர் பெற்றோலில் எவ்வளவு தூரம் போகிறோம், என்பது தான் போட்டி... ஒரே நிறுவனத்தின் தயாரிப்பான இரண்டு பைக்குகள்... முதலில் ஜப்பானியர் போட்டியை ஆரம்பித்தார்.
1லீற்றரில் 40 கி.மீ.சுற்றி வந்தார், பெற்றோல் முடிந்து விட்டது..,
அடுத்து வந்த தமிழன், அதே ஒரு லீற்றரில் 40 கி.மீ. சுற்றியும் பெற்றோல் இருந்தது.
அப்பொழுது தான் தனக்கு தெரிந்த வித்தையை காட்டினான், பெற்றோல்; ராங் மூடியைத் திறந்து வாயால் ஊதி விட்டு....... ஸ்ராா்ட் செய்தான். அது இன்னும் 2 கி.மீ. ஓடியது.
வண்டியைத் தரையில் வலப்பக்கமா சரிச்சி போட்டு...... மீண்டும், ஸ்ராா்ட் செய்து 2கி.மீ. ஓட்டினான்..அப்புறம் இடப்பக்கம் சரிச்சு போட்டு.....2 கிலோமீற்றர் ஓட்டினான்.
ஆக மொத்தப் போட்டியில் தமிழன் ஜெயிச்சான்.
ஜப்பான் காரன் சொன்னான்,
பைக்க கண்டுபிடிச்சது என்னமோ நாங்க தான், ஆனால் அதை எப்படிலாம் ஓட்ட என்பதை உங்களிடம் இருந்து தான் கற்று கொள்ள வேண்டும் என்றான்.
தமிழன்டா .......!

WhatsApp
படித்ததில் பிடித்தது

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | 2 | 9 | | | | | |
| | | 3 | | | 2 | | 1 | |
| 1 | | | 5 | | | | 6 | 2 |
| 5 | 3 | | | | | | | |
| 4 | | | | | | | 3 | 8 |
| | | | 2 | 4 | | | | |
| | | | 4 | | | | | |
| | | 1 | | 8 | | 2 | 7 | |
| | 9 | | | | | 1 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 6 | 1 | 8 | 2 | 4 | 9 | 7 |
| 4 | 2 | 1 | 6 | 9 | 7 | 5 | 8 | 3 |
| 9 | 8 | 7 | 5 | 3 | 4 | 1 | 2 | 6 |
| 5 | 6 | 3 | 4 | 2 | 1 | 8 | 7 | 9 |
| 2 | 1 | 9 | 3 | 7 | 8 | 6 | 5 | 4 |
| 8 | 7 | 4 | 9 | 5 | 6 | 3 | 1 | 2 |
| 1 | 4 | 5 | 7 | 6 | 9 | 2 | 3 | 8 |
| 6 | 9 | 8 | 2 | 1 | 3 | 7 | 4 | 5 |
| 7 | 3 | 2 | 8 | 4 | 5 | 9 | 6 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.
2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## தண்ணீருக்கடியில் படப்பிடிப்பு தொடரும் "தெறி" சாகஸங்கள்

"ராஜா ராணி" படத்துக்குப் பிறகு விஜய்யை வைத்து "தெறி" படத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார் அட்லி. தனது முதல் படத்தில் காதலுக்கு முக்கியத்துவம் கொடுத்த அட்லி, இரண்டாவது படமான "தெறி"யை ஆக்ஷனுக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாக்கிக் கொண்டிருக்கிறார்.
அண்மையில் இந்தப் படத்துக்காக தண்ணீருக்கு அடியில் சில காட்சிகளை படமாக்கியிருக்கிறார்கள். இதற்காக தண்ணீரில் பயன்படுத்தக்கூடிய ஸ்பெல் கமராக்களும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இது பாடல் காட்சிக்கான படப்பிடிப்பா அல்லது ஆக்ஷன் காட்சிக்கான படப்பிடிப்பா என்பது தெரியவில்லை. ஆனால், தொழில்நுட்பமாக "தெறி" படத்தில் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார் அட்லி. இதனால் இந்தப் படம் ஆக்ஷன் விருந்து படைக்கும் என்கிறது "தெறி" வட்டாரம்.







பேஸ் புக்கில் பிடித்தவை.




Jino Keerththana Retweeted
♥★மச்சக்காரன்★♥ @Johi

நல்லவனாய் இரு
நம்புவதற்கு எவருமில்லை!
நல்லவனாய் நடி
நம்பாதவர் எவருமில்லை!
நவீன உலகின்
நாணயத்தன்மை இதுவே!

10 7

யாரோ இவன் Retweeted
கிரியேட்டிவ் ராஜ்™ @Creative

போக்குவரத்து விதிகளை
சாகசமாய் மீறும் எமக்கு...
அடுத்தவர் மீறுவதைக் கண்டதும்
உடனே கோபம் வருகிறதே...
ஊருக்கு தான் உபதேசமோ

கர வேட்டி காரன் @rahamath

இந்த உலகின் எந்த
மூலையிலும் தமிழுக்கு தமிழ்
என்று தான் பெயர்... ஆனால்
உலகப் பெரு மொழியாம்
இங்கிலீஷ்க்கே ஆங்கிலம் என
பெயர் வைத்தவன் தமிழன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** பகைவர்களின் கெடுசெயலை முறியடிப்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கு, புதிய வழி காண்பீர்கள். பெண்கள், குடும்ப நலனில் அக்கறை கொள்வர். நண்பர்களால் நன்மை உண்டாகும்.

**இடபம்:** மனதில் நிம்மதி நிலைத்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். உறவினர்களால் நன்மை உண்டாகும். மனைவி விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

**மிதுனம்:** மன வருத்தம் நீங்கி அமைதி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். பெண்கள் சிக்கனம் மூலம் சேமிக்க முயல்வர். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.

**கடகம்:** அன்றாடப் பணிகளில் திட்டமிட்டு செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். ஆரோக்கியம் பெற சீரான ஓய்வு உதவும்.

**சிங்கம்:** மனதில் உற்சாகம் மேலோங்கும். எதிர்கால வளர்ச்சிக்காகப் பாடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** வெளி வட்டாரத் தொடர்பால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பூர்வீகச் சொத்து மூலம் வருமானம் கிடைக்கும். பிள்ளைகள் விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

**துலாம்:** பெருந்தன்மையுடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரம் நிர்வாகச் செலவு அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை உண்டாகும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**விருச்சிகம்:** எவரிடமும் விவாதத்தில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்ற வேண்டும்.


**தனுசு:** குடும்பத்தினரின் அன்பை பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். நிலுவைப் பணம் கிடைக்கும் பெண்கள் சிக்கனத்தின் மூலம் சேமிக்க முயல்வர்.

**மகரம்:** உங்கள் செயல்களை மற்றவர்கள் விமர்சிக்கலாம். தொழில், வியாபாரத்தில் புதிய வாய்ப்பு மூலம் இலாபம் காண்பீர்கள். பெண்கள் பொருள் இரவல் கொடுக்க, வாங்கக் கூடாது.

**கும்பம்:** நல்லெண்ணத்துடன் பிறருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்திகரமாக இருக்கும். புத்திரர் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**மீனம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் தடை விலகும். வருமானம் சீராகும். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும். அறிமுகம் இல்லாதவர்களிடம் நெருக்கம் வேண்டாம்.

# நுட்பம்



## லெனோவாவின் லெமன் 3

லெனோவா நிறுவனம் லெமன் 3 என்ற தொடு திரைக் கைபேசியை சீனாவில் அறிமுகப்படுத்தியுள்ளது. இரண்டு சிம் அட்டைகளை கொண்ட இந்தக் கைபேசி அண்ட்ரொய்டு 5.1 லொலிபொப் மூலம் இயங்குகிறது.

441பிபிஐ பிக்சல் அடர்த்தி மற்றும் 1080X1920 பிக்சல் தீர்மானம் கொண்ட 5.0 அங்குல முழு எச்டி தொடுதிரையை இந்தக் கைபேசி கொண்டுள்ளது.

அத்துடன் 2ஜிபி நினைவகம் மற்றும் 1.5GHz அக்டா கோர் குவால்காம் ஸ்னாப்ட்ராகன் 616 புரசசர் என்பற்றை இந்தக் கைபேசி கொண்டுள்ளது.

இதில் மைக்ரோ எஸ்டி அட்டை வழியாக விரிவாக்கக்கூடிய 16ஜிபி. உள்ளடங்கிய சேமிப்பு உடன் வருகிறது.

13 மெகா பிக்சல் பின்புற கமெரா மற்றும் 5மெகா பிக்சல் முன் எதிர்கொள்ளும் கமெரா என்பவற்றுடன் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த கைப்பேசி 2750 எம்ஏஎச் பற்றரித் திறன் மூலம் இயக்கப்படுகிறது.

## கலக்சி எஸ் 7 எப்படி இருக்கும்

சாம்சுங் நிறுவனத்தின் படைப்பான சாம்சுங் கலக்சி எஸ் 7 தொடுதிரைக் கைபேசி எப்படி இருக்கும் என்பது குறித்த காணொலி ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.



சாம்சுங் நிறுவனம் கடந்த ஆண்டுசாம்சுங் கலக்சி எஸ் 6 மற்றும் சாம்சுங் கலக்சி எஸ் 6 எடேஜ் ஆகிய இரண்டு கைப்பேசிகளை வெளியிட்டது.

நிலையாகப் பொருத்தப்பட்ட சேமிப்பு வசதியுடன் இந்த இரண்டு கைபேசிகளும் வெளியாகின, தற்போது வெளியாகவிருக்கின்ற சாம்சுங் கலக்சி எஸ்7 கைபேசியில் மைக்றோ எஸ்டி அட்டை பொருத்தப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன் 5.1 இன்ச் திரை மற்றும் 2560 X 1440 பிக்சல் தீர்மானம் என்பவற்றையும் இது கொண்டுள்ளது. 4ஜிபி நினைவகம் மற்றும் பிறைற்செல் கமரா என்பவற்றுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இது சதுரமாகவும் எந்த வகையிலும் பயனர்களின்பையில் அடங்கக் கூடியதாகவும் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எல்ஜியின் புதி கே10

முன்னணி இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்றான எல்ஜி நிறுவனம் கே10 எனும் தனது புதிய தொடுதிரைக் கைபேசியை அறிமுகம் செய்துள்ளது.

5.3 அங்குல அளவுடையதும், 1280 மு 720 பிக்சல் தீர்மானம் உடையதுமான தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன், பிரதான நினைவக மாக 1.5ஜிபி நினைவ கம், 16ஜிபி சேமிப்பு நினைவகம்



என்பவற்றையும் கொண்டுள் ளது.

அண்ட்ரொய்டு 5.1 லொலிபொப் இயங்குதளத்தையும் இந்தக் கைபேசி கொண்டுள்ளது.

# டி.எவ்.சி.சி. வங்கியின் புத்தாண்டு தின சிறுவர் சேமிப்பு ஊக்குவிப்புத் திட்டம்



டி.எவ்.சி.சி. வங்கி ஜனவரி 01ஆம் திகதி மேற்கொண்ட சிறுவர் சேமிப்பு ஊக்குவிப்புத் திட்டம் மகத்தான வெற்றி அளித்துள்ளது. புத்தாண்டு தினத்தன்று ஆரம்பிக்கப்படும் ஒவ்வொரு சிறுவர் சேமிப்புக் கணக்கிலும் ரூ.1,000 மேலதிகமாக வைப்புச் செய்யப்படும் என்று வங்கி அளித்தவாக்குறுதியைத்தொடர்ந்து, அன்றைய தினம் நாட்டிலுள்ள 137 டி.எவ்.சி.சி.வங்கிக் கிளைகளிலும் ஏராளமான பெற்றோர் தமது பிள்ளைகளுக்காகச் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்தனர். வங்கியும் வாக்களித்தவாறே அந்தக் கணக்குகளில் மேலதிக 1,000 ரூபாவை வைப்புச் செய்தது.

விசேட ஊக்குவிப்புத் திட்டம் பற்றி டி.எவ்.சி.சி. வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி. அர்ஜுன் பெர்னாண்டோ கருத்து வெளியிடுகையில் 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் இத் திட்டத்தில் காட்டிய ஆர்வம் எம்மை மிகவும் திருப்திப்படுத்தியது. புத்தாண்டு தினத்தன்று எமது கிளைகளில் முன்னொருபோதும் இல்லாத அளவுக்குக் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றதைக் காண முடிந்தது. எதிர்காலத்திற்காகச் சேமிப்பதன் முக்கியத்துவத்தைப் பொதுமக்களுக்கு எடுத்துக்கூற இத் தருணத்தைப் பயன்படுத்துவதே எமது நோக்கமாக இருந்தது.

தனிப்பட்டவர்களினதும் வியாபார நிறுவனங்களினதும் முன்னேற்றத்திற்கு உதவுவதுடன், நாட்டின் ஒட்டு மொத்த அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்வதில் அக்கறை காட்டும் பொறுப்பு வாய்ந்த வங்கி என்ற முறையில் இந்த நோக்கம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகிறோம் என்று கூறினார்.

நவீன வங்கியியல் தொழில்நுட்பத்தின் உதவியுடன் நிறுவன, வியாபார மற்றும் சிற்றளவு வங்கி வசதிகள், வேலைத்திட்ட நிதியுதவி போன்ற துறைகளில் பல்வேறு வகையான தரமுயர்ந்த சேவைகளை ஒரே கூரையின் கீழ் வழங்குவதன் மூலம் டி.எவ்.சி.சி. இந்த நாட்டின் வங்கிச் சேவைகள் அரங்கில் முன்னணி வகிக்கிறது. இத் துறைகள் அனைத்திலும் டி.எவ்.சி.சி. பல தசாப்தகால அனுபவத்தைக் கொண்டுள்ளது.

வங்கியின் புதிய இலட்சியத்தை அடைவதற்குத் தம்மை அர்ப்பணித்துள்ள அனுபவமும் நிபுணத்துவமும் வாய்ந்த அலுவலர்கள் வங்கியின் செயற்பாடுகளுக்குப் பக்கபலமாக உள்ளனர். உயர்ந்த வட்டி வீதங்கள் மற்றும் வெகுமதிகள், கல்விக்கான உதவிகள் சகிதம் செயற்படுத்தப்படும் டி.எவ்.சி.சி. வர்தன ஜுனியர் மற்றும் வர்தன சிறுவர் சேமிப்புக் கணக்குகள், இந்த நாட்டு இளைய தலைமுறையினரின் சிறப்பான நிதி எதிர்காலத்தை உறுதிப்படுத்துவதற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. (த)

# சிறுவர்களுக்கு நிதி திரட்டும் எறவுண்ட் த பேள் நிகழ்வு

தொடர்ந்து மூன்றாவது வருடமாக 2016 ஏப்ரல் மாதம் 7ஆம்திகதிஎறவுண்ட்தபேள்நிகழ்வுஆரம்பிக்கவுள்ளது. சரிப்ரல் பெல்சி உடன் வாழும் சிறுவர்களுக்கு பொது மக்கள் ஆதரவையும், நன்கொடையையும் சேகரிப்பதற்கு இலங்கை முழுவதும் 1400 கி.மீ தூரத்தை துவிச்சக்கர வண்டி மூலம் 30இக்கும் மேற்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் பயணிப்பர்.

இந்த 10 நாட்கள் துவிச்சக்கர வண்டிப் பயணம் நாட்டின் அனைத்து மூலைகளுக்கும் இவர்களை அழைத்துச் செல்லும். இந்த நிகழ்வின் மூலம் கிடைக்கும் அனைத்தும் சி.பி.எல்.எவ் இற்கு நன்கொடையளிக்கப்படும்.

சி.பி.எல்.எவ் மற்றும் வுறோம் என்ற துவிச்சக்கர வண்டிச்சங்கம்என்பவற்றின்பங்காளித்துவத்துடன் முன்னெடுக்கப்பட்ட வீல்ஸ் போ வீல்ஸ் நிகழ்வின் ஒரு முயற்சியாக எறவுண்ட் த பேள் உள்ளது. என்ற புதிய பிரதான அனுசரணையாளர் இந்த முன்னெடுப்பில் இணைந்ததுடன், இம்முறை ஆஸ்திரேலிய நன்கொடையாளர் சமுதாயம் மத்தியில் குறிப்பிட்டத்தக்க பரப்புரையும் கிடைத்துள்ளது.

வீல்ஸ் போ வீல்ஸ் இற்கு ஆதரவளிப்பதற்கு மெல்பேர்னில் துவிச்சக்கரவண்டிப் பயணம் மற்றும் நன்கொடை இரவுணவு என்பவனவற்றுடன் இந்த வருடம் இலங்கையில் மூன்று நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. சக்கரநாற்காலிகளுக்கு நிதி சேகரிப்பதுடன், மெல்பேர்ண் சி.பி நிதியத்தில் இருந்து தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் அறிவுசார் தகவல் பரிமாற்றத்தைப் பெறுவதுமே நிதியத்தின் இலக்காகும்.

சுற்றுலாத் தலமாக உலகிற்கு இலங்கையின் இயற்கை அழகை வெளிப்படுத்தும் இரண்டு நாள்கள் முகாமிடலும் இந்தப் பத்து நாட்கள் துவிச்சக்கர வண்டிப் பயணத்தில் உள்ளடங்குகின்றது.

பழக்கப்படாத கரையோர வீதியின் ஊடாக 112 கி.மீ தூரமான நிகழ்வில் 20 சர்வதேச பங்குபற்றுனர்களும், 50 உள்ளூர் பங்குபற்றுனர்களும் கலந்து கொள்வது, இந்த ஆண்டின் எறவுண்ட் த பேள் நிகழ்வின் புதிய



நிகழ்ச்சியாக உள்ளது.

முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் இந்த துவிச்சக்கர வண்டிப் பயணம் அமையவுள்ளது. கொழும்பிலிருந்து காலி வரை, நீர்கொழும்பு, மிரிஸ்ஸ, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், சிலாபம் மற்றும் அதனுபான வீதிகளை உள்ளடக்கி இந்தப் பயணம் அமைந்திருக்கும். இந்தப் பயணத்தின் போது, பொது மக்கள் துவிச்சக்கர வண்டி சாரதிகளுடன் இணைய முடியும் என்ற இணையத்தளத்தில் பிரவேசித்து தமது நன்கொடைகளை வழங்க முடியும். (தி)

வணிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தியா

தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறி விக்கும் வாராந்த ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப்பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், மாணவி வித்தியா படுகொலை தொடர்பிலான வழக்கு விசாரணைகள் தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கின்றன.

இந்த நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கையை முன்னெடுப்பதற்காக மூவர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணை நடத்துவதற்குச் சட்டமா அதிபர் திணைக்களம் பிரதம நீதியரசரிடம் வேண்டுகோள் விடுக்கும்.

இதனைச் செய்வதாகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னரும் வாக்குறுதி அளித்திருந்தார். இது தொடர்பான நடவடிக்கைககள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வழக்கின் தன்மை மற்றும் பாரதூரத்தை வைத்து, பிரதம நீதியரசரிடம் வேண்டு கோள் முன்வைப்பதற்கான கடப்பாடு சட்டமா அதிபருக்கு உள்ளது. எனினும் இதற்கான நியமனங்கள் மற்றும் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் பிரதம நீதியரசருக்கே உள்ளது -என்றார். (த-4)

## தேசியப்

கேற்புடன் பொங்கல் விழா நடைபெறவுள்ளது. விசேட அம்சமாக , பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் ஹுயோ ஸுவைரும் இந்த நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளார்.

2011 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மகிந்தராஜபக்ச தலைமையில், துரையப்பா விளையாட்டரங்கில் தேசிய தைப்பொங்கல் விழா நடைபெற்றிருந்தது. அதன் பின்னர், இந்த ஆண்டு தேசிய தைப்பொங்கல் விழா வீரசிங்கம்மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பிலிருந்துவிசேடவிமானத்தில், பலாலிக்கு வருகை தரும் ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் முதலில், பலாலி இராணுவத் தலைமையகத்தில் இடம்பெறும்சந்திப்பில்பங்குகொள்ளவுள்ளனர். இதன் பின்னர் பலாலி இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் இடம்பெறும் பொங்கல்பூசைவழிபாடுகளில் இவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த நிகழ்வுகள்முடிவடைந்த பின்னர், வீரசிங்கம் மண்டபத்தில் தேசிய தைப்பொங்கல் நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும் தைப்பொங்கல்விழாவுக்கான அழைப்பிதழ் வடமாகாண சபையினருக்கும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கதாகும். (த-5)

## சொந்த

செய்தியில் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-இயற்கைக்கும் இறைவனுக்கும்நன்றிசெலுத்தும்இந்தநாளில்,தமது சொந்த இடங்களிலும் தமது உறவுகளோடும் இந்த தைப்பொங்கல் திருநாளைக் கொண்டாட முடியாத நிலையில் உள்ள எமது மக்களின்நிலைமைவெகு விரைவில்மாறவேண்டும்என்று பிரார்த்திக்கின்றேன். இந்த நாளில் பல்வேறு சமய காரியங்களில் ஈடுபடும் மக்கள் அனைவரும் நலிவடைந்துள்ள எமது இனத்தின் வாழ்வெழுச்சிக்காகவும் வளமான எதிர் காலத்திற்காகவும் பிரார்த்தனைகளில் ஈடுபடவேண்டும் -என்றுள்ளது. (த-5)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி வேலுப்பிள்ளை



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் இல.14 நாயன் மார் வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வேலுப்பிள்ளை அவர்கள் 13.01.2016 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், வேலுப்பிள்ளை - தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சிவபாக்கி யத்தின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, தனேஸ்வரி, காலஞ் சென்ற சிவலிங்கம் மற்றும் மகாலிங்கம், யோகேஸ்வரி, நாகசோதிலிங்கம், இராஜேஸ்வரி (சுவிஸ்), நகுலேஸ்வரி, சாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.01.2016 ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(67889)
(11,15)

தொடர்பு:- 024 568 8149

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் பாலசிங்கம்



கரவெட்டி கிழக்கு, யார்க்கருவைப் பிறப்பிடமாகவும் கரவெட்டிமேற்கு மத்தொனியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பாலசிங்கம் 13.01.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்(V.S மணியம்)- கனகம்மா தம்பதியரின் மூத்தமகனும் காலஞ் சென்றவர்களான பாலகிருஷ்ணன்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் பத்மசிறி (பிரான்ஸ்), மோகனதாஸ் (பிரான்ஸ்), விஜிதா (சுவிஸ்), திருப்பதி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கல்பனா, தர்மினி, இராமலிங்கம் ஆகியோரின் அன்பு மாமானரும் காலஞ் சென்ற சரஸ்வதி மற்றும் செல்வரத்தினம், சிவராசா, ராசநாயகம், மனோகரன், சிவபாக்கியம், மனோன்மணி, மாலோகம், அம்பிகா காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் வசந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சற்குணநாதன் (பிரான்ஸ்), பரமநாதன் (ஓய்வு நிலை கிராம அலுவலர்), லோக நாதன்(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்), செல்வானந்தம்(ஆதிஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சர்மிளா, தமிதா, அகிஸ், ஆரணி, தனுசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (14.01.2016) வியாழக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மத்தொனி, சண்டிக்குளம்,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு:- 077 2670404 ,021 321 6115

## மரண அறிவித்தல்

# மரியாம்பிள்ளை அப்சலோம் முத்துராசா

(4 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை)

மாரீசன்கூடலைப்(இளவாலை) பிறப்பிடமாகவும் பருத்தித்துறை, 4ஆம் குறுக்குத்தெருவை வதிவிடமாகவும் கொண்ட அப்சலோம் முத்துராசா 2016.01.13 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை- அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற சவரிமுத்து -றோசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் அண்மையில் (30.12.2015) காலஞ்சென்ற விக்ரோறியாவின் ஆருயிர்க் கணவரும் தேவசகாயம் (மலேசியா),காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து (மாரீசன்கூடல்), சின்னத்துரை (மாரீசன்கூடல்), கயித்தாம்பிள்ளை (இராம நாதபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான பஸ்ரியாம்பிள்ளை(கொழும்பு), சூசானம்மா(புத்தளம்) ஆகியோரின் உடன் பிறவா சகோதரரும் காலஞ்சென்றவர்களான திவ்வியம்மா(மலேசியா), றோசலின்(மலேசியா), லில்லி மெற்றில்டா (போயிட்டி), கபரியேல்(புத்தளம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் அன்ரன் ரட்ணம்(கொழும்பு), காலஞ்சென்ற கபரியேல் (மலேசியா) ஆகியோரின் சகலனும் புளோறன்ஸ்ராணி(கனடா), மலர்ராணி (கொழும்பு), ஹேபேட்(கனடா), ஜேம்ஸ் (கனடா), சுகிர்தராணி (யாழ்ப்பாணம்), ஜேக்கப்(கனடா), ஜெயராணி(கனடா), புஸ்பராணி(கனடா), கயிற்றஸ் அமல்ராஜ் (அமெரிக்கா), தேவராசா(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இருதயராசா, யோசெப், மேசி, டயனி, காலஞ் சென்ற ஜெறோமியாஸ் மற்றும் அமலி, கிறிஸ்ரி, செபமாலைமுத்து, பிரியா,மரீனா ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற சித்ராணி மற்றும் விஜயா, திவ்வியன் , தர்ஷினி, வினோதினி, ரெட், ரஞ்சித், அஜித், எலோடி, ஒட்றி, ஆன்றிஸ்ரா, செந்தூரன், தேனுகா, டிலான், தினேசியா, ரதிக்கா, றஜீவ், சரோன்றியா, யோயல், யொனதன், யொலின் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (2016.01.16)சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 2.15 மணிக்கு பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பின்னர் புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

4ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

தகவல்:-
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:
மகன்மார்(இலங்கை), 076 9439351
இருதயராசா(மருமகன்- பருத்தித்துறை) 077 631 0018
யோசெப்(கொழும்பு) 077 345 1383,
சுகிர்தராணி(யாழ்ப்பாணம்) 077 162 7545



மண்ணில்
1924.03.24

விண்ணில்
2016.01.13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி. வடக்கு

தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய பொங்கல் விழாவில் பங்கெடுப்பதற்காக யாழ்ப்பாணத்துக்கு இன்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் வருகை தரவுள்ளனர். பலாலி இராணுவத் தலைமையகத்தில் இன்று காலை 9.15 மணிக்கு, ஜனாதிபதி தலைமையில் உயர்மட்டக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இதன்போது இராணுவத் தளபதி மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளும், மீள் குடியேற்ற அமைச்சர் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர். யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளார்.

வலி.வடக்கில் ஒட்டுமொத்தமாக எவ்வளவு காணிகளை விடுவிக்கலாம், அதனை எவ்வாறு படிப்படியாக விடுவிக்கலாம் என்பது தொடர்பில் இன்றைய கலந்துரையாடலில் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் பலாலி விமான நிலையம் தவிர்ந்த ஏனைய காணிகளை முழுமையாக விடுவிப்பதற்குரிய சாத்தியப்பாடுகள் குறித்தும் இன்றைய கூட்டத்தில் ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு-5)

## உறுதியான

வடக்கில், உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள ஆலயத்தில் பொங்கல் விழாவில் பங்கேற்க வருவதை நாம் வரவேற்கின்றோம். காணிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டிருப்பதையும் நாம் கவனத்தில் கொண்டுள்ளோம்.

26 வருடங்களாக எங்களது மக்கள் தங்கள் தாய் நிலத்திலிருந்து பெயர்க்கப்பட்டு அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் தங்களின் சொந்த மண் திரும்பும் நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். தங்கள் வாழ்வு முடிவதற்கு தாய் மண்ணை முத்தமிடுவதற்கு அவர்கள் விரும்புகின்றனர்.

எனவே, பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம் ஆகிய இராணுவ கேந்திர நிலையம் தவிர்ந்த ஏனைய அனைத்து மக்கள் குடியிருப்புக் காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும். அதற்கான தீர்க்கமான - இறுதியான - உறுதியான முடிவை ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து இன்று எடுக்க வேண்டும்.

மக்கள் இன்று பெரிய எதிர்பார்ப்புடன் இருக்கின்றனர். எனவே, அவர்களது குடியிருப்பு நிலங்கள் விடுவிக்கப்படுகின்றன என்ற இனிப்பான செய்தியே, தைப்பொங்கல் பரிசாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் -என்றார். (கு-5)

## ஆயிரத்து

தலைமையில் குவிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய பொங்கல் விழா இன்று பலாலியில் இடம்பெறவுள்ளது. இதில் ஜனாதிபதி, பிரதமர் உட்படப் பல முக்கிய பிரமுகர்கள் பங்கேற்கின்றனர்.

இதனால் குடாநாட்டில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகவும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக நாட்டின் பல பாகங்களிலும் இருந்து மேலதிகமாக ஆயிரத்து 500 பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகள் நேற்றுப் பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்தியில் இடம்பெற்றன.

கடந்த மாதம் நத்தார்ப் பண்டிகைக்காக ஜனாதிபதி யாழ்ப்பாணம் வந்தபோது இவ்வாறான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (கு-101)

## ஐ.நா.

நடைமுறைப்படுத்தும் என்று நம்புவதாக, பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் ஹூயோ ஸூவைர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு மூன்று நாள் பயணமாக ஹூயோ ஸூவைர் நேற்று வருகை தந்துள்ளார். நேற்று முன்தினம் இலங்கைக்குப் புறப்படுவதற்கு முன்னதாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

கடந்த தடவை இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டபோது, குறுகிய காலத்துக்குள் ஐ.நா.வின் தீர்மானங்களை இலங்கை எப்படி நிறைவேற்றப் போகின்றது என்ற சந்தேகம் இருந்தது. ஆனால் இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, எதிர்வரும் ஜூன் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் அமர்வுக்கு முன்னதாக, தீர்மானங்களை இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்தும் என்று நம்புகிறோம்-என்றார்.

தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பிரிட்டன் பிரதமர் 6.6 மில்லியன் பவுண்ட்ஸ் வழங்குவதாக அறிவித்திருந்தார். அதனைப் பெற்று மூன்று வருடங்களில் இலங்கை நன்மை பெற முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (கு-5)

## 93 இந்திய

களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 93 இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு இலங்கை அரசு நேற்றுப் பணித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் வெவ்வேறு நாள்களில் வெவ்வேறு இடங்களில் வைத்து 55 மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களில் 45 மீனவர்களுக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றிலும் 10 பேருக்கு எதிராகப் பருத்தித்துறை நீதிமன்றிலும் வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தன.

அவ்வாறே மன்னாரில் வெவ்வேறு நாள்களில் 18 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். முல்லைத்தீவில் ஏற்கனவே பிடிபட்ட 8 பேரும், திருகோணமலையில் பிடிபட்ட 12 பேருமாக அனைவரையும் விடுதலை செய்யுமாறு இலங்கை அரசு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளது.

இதன்படி தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய மீனவர்களை விடுதலை செய்யும் நடவடிக்கையில் திணைக்கள அதிகாரிகள் நேற்று இரவிரவாக ஈடுபட்டிருந்தனர். மன்னாரில் பிடிபட்டவர்கள் வவுனியா மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விடுதலை செய்வது நேற்றுச் சாத்தியமாகவில்லை. இதனால் அவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை விடுதலை செய்யப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-4-101)

## மன்னார்

பரிபாலகராக திருகோணமலை மறைமாவட்டத்தின் இளைப்பாறிய ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் இதனைத் தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய அப்போஸ்தலிக்க பரிபாலகர் நியமனம் தொடர்பாக நேற்று வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் மன்னார் ஆயர் இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருச்சபைச் சட்ட எண் 401 பகுதி 1 இக்கு அமைவாக மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகையின் பதவி துறப்பைப் பாப்பரசர் பிரான்சிஸ் ஏற்றுக்கொண்டுள்ளார் என்பதை இலங்கைக்கான அப்போஸ்தலிக்க தூதுவர் அறிவித்துள்ளார்.

அந்த வகையில் மன்னார் மறைமாவட்டத்துக்குப் புதிய ஆயர் நியமிக்கப்பட்டுப் பொறுப்பை ஏற்கும் வரை பாப்பரசர் பிரான்சிஸ் திருகோணமலை மறைமாவட்டத்தின் இளைப்பாறிய ஆயர் மேதகு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையை மன்னார் மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பரிபாலகராக நியமித்துள்ளார்.

இந்த நியமனம் நேற்று வியாழக்கிழமை மாலை 4.30 மணியில் இருந்து நடைமுறைக்கு வரும்-என்றார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது மன்னார் மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்கபரிபாலகரின் செயலாளர் அருட்தந்தை முரளிதரன், மறைமாவட்ட நிதிப் பொறுப்பாளர் அருட்தந்தை இராஜநாயகம், மறைமாவட்டத்தின் ஊடக இணைப்பாளர் அருட்தந்தை தமிழ் நேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (கு-56)

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை குணராசா



சாவகச்சேரி சப்பச்சிமாவடியைப் பிறப்பிடமாகவும் கச்சாய் வீதியை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை குணராசா நேற்று (14.01.2016) வியாழக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-குணரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஸ்ரீபாஸ்கரியின் அன்புக்கணவரும் அகல்யனின் பாச மிகு தந்தையும் ஸ்ரீபாஸ்கரன், நந்த கோபன், நந்தரூபி, அனுஷா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சப்பச்சிமாவடி, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

தகவல்:-
கு. அகல்யன்(மகன்)

தொ.பே:- 077 463 9187

### காண்டீபன் வசிதா (விஜி)

பிறப்பு: 20.01.1983 இறப்பு: 14.01.2016



நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட காண்டீபன் வசிதா (விஜி) நேற்று (14.01.2016) வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் தனபாலசிங்கம்-சாந்தாராணி தம்பதியரின் மகளும், தவராசா காலஞ்சென்ற சந்திரா தம்பதியரின் மருமகளும், காண்டீபனின் பாசமிகு மனைவியும், கவினையா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி 2ஆம் வகுப்பு மாணவி), றம்சான் ஆகியோரின் அன்புத் தாயும், பவிதா (ஆசிரியர்- பூநகரி மகா வித்தி யாலயம்)-குணசேகரம், கபில்தேவ், கபில்ராஜ், கபில் பிரசாத் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரபாகரன் (மதன்)-மோகனமாலா, கவிதா-சாந்தகுமார், மிகிந்தா- கமல்ராஜ், பிரதீபன்-சுதாஜினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாரதி லேன்,
நாயன்மார்க்கட்டு.

தகவல்:
காண்டீபன் (கணவர்)
தவாஸ் அன் சன்
077 1387 651

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 12 . 1953



இறப்பு 14 . 01 . 2016

### ஜோசப் பீற்றர் ஜேசுராஜன்

(ஓய்வுபெற்ற தேசிய சேமிப்பு வங்கி உதவி முகாமையாளர்)

மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப் பீற்றர் ஜேசுராஜன் 14.01.2016 (வியாழக்கிழமை) கர்த்தருக்குள் நித்திரையானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் பீற்றர் - மேரிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும் மனோரஞ்சிதமலரின் அன்புக் கணவரும் ஜொபிற்றா மேசி (லண்டன்), ஜஸ்ரின் ஜெயந்தன் (கனடா), யூட்ஜீவன் (RDA), ஜெராட்ஜோன்சன்(NSB), ஜேம்ஸ்யூலியன் (RAM Construction), ஜெனிஜெரோம் (Manorajan Construction) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருபானந்தன் (லண்டன்), ஜெனந்தி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஞ்சனன் (லண்டன்), அகல்யன் (லண்டன்), அஞ்சயன்(லண்டன்), அனஞ்சா (சக்தி-கனடா) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 17.01.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மட்டுவில் வடக்கு லூத்துமாதா தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் பிற்பகல் 01.00 மணியளவில் மட்டுவில் வடக்கு லூத்துமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தகவல்:-
குடும்பத்தினர்.

077 1727 650, 077 1930 443(யூட்), 077 9638 342 (ஜெராட்),
077 2479 796(யூலி), 077 0535 389( ஜோய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக முகாம்களிலிருந்து 41 அகதிகள் நாடு திரும்புவர்

## மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் தகவல்

கொழும்பு, ஜன.15
தமிழ்நாடு முகாம்களில் தங்கியுள்ள 41 இலங்கை அகதிகள் அடுத்த வாரம் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர் என. மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் அமைச்சர் வே.சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் ஏற்பாட்டில் 41 இலங்கை அகதிகள் தமிழ் நாடு முகாம்களிலிருந்து எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு வருகைதரவுள்ளனர்.

இவ்வாறு நாடு திரும்பும் அகதிகள், மதுரையிலிருந்து மிகின் லங்கா விமான சேவை ஊடாக, மு.ப10.25மணிக்கு புறப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

குறித்த பயணத்திற்காக அவர்களுக்கு இலவசமாக விமானப் பயணச்சீட்டு அகதிகளுக்கான ஐ.நா தூதரகத்தினால் வழங்கப்படும்.

மேலும், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சுவாமிநாதனின் முயற்சியால் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சும் இலங்கை விமானசேவை நிறுவனமும் அவர்களது பயணப் பொதியின் அளவை 40 கிலோ கிராமிலிருந்து 60 கிலோகிராமுக்கு அதிகரித்துள்ளது.

குறித்த அகதிகள் 41 பேரில் 15 ஆண்களும் 26 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவ்வாறு வருகை தருபவர்கள் அவர்களின் சொந்த மாவட்டங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் மீள்குடியமர்த்தப்படுவர்.

அத்துடன், மீள் சமூக ஒருங்கிணைப்பிற்கான நன்கொடையாக ஒவ்வொருவருக்கும் 75 அமெரிக்க டொலர்களும், போக்குவரத்து நன்கொடையாக ஒவ்வொருவருக்கும் 19 அமெரிக்க டொலர்களும்,உணவு அல்லாத பண நன்கொடையாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் 75 அமெரிக்க டொலர்களும் வழங்கப்படுகின்றன.

கடந்த ஆண்டு மொத்தமாக 429 அகதிகள் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகைதந்துள்ளனர்.மேலும் 64,000 பேர் இந்தியாவிலுள்ள 109 முகாம்களில் இருக்கின்றனர். மொத்தமாக ஒரு இலட்சத்திற் கும்அதிகமான இலங்கை அகதிகள் இந்தியாவில் இருப்பதாகவும் அறியப்பட்டுள்ளது.

மீள்குடியமர்த்தப்படும் மக்களுக்கு வாழ்வாதார நடவடிக்கைகளைமேற்கொள்வதற்குத்தேவையான நிதி உதவிகளை வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை மீள்குடியேற்ற அமைச்சர் எம்.சுவாமிநாதன் சமர்ப்பித்திருந்தார். தற்பொழுது தேசிய திட்டமிடல் திணைக்களத் திடம் விரிவான கருத்திட்ட முன்மொழிவுடன் அவை வழங்கப்பட்டுள்ளன.

மேலும் மீள்குடியமரும் மக்களுக்கு 6 மாதகாலத்திற்கு உலர் உணவுகளை வழங்குவதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த அமைச்சானது, வீடுகள் மற்றும் தமது உறவினர்களை இழந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் நட்டஈட்டுகளை வழங்குமாறு, ஆட்களையும் ஆதனங்களையும்கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபைக்கு அறிவுரைகளை வழங்கியுள்ளது.

வீடுகளை இழந்தவர்களுக்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் 65,000 வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், இந்தியாவிலிருந்து கட்டம் கட்டமாக சுயவிருப்பில் இலங்கைக்கு அகதிகளை அழைக்கும் நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்துள்ளதுடன் ,அதிகரித்த அகதிகளின் வருகையானது நிரந்தர சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கான சமிக்ஞையாகக் காணப்படுவதாக அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(த-வ-5)

### நிதி மோசடிகள் குறித்த விசாரணைக்கு அமெரிக்கா உதவி

நிதி மோசடிகள் குறித்த விசாரணைகளுக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்கி வருவதாக, இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் மத்திய வங்கி இவ்வாறு நிதி மோசடிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் அமெரிக்க வங்கிகளில் பணத்தைப் பதுக்கி வைத்துள்ள இலங்கையர்கள் பற்றிய விவரங்களை வெளியிட கால அவகாசம் தேவைப்படுவதாக அமெரிக்க மத்திய வங்கி அறிவித்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

(வ)


## சேவை நலன் பாராட்டு



திரு.கதிரித்தம்பி கதிரேசபிள்ளை
உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்)
எமது கல்வி வலயத்தில் ஆங்கில பாட உதவிக்கல்விப் பணிப்பாளராகக் கடமை உணர்வுடனும் பக்தி சிரத்தையுடனும் தமது பணியைச் செவ்வனே செய்து மொத்த சேவைக்காலம் 33 வருடங்கள் நிறைவுடன் 15.01.2016 இன்று அகவை அறுபதினைப் பூர்த்தி செய்து ஓய்வுபெற்றுச் செல்லும் திரு.கதிரித்தம்பி கதிரேசபிள்ளை அவர்களை ஓய்வுக்காலத்தில் தனது குடும்பத்துடன் குதூகலமாகவும் சுகபலத்துடனும் வாழ இறைவனைப் பிரார்த்தித்து மனதார வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
நலன்புரிக் கழகம்,
வலயக்கல்வி அலுவலகம்,
தீவகம், வேலணை.

இனிதாய் பொங்கட்டும் இன்பப் பொங்கல்

வவுனியா வடக்கு, தெற்கு கல்வி அலுவலகங்கள் இணைந்து நடத்தும்

## பொங்கல் விழா அழைப்பு - 2016

இடம் :- வித்தியா விநாயகர் ஆலய முன்றல் வ/தமிழ் மத்திய மகாவித்தியாலயம்
காலம்:- இன்று 15.01.2016 வெள்ளிக்கிழமை
நேரம் :- மு.ப 10.30
தலைமை :- திருமதி. செ.அன்ரன் சோமராஜா - வலயக்கல்விப் பணிப்பாளர் - வவுனியா தெற்கு.
பிரதம அதிதி :- திரு.P.T.தர்மேந்திரா -செயலாளர் நகரசபை - வவுனியா.

அனைவரையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்
வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா தெற்கு மற்றும் வவுனியா வடக்கு.

## உடனடி வேலைவாய்ப்பு



ஆங்கிலப்புலமையுடன் பெண் வரவேற்பாளர் தேவை
தொடர்புகளுக்கு:
076 - 8937080 ib@ibceylon.com

## ஆங்கில ஆசிரியர் தேவை

உரும்பிராயில் பிள்ளைகளுக்கு ஆங்கிலம் கற்பிப்பதற்கு அனுபவமும். பிள்ளைகளுடன் நட்புறவாக பழகி அவர்களை ஊக்கப்படுத்துவதில் தேர்ச்சியுமுடைய ஆங்கில ஆசிரியர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் தங்களது விவரங்களை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
விளம்பர இல. 5084
மே/பா உதயன்பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்குவிடப்படும்

கணேசபுரம், கிளிநொச்சியில் விநாயகர் ஆலய முன்பாக 3 அறைகளும், ஒரு சமையல் அறை, தண்ணீர் வசதிகள், பயன்தரும் மரங்கள் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும்
உத்தேச வாடகை - 8000/-
தொடர்புகளுக்கு: 071 2541 116
075 2747 558

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1228
சீட்டிழுப்பு திகதி 2016.01.14
வெற்றி இலக்கங்கள்
15 46 50 62 H
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 10,299,020/=

## SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 448
சீட்டிழுப்பு திகதி 2016.01.14
வெற்றி இலக்கங்கள்
21 26 30 46 X
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 45,299,320/=

## துன்பம் நீக்கும் கலியுக தெய்வம் நாகபூசணி அம்மன்



வெள்ளவத்தையில் பெர்னாந்து வீதியில் அமைந்துள்ள நாகபூசணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞான கணேஸ்வரி அம்மன் அவர்கள் சனிக்கிழமையில் இருந்து திங்கட்கிழமை வரை (16, 17, 18 ) ஆம் திகதிகளில் ஞானவைரவர் ஆலயம் கலாசாலை வீதி. 2 ஆவது ஒழுங்கை. திருநெல்வேலி வடக்கு. யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறுவார்.
பூசை நேரம்:
முற்பகல் 10.30 - 12.30 மணிவரை
மாலை 5.30 - 6.30 மணிவரை
குறிப்பு: கலாசார உடையுடன் வருகை தரவும்.
தொடர்பு: 021 221 9127, 077 801 2226


## வலிகாமம் தெற்கு பிரதேசசபை
சுன்னாகம்.
2016ஆம் ஆண்டுக்கான
பகிரங்க கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இறைச்சிக்கடைகள், பொது மலகூடம், என்பவற்றை 01.02.2016-31.12.2016ஆம் திகதிவரை குத்தகைக்கு வழங்குவதற்காக பகிரங்க ஏலத்தில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் கேள்வி வைப்புப் பணத்தினை செலுத்திப் பற்றுச்சீட்டை 16.01.2016 தொடக்கம் 22.01.2016 காலை 9.30 மணி வரை பெற்றுக்கொள்ளவும்.

| தொ இ | விவரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | |
| 1 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை -01 | 1000.00 | 10000.00 | 250.00 |
| 2 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 750.00 | 7500.00 | 250.00 |
| 3 | கோழிக்கடை இல 07 | 750.00 | 7500.00 | 250.00 |
| | உடுவில் உப அலுவலகம் | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம் | 500.00 | 5000.00 | |

1. காலம் - 22.01.2016 காலை 10.00 மணி
2. இடம் - சுன்னாகம் உப அலுவலகம்

ஏலம் சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

தி.சுதர்சன்
செயலாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வீரர்கள் மீது தீவிர விசாரணை நடத்துமாறு அமைச்சர் தயாசிறி உத்தரவு

## நியூசிலாந்துத் தொடரில் இடம்பெற்ற முறைகேடு மற்றும் போதைப் பயன்பாடுகள் தொடர்பில்

நியூசிலாந்துக்கு எதிரான தொடரின் பொழுது அதிகாலை வேளை வரை இலங்கை வீரர்கள் மதுப் பயன்பாட்டுக்கு உட்பட்டிருந்தமை தொடர்பாகவும் அணிக்குள் ஏற்பட்ட பல்வேறு வாக்குவாதங்கள், பிளவுகள் தொடர்பாகவும் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகரவுக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து வீரர்கள் மீது தீவிர விசாரணை நடத்துமாறு அவர் உத்தரவிட்டுள்ளார்.



நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை அணி டெஸ்ட் தொடரை 0:2 என்ற கணக்கிலும், ஒரு நாள் தொடரை 1:3 என்ற கணக்கிலும், ரி-20 தொடரை 0:2 என்ற கணக்கிலும் இழந்தது. நியூசிலாந்து பயணத்தில் இலங்கை அணி தோல்வியை தழுவியதோடு வீரர்கள் ஒழுக்கமின்மையோடு நடந்து கொண்ட தகவல் வெளியாகி உள்ளது. இலங்கை வீரர்கள் மதுபான விருந்துகளில் பங்கேற்று அதிகாலை வரை இருந்துள்ளனர். மேலும் அணிக்குள் பல்வேறு பிளவுகளும் ஏற்பட்டு உள்ளன. நியூசிலாந்து பயணத்தில் இலங்கை வீரர்களின் தவறான நடத்தையால் விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகர அதிர்ச்சி அடைந்துள்ளார். இதைத் தொடர்ந்து இலங்கை வீரர்களின் ஒழுக்கம் குறித்து விசாரணைக்கு அவர் உத்தரவிட்டுள்ளார். இரவு நேரங்களில் வீரர்கள் மதுபான விருந்தில் பங்கேற்ற புகைப்படங்கள் அவரிடம் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒழுக்கக்கேடுகள் நடைபெற்றமையை ஏற்றுக்கொண்ட தலைவர் மத்தியூஸ், குறித்த வீரர்களின் மீது கருணை காட்டப்படமாட்டாது என்றும் தெரிவித்துள்ளார். (ம)



## பதவி நீக்கப்பட்டார் ஜெரோம்

சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் (பீபா) செயலாளர் ஜெரோம் வால்கி, அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக அச்சம்மேளனம் அறிவித்துள்ளது.

பீபாவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் தொடர்பான குற்றச்சாட்டுகளின் ஓர் அங்கமாகவே, இந்நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. இடம்பெற்ற மோசடிகளில் அவருக்குக் காணப்பட்டதாகக் கூறப்படும் தொடர்பு காரணமாக தற்காலிகத் தடைக்கு அவர் உள்ளாகியிருந்த நிலையிலேயே அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். பல்வேறான குற்றச்சாட்டுகள் அவர் மீது காணப்படுகின்ற போதிலும், உலகக் கிண்ணத் தொடர்களுக்கான நுழைவுச்சீட்டுகளை கறுப்புச் சந்தையில் விற்பனை செய்ததில் காணப்பட்டதாகக் கூறப்படும் தொடர்பு முக்கியம் பெறுகிறது. வால்கி, கடந்தாண்டு செப்ரெம்பர் 17ஆம் திகதியிலிருந்து தற்காலிகத் தடைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார். ஆனால், நேற்று முன்தினம் கூடிய சம்மேளனத்தின் அவசர செயற்குழு, பீபாவிலிருந்து அவரை நீக்கும் முடிவை எடுத்தது. சம்மேளனத்தின் தலைவர் செப் பிளாட்டர், உப தலைவர் மைக்கல் பிளாட்டினி ஆகியோருக்கு, தலா 8 வருடத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



# டயமன்ஸ் அணி இறுதியில்

யாழ்ப்பாணம், ஜன. 15

பலம்பொருந்திய பொம்மர்ஸ் அணியை எளிதில் வீழ்த்தி இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம்.

சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான 7 வீரர்கள் பங்குபற்றும் இந்தத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இதில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன. முதல் பாதியில் 3:1 என்று முன்னிலை வகித்த டயமன்ஸ், இரண்டாம் பாதியிலும் தனது ஆதிக்கத்தை நிலைப்படுத்தி முடிவில் 5:1 என்று வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம-108)

## இறுதியில் யங்ஹென்றிஸ்

வலி. வடக்கு, ஜன. 15

வட மாகாண உடற்கல்வி ஆசிரியர் சங்கம் யாழ். மாவட்ட உதைபந்தாட்ட லீக்குகளின் அணிகளுக்கு இடையே நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரில் யங்ஹென்றிஸ் அணி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் நடைபெற்ற இந்த அரையிறுதி ஆட்டத்தில் வடமராட்சி கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

முதல்பாதியின் முடிவில் யங்ஹென்றிஸ் 3:2 என்று முன்னிலை வகித்தது. இரண் டாம் பாதியில் யங்ஹென்றிஸால் மேலும் மூன்று கோல்கள் பதியப்பட, முடிவில் 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-86-23)

# 19 வயதுக்குட்பட்ட இந்திய அணியின் தலைவர் கைது

19 வயதுக்குட்பட்ட இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் கிசான் பாட்னா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

17 வயதான கிசான், தனது தந்தையின் காரை ஓட்டிச் சென்ற போது ஒரு ரிக்சா மீது மோதியுள்ளார். இந்த விபத்தில் ரிக்சாவில் இருந்தவர்கள் படுகாயமடைந்தனர். மேலும், கிசான் அவர்களுடன் மிகவும் மோசமாக நடந்து கொண்டதாகவும், சிலரை தாக்கியதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனால் பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர்.

19வயதுக்கு உட்பட்டவர்களுக்கான உலகக்கிண்ணத் தொடர் எதிர்வரும் 22ஆம் திகதி பங்களாதேஷில் நடைபெறவுள்ளது. இந்த நிலையில் இந்திய அணியின் தலைவர் [illegible] யப்பட்டிருப்பது அந்த [illegible] யுள்ளது. (ம)






## சிம்பாப்வே - பங்களாதேஷ் முதல் ரி-20 ஆட்டம் இன்று

சிம்பாப்வே- பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை நேரப்படி பிற்பகல் 2.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறும். இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 17ஆம் திகதியும் மூன்றாவது ஆட்டம் 20ஆம் திகதியும் நான்காவது ஆட்டம் 22ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. (ம)

## லயன் அணிக்கு வெற்றி

யாழ்ப்பணம், ஜன. 15

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட் லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் யங்ஸ்ரார் 'சி' அணியை எதிர்த்து லயன் அணி மோதிக் கொண்டது. இதில் லயன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொங்கல் விழா

யாழ்ப்பாணம். ஜன.15
கைதடி சிறி மகா விஷ்ணு விளையாட்டுக்கழகம் பொங்கலை முன்னிட்டு நடத்தும் பொங்கல் தின விழா. இன்று காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ளது.
கைதடி நாவற்குழிக் கிராமக் கடற்கரை மைதானத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கயன் இராமநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (ம)



சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவர்களின் வருடாந்த மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு வீதியோட்ட நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. (ம- 86)

## கால்பந்தாட்டத் தொடர்

உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் மறைந்த முன்னாள் ஆசிரியை திருமதி அமலவதி சந்திரகாந்தன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக வருடாந்தம் நடத்தும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் 19 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 1ஆம், 2ஆம், 3ஆம் திகதிகளில் உருத்திரபுரம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.
மேற் படி தொடரில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் உருத்திரபுரம் மகா வித்தியாலய அதிபருடன் தொடர்பு கொண்டு தங்களது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-23)

# சென்.ஹென்றிஸ் – நெல்லியடி மத்தி. இறுதி ஆட்டத்தில் இன்று பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன. 15
யாழ்ப்பாண பாடசாலைகளின் விளையாட்டுச்சங்கம் நடத்தும் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டமும் மற்றும் மூன்றாம் இடத்திற்கான ஆட்டமும் இன்று வெள்ளிக்கிழமை இளவாலை சென். ஹென்றிஸ் மைதானத்தில் இடம் பெறவுள்ளன.
மாலை 5மணிக்கு இடம்பெறும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து புங்குடுதீவு மகா வித்தியாலய அணி மோதவுள்ளது.
மாலை 6.30 மணிக்கு மின்னொளியில் இடம்பெறும் இறுதியாட்டத்தில் இளவாலை சென்.ஹென்றிஸ் அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபரும் யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் தலைவருமான எஸ்.எழில்வேந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி, பண்பாட்டு அலுவலகள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசா, சிறப்பு விருந்தினராக ஐக்கிய அரபு இராச்சியத்தின் யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தலைவர் எஸ்.சற்குணசீலன், வட மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சத்தியபாலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-23-86)



சென்.ஹென்றிஸ்



நெல்லியடி மத்திய கல்லூரி

## பயிற்றுநர்களுக்கான விண்ணப்பங்கள்

வலி. வடக்கு, ஜன.15
தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் நடப்பு வருடத்துக்கான ஆசிய வலைப்பந்தாட்டத் தொடரில் பங்குபெறவிருக்கும் இலங்கை வலைப்பந்தாட்ட அணிக்கான பயிற்றுநரையும் உதவிப்பயிற்றுநரையும் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
குறித்த பதவிக்கு விண்ணப்பிக்க விரும்பும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பயிற்றுநர்கள் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்துடன் இந்த மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளும்படி யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் எஸ்.சுரேந்தினி அறிவித்துள்ளார். (ம-86)

# அராலி மாவத்தையில் பொங்கல் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜன. 15
அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் உழவர் திரு விழாவை முன்னிட்டு நடத்தும் விளையாட்டுப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன.
இதில் இருபாலாருக்குமான கயிறிழுத்தல் போட்டி, ஆண்களுக்கான சைக்கள் ஓட்டப் போட்டி, வயோதிபர்களுக்கான வேகநடைப் போட்டி, மாட்டுச் சவாரி போன்ற பல நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. தொடர்ந்து மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் அணிக்கும் அராலி மாவத்தை அணிக்குமான நட்பு ரீதியிலான கால்பந்தாட்டம் இடம் பெறும். அதனைத் தொடர்ந்து உழவர் திரு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இடம்பெறும் இதில் அராலி ஏ.எல். அணியை எதிர்த்து துணைவி நியூஸ்ரார் அணி மோதவுள்ளது. (ம-23)

# சைக்கிள் ஓட்டப்போட்டி



யாழ்ப்பாணம், ஜன. 15
பண்டத்தரிப்பு எம்.ஜி.ஆர். கழகத்தின் ஏற்பாட்டில் ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி நடைபெறவுள்ளது.
எம்.ஜி.ஆரின் 99ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6மணிக்கு பண்டத்தரிப்பு சந்தியில் ஆரம்பமாகவுள்ள, மேற்படி சைக்கிள் ஓட்டப்போட்டியில் பங்குபெற விரும்பும் குடாநாட்டு விளையாட்டு வீரர்கள் தமது பதிவுகளை ஏற்பாட்டுக்குழுவினரிடம் மேற்கொள்ளுமாறு பண்டத்தரிப்பு எம்.ஜி.ஆர். கழகத்தின் தலைவர் அ.செல்வச்சந்திரன் தெரிவித்துள்ளார். (ம-ரி5)

## தேசிய வலைப்பந்தாட்ட அணி தெரிவு

யாழ்ப்பாணம், ஜன. 15
தாய்லாந்தில் நடைபெறவுள்ள ஆசிய வலைப்பந்தாட்டத் தொடரில் பங்குபற்றவுள்ள இலங்கை வலைப்பந்தாட்ட அணியைத் தெரிவு செய்வதற்கான வலைப்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் 24 ஆம் திகதி கொழும்பு டொறிங்டன் விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது. இந்தத் தொடரில் பங்குபற்ற விரும்பும் 18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வீராங்கனைகள் யாழ்.மாவட்ட வலைப்பந் தாட்டச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (ம-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியா-ஆஸ்திரேலியா இரண்டாவது ஆட்டம் இன்று





இந்தியா-ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.
பிரிஸ்பெயின் மைதானத்தில் நடைபெறவுள்ள இந்த ஆட்டம் இலங்கை, இந்திய நேரப்படி காலை 8.50 மணிக்கு நடைபெறும். முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றுள்ள நிலையில் பதட்டத்தையும் நெருக்கடிகளையும் குறைக்க வேண்டுமாயின் இன்றைய ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெறவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. மாறாக தோல்வியடைந்தால் தொடரைக் கைப்பற்ற வேண்டுமாயின் இறுதி மூன்று ஆட்டங்களிலும் தொடர்ச்சியாக வெற்றிபெற வேண்டிய நிலைமை இந்தியாவுக்கு ஏற்படும். (ம)

## வீதியோட்ட நிகழ்வு

வவுனியா, ஜன. 15
வவுனியா இந்துக்கல்லூரியின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வீதி ஓட்டப் போட்டியொன்று நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.
வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் இருந்து பதிவுசெய்துள்ள இருபாலாரும் போட்டிக்காக காலை 6 மணியளவில் வவுனியா இந்துக்கல் லூரிக்கு வருகை தருமாறு ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர்.
(ம-422)

# பாக்.-நியூசிலாந்து முதல் ரி-20 இன்று



பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 3 ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் இன்று ஆரம்பமாகிறது.
நியூசிலாந்தின் ஈடன் பார்க் மைதானத்தில் நடைபெறவுள்ள இந்த ஆட்டத்தின் முடிவு நியூசிலாந்துக்கு சாதகமாக அமையும் என்று எதிர்வுகூறப்படுகின்ற போதிலும், ஆமிர் மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளமை பாகிஸ்தானுக்கு பெரும் பலமாகச் சொல்லப்படுகிறது. ஆமிர், ரியாஸ் இணை வேகப்பந்து வீச்சில் மிரட்டும் பட்சத்தில் நியூசிலாந்துக்கு பலமான அடி விழுவதென்பதில் சந்தேகமில்லை. (ம)

# தோல்வியடைந்தால் சதத்துக்கு மதிப்பில்லை என்கிறார் ரோகித்




தோல்வியடைந்தால், தோல்வியடையும் அணி சார்பாக பெறப்படும் சதம் தனது மரியாதையை இழக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார் இந்திய அணியின் ஆரம்ப வீரரான ரோகித் சர்மா.
ஆஸ்திரேலியா - இந்தியா அணிகளுக்கு இடையில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 5 இலக்குகள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தியது. ரோகித் சர்மா 163 பந்துகளில் 13 பவுண்டரி, 7 சிக்சருடன் 171 ஓட்டங்கள் விளாசி கடைசி வரை களத்தில் இருந்தார். ரோகித் சர்மா ஒருவகையில் அதிஸ்டமற்றவர் எனலாம். அவர் பதிவுசெய்த கடைசி 3 சதங்களிலும் இந்திய அணி தோல்வியையே சந்தித்திருக்கிறது.
இந்த நிலையில் ரோகித்சர்மா தனது நேர்காணலில் தெரிவிக்கையில் - எனது இன்னிங்ஸ் சிறப்பானதாகும். எப்பொழுதும் ஒரு தொடரை நம்பிக்கையான, நல்ல அறிகுறியுடன் தொடங்கவேண்டியது முக்கிய மானதாகும். முடிவில் எமது அணி வெற்றி பெறாமல் போனது மிகுந்த ஏமாற்றம் அளித்தது. ஒரு ஆட்டத்தில் உங்களது அணி வெற்றிபெறாத பட்சத்தில் அதில் நீங்கள் எவ்வளவு ஓட்டங்களைக் குவித்தாலும் அதற்கு மதிப்பு கிடையாது. அணிக்காக மிகப்பெரிய சதங்களை அடிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். எந்தவொரு ஆட்டத்திலும் தொடக்கத்தில் ஆடுகளத்தின் தன்மை, சூழலை அறிந்து கொண்டு அதன் பிறகு வேகமாக ஆடுகிறேன். என்றார். (ம)

# நெய்மருக்குச் சிக்கல்

பணமோசடி காரணமாக நெய்மர் மீது தொடரப்பட்ட வழக்கில் அவர் நீதிமன்றில் முன்னிலையாக வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.
பிரேசில் அணியின் முன்னணி வீரரான நெய்மர், கடந்த 2013ஆம் ஆண்டு பார்சிலோனா கழகத்துக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டார். இதற்கு வழங்கப்பட்ட பணத்தில் மோசடி நடந்ததாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பான வழக்கு ஸ்பெயின் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கில் பெப்ரவரி 2ஆம் திகதி நெய்மர் மற்றும் அவரது பெற்றோர் நேரில் முன்னிலையாக வேண்டும் என்று மன்று உத்தரவிட்டுள்ளது. (ம)

VACANCY
TRAINEE ACCOUNTS CLERK
A Reputed Company Looking for Trainee Accounts Clerk in Jaffna.
He/She Should be:
- Passed G.C.E A/L in Commerce Stream
OR
- Part Qualified in AAT
- Basic Computer Knowledge
(Ms Office, Quick Book Would be Advantage)
Salary:
Initial Payment 7500/= Per Month After 03 Months 10,000/= Will be Paid Depending on the Performances
Apply To:
Accounting Systems & Managment Consultants
Management Tax Consultants (Pvt) Ltd.
245,Kasthuriyar Road, Jaffna. T.P: 077 3946341

போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்
SLEAS
பிரதி ஞாயிறு
9.30 - 3.30 மணிவரை
SLAS
பிரதி ஞாயிறு
9.00 - 4.00 மணிவரை
சட்டமாணி தெரிவு
சனி 1.00 மணி
ஞாயிறு 11.00 மணி
அலுவலக பணியாளர்
பிரதி ஞாயிறு
11.00 - 4.30 மணிவரை
வங்கி பரீட்சைகள்
சனி
12.00 மணி
T.P : 076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ் ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கியருகில்)

விசேட வழிகாட்டல் வகுப்புக்கள்
SLAS
பிரதி
சனி 9.00 - 1.00
SLEAS
Open/Limited
பிரதி
சனி 9.00 - 1.000
விரிவுரையாளர்
P. உமாசங்கர்
P. கமல்தாசன்
மற்றும் துறைசார் விரிவுரையாளர்கள்
கடந்தகால மற்றும் முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்கள், மாதிரிப் பரீட்சையுடன் விரிவாக ஆராயப்படும்.
ஆரம்பம்
16.01.2016
சனி 9.00
நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்நகர்
T.P : 077 4696 695

தேவை
பால் கறக்கும் இயந்திரம், குளிரூட்டி (Cooler) என்பனவும் தேவை.
தொடர்பு: 071 6547 086

அனைவருக்கும் எமது இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

உயர்வகை பல் வைத்திய சேவைக்கு...
For Quality, Professional Dental Care
INTERNATIONAL DENTAL CARE
IDC
INTERNATIONAL DENTAL CARE HOSPITALS (PVT) LTD.
Jaffna Branch:
No:84, Stanly Road, (Near Ariyakulam Junction)
Jaffna. Srilanka.
Tel: 021 222 0833, 021 492 3353
Colombo Branch:
No:67, W.A.Silva Mw, Wellawatta,
Colombo-06, Srilanka.
Tel: 011 250 7070, 011 438 0803
Vavuniya Branch: Raaj Medical Lab,
No:10, Bazaar Street,
Vavuniya, Srilanka.
Tel: 024 222 1577, 024 492 5527
Web: www.internationaldentalsrilanka.com Email: internationaldentalcare@gmail.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.